ப்க்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை (12.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:137

# இந்திய வெளியுறவுச் செயலாளரை கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பர்

## முந்திய முடிவில் மாற்றம்; புதன், வியாழனில் பேச்சு

கொழும்பு, ஏப்ரல் 12

**இலங்கை நிலைவரம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனனை சந்திக்குமாறு, தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுப் பேசுவதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடிவு செய்துள்ளனர்.**

வன்னியில் மக்கள் படும் அவலங்களுக்கு முடிவு கட்டக்கூடிய விதத்தில் போர் நிறுத்தம் கொண்டுவர இந்தியா ஏற்பாடு செய்யும் பட்சத்திலேயே அந்நாட்டின் வெளியுறவுச் செயலருடன் பேச முடியும் என்று முன்னர் மேற்கொண்ட முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது மாற்றியுள்ளது.

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தெரிவித்த ஆலோசனையை ஏற்றே, பேச்சு நடத்துவது என்ற முடிவுக்கு வந்திருப்பதாக தமிழர் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய வெளியுறவுச் செயலாளரைச் சந்திப்பதில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்த தீர்மானத்தில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று எதிர்வரும் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளது.

இந்திய அரசு தனது வெளியுறவுச் செயலாளர் மூலம் விடுத்திருந்த அழைப்பை நிராகரிப்பது என வியாழக்கிழமை இரவு கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவெடுத்திருந்த போதிலும்(20 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் காங்கேசன் வந்தது

யாழ்ப்பாணம், ஏப்.12

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் பயணிகள் கப்பல், நேற்றுப் பிற்பகல் காங்கேசன்துறையை வந்தடைந்துள்ளது.

எனினும் கப்பல் இன்று திருமலை நோக்கிப் புறப்படுமா என்பது குறித்த தீர்க்கமான முடிவு நேற்றிரவு பத்து மணிவரை மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

காலநிலை சீராக இருக்கும் பட்சத்தில் கப்பல்,இன்று திருமலை நோக்கிப் புறப்படக் கூடும் எனவும் -

(20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேச அமெ. உதவி அமைச்சர் விருப்பம்

### ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு கேட்பதற்காக

வாஷிங்ரன், ஏப்.12

புலிகள் தமது ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைவது தொடர்பில் அவர்களின் தலைவர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான சாத்தியம் குறித்து அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி அமைச்சர் றிச்சார்ட் பௌச்சர் பிரஸ்தாபித்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித ஹோகன்னவை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடிய போதே றிட்சார்ட் பௌச்சர் தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

இலங்கையின் முல்லைத்தீவு வடக்கின் மிகச்சிறிய பகுதியில் சுமார் 500 புலிகள் உள்ளனர். அவர்களால் 30 ஆயிரம் முதல் 60 ஆயிரம் (20 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனில் 1½ லட்சம் தமிழர்கள் திரண்டு இனப்படுகொலையைக் கண்டித்து பெரும் பேரணி

லண்டன், ஏப்.12

அரசாங்கத்தின் இனப்படுகொலையையும் அனைத்துலக சமூகத்தின் பாராமுகத்தையும் கண்டித்து பிரித்தானியாவில் நேற்று மாபெரும் மக்கள் பேரெழுச்சி நடைபெற்றது.

பிரித்தானிய வரலாற்றில் முதன்முறையாக 1 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் அலையெனத் திரண்டு இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டுள்ளனர்.

பிரித்தானியாவில் எம்பார்க்மென்ட் எனும் இடத்தில் நேற்று சனிக்கிழமை பிற்கல் ஒரு மணிக்கு தொடங்கிய இந்தப் பேரணி ஹைட் பார்க் கோனர் என்ற இடத்தினை சென்றடைந்தது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் சில தினங்கள் தொடர்ந்து மழை பெய்யும்!

யாழ்ப்பாணம், ஏப்.12

குடாநாட்டில் கடந்த இரண்டு நாள்களாகப் பெய்துவரும் மழை இன்னும் சில தினங்கள் நீடிக்கும் சாத்தியம் அதிகம் உண்டு என்று திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

இதேவேளை (20 ஆம் பக்கம் பார்க்க)

## மழையின் மத்தியிலும் வன்னியில் தாக்குதல்

கொழும்பு, ஏப்.12

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பகுதியில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழைக்கும் மத்தியில் நேற்று படையினர் நடத்திய ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களில் 32 பேர் பலியாகினர் 75 பேர் படுகாயமடைந்துள்ளனர் - என்று இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன. அவை மேலும் தெரிவித்ததாவது:(20 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி நலன்புரி நிலையங்கள் சில காலநிலை சீர்கேட்டினால் இடம் மாற்றப்படும்

யாழ்ப்பாணம், ஏப்.11

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தென்மராட்சியில் இயங்கும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் சில இடம்மாற்றப்படவுள்ளன. இத்தகவலை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கூறியதாவது:

கைதடி சிறுவர் இல்லம் மற்றும் சித்த மருத்துவ பீடத்தில் இயங்கிய நலன்புரி நிலையங்கள் தற்காலிகமாக நேற்று சாவகச்சேரி இந்துக் (20 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நலன்புரி நிலையங்களுக்குள் வெள்ளம்; பாடசாலை மண்டபங்களுக்கு மாற்றப்பட்டனர்

கொழும்பு, ஏப்.12

வவுனியாவில் கடந்த இரண்டு தினங்களுக்கு மேலாகத் தொடர்ந்து பெய்யும் அடைமழை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள இடைத் தங்கல் நிலையங்களின் கொட்டில்களில் மழைநீர் புகுந்திருப்பதனால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள்.

வவுனியா காமினி மகாவித்தியாலய மைதானத்தில் இருந்த (20 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனில் உண்ணாவிரதம் இருப்பவரில் ஒருவரை ஐ.நா.சபைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு

### அதனால் அவரது போராட்டம் இடைநிறுத்தம்

லண்டன், ஏப்.12

பிரித்தானியாவில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கிய இருவரில் ஒருவர் வெள்ளிக்கிழமை நள்ளிரவு தொடக்கம் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை இடைநிறுத்தியிருப்ப தாகத் (20 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சேவை நலன் பாராட்டு



திரு. முருகேசு தனேஸ்வரன்

(கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்)

இருபத்தொன்பது வருடங்களை
வங்கிக்கென அர்ப்பணித்த
இனிய சேவையாளன் 'தனேஸ்வரனை'
வாழ்த்துகின்றோம் ஓய்வு நாளில்.

12.04.2009 இன்று கடமையிலிருந்து
ஓய்வுபெறும் இவரது பணிகளை
நன்றியுடன் நினைவு கூர்ந்து, ஓய்வுக்காலம்
சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி மேற்றரக்கிளை-மானிப்பாய்
விரிவாக்கற்கிளை-சங்கானை.

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நமஹ

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 | | 13 |
| ★ | | ★ |
| 07 | | 03 |
| ★ | | ★ |
| 1945 | | 2009 |



## அமரர் சிவசுந்தரம் அகிலாண்டேஸ்வரி

கடந்த 13.03.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப குலவிளக்கு அமரர் திருமதி சிவசுந்தரம் அகிலாண்டேஸ்வரி அவர்களின் திடீர் மறைவையொட்டி துடிதுடித்து நிற்கும் எமக்கு நேரடியாக வந்தும், தொலைபேசி மூலமும், தபால் மூலமும் ஆறுதல் கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி.சிவசுந்தரம் (கணவர்),

பிள்ளைகள்:
இ.வளர்மதி(மகள்),
சி.கோமதி(ஜேர்மனி),
சி.செந்தில்குமரன்(மகன்),
யோ.பாமதி(ஆசிரியை),
சி.பூமதி(ஆசிரியை),
அ.அருள்மதி(ஆசிரியை),
உ.கலைமதி(ஆசிரியை),
சி.புகழரசி(மகள்),

மருமக்கள்:
இ.இலங்கேஸ்வரன், இ.கிரிதரன்(ஜேர்மனி),
செ.சிவப்பிரியா(ஆசிரியை),
தி.யோகராஜன்(கிராம உத்தியோகத்தர்),
க.பாலகுமார்(சுவிஸ்) ந.அகிலன்(ஆசிரியர்),
இ.உதயகுமார்,
பேரப்பிள்ளைகளும்.

கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

# மரண அறிவித்தல்

## திருமதி கனகரத்தினம் கனகம்மா

அளவெட்டி வடக்கு, செட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கு இம்புலானையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற கனகரத்தினத்தின் (அராலி) மனைவியும், காலஞ்சென்ற இராசம்மா (மலேசியா), காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் செல்லத்துரை (திருச்சி) ஆகியோரின் சகோதரியும், பத்மநாதன் (UK), பேரின்பநாதன் (UK), தனபால சிங்கம் (Germany), ரதிதேவி (UK), கணேச மூர்த்தி (கொழும்பு சமாதான நீதிவான், Northern Province MPCS Fedaration Commercial Manager, முன்னாள் JDAPC Union Purchasing Officer), ரஞ்சனா (அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ. சங்கமுன்னாள் கிளை முகாமையாளர்), ராதாமணி (UK) ஆகியோரின் தாயாரும், தேவிகா, சந்திரா, சுமதி, அரிச்சந்திரன், கலாராணி (பிரபங்குளம் ஒழுங்கை, முன்னாள் JDAPC Union உத்தியோகத்தர்), சிவநேசன் (முன்னாள் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்), சிறீதரன் ஆகியோரின் மாமியாரும், விபூசன், நிருசா, ஈ.சாஜனராஜினி, பிரவீன், விந்தியா, அஜந்தன், அனோஜா, தரண்ஜா, நிவேதன், கேமரசீகா விறோனிக்கா, சாயிநாத், அச்சுதன், பிரியங்கா, தேனுஜா, பிரணவி, சுவாதி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அளவெட்டி தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் 13.04.2009 பி.ப. 2 மணியளவில் நடை பெற்று அளவெட்டி தெற்கு தம்மளை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25/3, Sri Maha Bodhi Road, Dehiwala.
T.P. +94777724199, +94602210970.
E-mail: npmpcsfed@gmail.com

தகவல்:
க.கணேசமூர்த்தி J.P.
(மகன்)

## லண்டனில் நேருவின் உருவச் சிலை சேதம்!

லண்டன், ஏப்.12

லண்டனிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு முன்னுள்ள முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவினுடைய உருவச்சிலை சேதமாக்கப்பட்டுள்ளதென இந் தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உருவச்சிலை சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பிரிட்டன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். இச்சம்பவம் நடைபெற்ற அன்று இரவு பொலிஸார் கடமையில் இருந்துள் ளனர் என பிரிட்டனுக்கான இந்தியத் தூதுவர் சிவ்சங்கர் முகர்ஜி தெரிவித்துள்ளார். அதேவேளை இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (சி)

## இன்று ஈஸ்ரர் பண்டிகை

வண்ணை, ஏப்.12

உயிர்த்த ஞாயிறு தினத்தை இன்று கத்தோலிக்க மக்கள் கொண்டாடுகின்றனர்.

தேவாலயங்களில் காலை திருப்பலி ஒப்புக்கொடுத்தலைத் தொடர்ந்து உயிர்த்த ஆண்டவரின் சொரூபம் ஊர்வலமாக எடுத்துச்செல்வார்கள்.

யாழ். பேராலயத்தில் நடைபெறும் வழிபாடுகளைத் தொடர்ந்து உயிர்த்த ஆண்டவர் சிலையை கோவிலின் முன்பகுதிக்கு நகர்த்தி உத்தரிய மாதா பாடகர் குழாம் எழுச்சிக் கீதங்களை ஒரு மணி நேரம் பாடுவர்.

முடிவாக பாடகர் குழாம் உத்தரிய அன்னை ஆலயத்துக்கு வருகைதந்து அங்கேயும் உயிர்த்த யேசு எழுச்சிப் பாடல்களை பாடுவதுடன் உயிர்த்த ஞாயிறு வழிபாடுகள் நிறைவெய்தும். (160)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2009 & DAY
இணைந்த கணிதம்
மீட்டல் வகுப்புகள்
*நிகழ்தகவு
* புள்ளிவிவரவியல்
Mon., Tue.-11 - 1 p.m.
ரி.சேகரன் B.Sc.
PHY.: K.கஜன்
Mon., Wed., Fri.-6.15 a.m.
CHE.: M.A.நிரோஜன்

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 29 வயது, சதய நட்சத்திரம், B.Sc. Computer Science, U.K Citizen சைவபோசன மாப்பிள்ளைக்கு பெண் தேவை. செவ்வாய் தோஷம் இல்லை.

இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
Profile number 5756, T.P.: 2523127, 2520619

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 25 வயது, அவிட்ட நட்சத்திரம், Medical Student, Denmark Citizen பெண்ணுக்கு படித்த மாப்பிள்ளை தேவை.

இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
Profile number 5766, T.P.: 2523127, 2520619

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 33 வயது, சதயநட்சத்திரம், லண்டன் இல் Business செய்து கொண்டிருக்கும் U.K. Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

செவ்வாய் தோஷம் இல்லை.

இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
Profile number 5818, T.P.: 2523127, 2520619

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

14.03.2009 அன்று இறைபதம்
அடைந்த எமது குடும்பத் தலைவர்

### காசிப்பிள்ளை கந்தையா

(மைலர் கந்தையா)

அவர்களது மறைவுச் செய்தி கேட்டு மரணச் சடங்கில் பங்கு பற்றியோருக்கும், கடிதம், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபத்தைத் தெரிவித்தோருக்கும் மலர் மாலைகள், மலர் வளையம் சாத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், அன்னாரின் இறுதிக்கிரியையில் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (13.04.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

[illegible]
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## 58 ஆவது அகவையின் நிறைவில் கண்ணீர்த்துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 12 | | 20 |
| ★ | | ★ |
| 04 | | 04 |
| ★ | | ★ |
| 1951 | | 2008 |



அமரர் அருட்பணி

### ம.சே.கருணாரட்ணம் (கிளி)

மனிதத்தின் குரலே!
மனிதருள் மாணிக்கமே!
மறக்கத்தான் முடியுமா உன்னை?

மனநெகிழ்வுடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி இராமலிங்கம் (செல்லம்)

(ஓய்வுபெற்ற PWD ஓவசியர், வவுனியா)



வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொழும்பில் தற்போது வசித்து வந்தவருமாகிய சின்னத்தம்பி இராமலிங்கம் 10.04.2009 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சவுந்தரத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சின்னாச்சிப்பிள்ளை, அம்பலம், அன்னப்பிள்ளை, செல்லத்துரை, பொன்னையா, தங்கமுத்து, இளையபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகேந்திரன், கமலாம்பிகை, பாலாம்பிகை,லலிதாம்பிகை, விமலாம்பிகை, சுசிலாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும் நளாயினி, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சண்முகநாதன், விநாயகமூர்த்தி மற்றும் சோதிலிங்கம், நிர்மலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் ரமணன், நிமலன், ஜனனி, சுதாகினி, சுதர்சன், தயாளன், அனுஷா, குணாளன், ரஜீவன், மயூரன், நிருபன், சுஜீவன், கோகுலன், சுரேன், துஷ்யந்தி, தீபன், நிரோஷன், சரண்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் நிவாஷன், லக்சிகா, துஷாந், குகன், காயத்திரி, ஆர்த்தி, சாதுரியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(13.04.2009)திங்கட்கிழமை காலை 7 மணிமுதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11, 5/1 A, 42 nd Lane,
Colombo -06

தகவல்:
பிள்ளைகள்.

## கனகசபை பொன்னுச்சாமி



புத்தூர், வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் சாயுடை, மாவிட்டபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் தற்போது அளவெட்டியில் வசித்தவருமாகிய கனகசபை பொன்னுச்சாமி நேற்று(11.04.2009) சனிக்கிழமை இறைபதமெய்தியுள்ளார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சத்தியபாமா, சத்தியநாதன் (கனடா), சத்தியசீலன்(பிரான்ஸ்), சத்தியபவான், சத்தியபிறேமா, சத்தியஜெயன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னையா, சிவராணி(அள.மல்.ப.நோ.கூ.சங்கம்), யூலியட் (பிரான்ஸ்), ரஜனி, சுகுமார், பார்மதி(பிரான்ஸ்)ஆகியோரின் அன்பு மாமனும் சிவநேசன் (பிரான்ஸ்), தயாமதி (இந்தியா), சிவகரன்(அமரர்), ஜெயமகள் (லண்டன்), சிவயோகன் (பிரான்ஸ்), சிவபதன்(மலேசியா), சஞ்சீவ், லகீஷன், தர்ஷிகா, திலக்சிகா,அனைஸ், ஜெசிக்கா, சோமியா (பிரான்ஸ்), விக்னன், லவன், நிலானி, சஞ்சிகா, சங்கவி, கோஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் தயூரா (லண்டன்)வின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(11.04.2009) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
சாயுடை, மாவிட்டபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணிக் குழப்பங்கள்

இந்தியாவின் வேறெந்த மாநிலத்தையும் விட கூட்டணிக்குழப்பம் என்பது தமிழகத்தில் மிகத் தீவிரமான ஒன்றாக உள்ளது. இதற்குக் காரணம், சிறியசிறிய உதிரிக் கட்சிகள் பலவும் தலையெடுத்திருப்பதே. பி.ஜே.பி., காங்கிரஸ் என இரு பெரும் தேசியக் கட்சிகள், இருபெரும் மாநிலக்கட்சிகளான தி.மு.க, அ.தி.மு.க இவற்றுக்கு மேலதிகமாக பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க, விஜய்காந்தின் தேசிய முன்னேற்ற


விஜய்காந்த்

திராவிடர் கழகம், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், முஸ்லிம் லீக், விடுதலை சிறுத்தைகள் என கணக்கு வழக்கின்றி கட்சிகள் களத்தில் நிற்கின்றன..

இவற்றில் பா.ம.க, ம.தி.மு.க என்பவற்றின் வளர்ச்சி அண்மைக்காலமாக தேய்வடைந்து வந்துள்ளது. எனினும், தே.மு.தி.க போன்ற புதிய கட்சிகள் இந்தப் பின்னணியில் உத்வேகம் பெற்றுவருகின்றமை கண்கூடு. தே.மு.தி.கவின் வளர்ச்சிக்குக் காரணம் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்க தி.மு.க, அ.தி.மு.க போன்ற கட்சிகள் தவறியமை ஆகும். குறிப்பாக தி.மு.க தலைவர் வார்த்தை ஜாலத்தில் குறியாக இருக்கிறாரே தவிர ஆட்சியின் நோக்கம்


ஜெயலலிதா

மக்கள் குறை தீர்ப்பது என்பதை மறந்துவிட்டார். குண்டர்களின் அட்டகாசம் எல்லைமீறி சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பது தி.மு.க ஆட்சியின் மிகப்பெரிய பலவீனமாகும். இந்த வகையில் பார்த்தால் அ.தி.மு.க ஆட்சி எவ்வளவோ மேல் என மக்கள் எண்ண இடமளித்துள்ளது. அதையும் விட தே.மு.தி.க மேலானது என்ற எதிர்பார்ப்பும் இன்று ஏற்பட்டிருக்கிறது.

ஆரம்பம் முதலே தி.மு.க, அ.தி.மு.க ஆகிய இரண்டு கட்சிகளுடனும் சேராமல் தனித்திருந்தது இன்று விஜய்காந்துக்கு பெரும் லாபம் தரும் விஷயமாகும். ஆட்சியின் சீர்கேடுகளை புட்டுப்புட்டுவைத்து வாக்குக் கேட்கையில் விஜய்காந்துக்கு மிகுந்த அங்கீகாரம் கிடைக்குமெனத் தெரிகிறது. அவருக்கு உள்ள ஒரே பின்னடைவு, தேசியதேர்தலான இத்தேர்தலில் தேசியக் கட்சி ஒன்றுடன் கூட்டணி வைக்காததே. இதனால் ஒன்று அல்லது இரண்டு தொகுதிகளுக்கு மேல் அவரால் வெல்ல முடியாது போகலாம். ஆனால், தி.மு.க, அ.தி.மு.க இரண்டு பக்கங்களிலும் இருந்தும் கணிசமான வாக்குகளை அவர் கவரப்படப்போவது மட்டும் உண்மையே.

இதேவேளை பாட்டாளி மக்கள் கட்சி, ம.தி.மு.க ஆகிய இரண்டினதும் நிலை இத்தேர்தலில் மிகவும் பலவீனமான ஒன்றாகவே உள்ளது. பா.ம.க தொடர்ந்து அணிமாறி, அணிமாறி அரசியல் பிழைப்பு நடத்துவதான தோற்றம் வாக்காளரை வெறுப்படையச் செய்யலாம் என்பது ஒரு புறம். மறுபுறம், பா.ம.க போட்டியிடும் தொகுதிகளில் அதற்கு வெற்றிவாய்ப்பு மிகவும் குறைவு என்பது கட்சிக்கு மிகவும் கவலை தரும் விஷயம். போட்டியிடும் ஏழு தொகுதிகளில் இரண்டு மட்டுமே பா.ம.கவுக்கு உறுதியான வெற்றி கிடைக்கும் தொகுதிகளாகும். சென்ற தேர்தலில் தி.மு.க கூட்டணியில் சேர்ந்து பா.ம.க போட்டியிட்டு வென்ற 6 தொகுதிகளில் 5 வடதமிழ் நாட்டுத் தொகுதிகளாகும். பாரம்பரியமாக வட தமிழகத்தில் தி.மு.கவுக்கு பெரும் செல்வாக்குண்டு. எனவே, பாட்டாளி மக்கள் கட்சி தி.மு.க அணியில் போட்டியிட்டால் இரு கட்சிகளின் வாக்குகளும் ஒன்றாக இணைந்து வெற்றியை நிச்சயமாக்கும். எனவே, தி.மு.க அணியில் பா.ம.க போட்டியிடும்போது கவலை இன்றி போட்டியிடலாம். ஆனால், அ.தி.மு.க அணியில் போட்டியிடும்போது கடும் சிக்கல் பா.ம.கவுக்கு உள்ளது. காரணம், தி.மு.கவின் செல்வாக்கு உள்ள வட தமிழக தொகுதிகளில் தி.மு.கவின் அந்த செல்வாக்குடன் எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறவேண்டும். அ.தி.மு.கவுக்கென்று வடதமிழகத்தில் பெரிய செல்வாக்குக் கிடையாது. கடந்த முறை தி.மு.கவுடன் இணைந்து இருந்தபோது கூட பா.ம.க வென்றாலும் மிகக்குறைந்த வித்தியாசத்திலேயே வெல்ல முடிந்தது. அந்த அணியில் இருந்த தி.மு.க, காங்கிரஸ் போன்றவை மிகப்பெரிய வித்தியாசத்தில் வென்றது கவனிக்கத்தக்கது.

இந்த இலட்சணத்தில் வெற்றி பெறுவோமா என்ற சந்தேகம் பா.ம.கவினரிடம் இப்போதே எழுந்துவிட்டது. உதாரணமாக சிதம்பரத்தில் திருமாவளவனை எதிர்த்து வெல்லவேண்டும். திருமாவளவன் நேற்றுவரை ராமதாஸின் நண்பர் என்றாலும் இன்று எதிரி. திருமாவளவனுக்கு சிதம்பரத்தில் கடும்செல்வாக்குண்டு. தி.மு.க, காங்கிரஸ் வாக்குகளும் திருமாவளவனைச் சேர்ந்தால் பா.ம.கவால் தாக்குப்பிடிக்க முடியாது. திருமாவளவனும் காங்கிரஸும் அடித்துக்கொண்டால் ஒருவேளை பா.ம.க தப்பிப்பிழைக்கலாம்.

- எஸ்.சுரேந்திரஜித் -

பா.ம.க போட்டியிடும் மற்றொரு தொகுதியான அரக்கோணம் நேற்றுவரை பா.ம.க வெல்லக்கூடிய தொகுதியாக கருதப்பட்டது. அதன்வேட்பாளரும் மத்திய ரயில்வே இணை அமைச்சருமான ஆர்.வேலு கணிசமான சேவை செய்தே உள்ளார். ஆனால், தி.மு.க புத்திசாதுர்யமாக ஜெகத்ரட்சகனை களமிறக்கி உள்ளது. இவர் எம்.ஜி.ஆரின் நெருங்கிய சகாவாக இருந்து எம்.ஜி.ஆர் மறைந்த[illegible] தி.மு.கவில் இணைந்தவர். [illegible] இவர் அரக்கோணத்தில்


சோனியா

போட்டியிடுவதால் பா.ம.கவுக்கு கடும் சவால் ஏற்பட்டுள்ளது.

பா.ம.க போட்டியிடும் தொகுதிகளில் தோல்வி நிச்சயம் என்று கருதத்தக்க தொகுதி புதுச்சேரி ஆகும். காங்கிரஸ் - தி.மு.க அணியில் பா.ம.க இருந்தபோது காங்கிரஸிடம் இருந்து பா.ம.க இதை தந்திரமாக பெற்றுக்கொண்டது. இன்று காங்கிரஸுக்கு எதிரணியில் இருப்பதால் புதுச்சேரியில் காங்கிரஸும் பா.ம.கவும் நேருக்கு நேர் மோதுகின்றன. இங்கு காங்கிரஸின் செல்வாக்கு அசைக்க முடியாத ஒன்றாகும். அ.தி.மு.க கூட இங்கு போட்டியிட்டு காங்கிரஸிடம் தோற்க விரும்பவில்லை. ஆக பா.ம.க போட்டியிடும் 7 தொகுதிகளில் ஒன்றில் தோல்வி இப்போதே நிச்சயமாகிவிட்டது. இதேபோன்று தோல்வியை எதிர்நோக்கும் மற்றொரு தொகுதி சிறிபெரும்புதூர். இங்கு மத்திய அமைச்சர் பாலு போட்டியிடுகிறார். இவர் முன்னர் வென்ற தென் சென்னையின் சில பகுதிகள் இப்போது சிறிபெரும்புதூர் தொகுதிக்கு மாற்றப்பட்டதால் இங்கு பாலு இலேசாக வெல்வார் என்பது நிச்சயம். இவ்வாறு இரண்டு தொகுதிகள் இப்போதே பா.ம.கவுக்கு தோல்வி என குறித்துக் கொள்ளலாம்.

இதுதவிர ராமதாஸின் மகன் டாக்டர் அன்புமணி ராமதாஸ் சுகாதார அமைச்சராக இருந்தபோது சிகரெட், மதுவுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள், சட்டங்கள் கொண்டுவந்தார். உதாரணமாக,பொதுஇடங்களில் புகைபிடித்தலை தடுக்கும் சட்டத்தை அன்புமணியே கொண்டுவந்தார். இதனால் புகையிலை, மதுபான கம்பனிகள் அன்புமணி மீது கடுப்பில் உள்ளன. மேலும் பா.ம.க இன்று அ.தி.மு.கவுடன் இருந்தாலும் தேர்தலுக்குப்பின் பி.ஜே.பியோ, காங்கிரஸோ ஆட்சி அமைத்தால் அங்குதாவி அன்புமணி சுகாதரா அமைச்சராவது நிச்சயம் எனக் கருதப்படுகிறது. எனவே, மீண்டும் அன்புமணி அமைச்சராவதைத் தடுக்க இந்தியா முழுவதும் உள்ள சிகரெட், மதுபான கம்பனிகள் முயற்சிக்கின்றன. இவர்கள் பணத்தைக் கொட்டி பா.ம.க போட்டியிடும் தொகுதிகளில் விளையாடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. அன்புமணி, ராமதாஸ் இருவருமே டாக்டர்கள் என்பதால் சுகாதார அமைச்சை கேட்டுப்பெற விரும்புகின்றனர்.

பாட்டாளி மக்கள் கட்சிக்கு உள்ள மற்ற பிரதான எதிரி சினிமா உலகமாகும். சினிமாவை எதிர்ப்பதால் முழு திரை உலகமும் திரண்டு கடந்த தேர்தலில் பா.ம.கவை எதிர்த்தது குறிப்பிடத்தக்கது. அத்தேர்தலில் பா.ம.க மிகக் குறைந்த வாக்குகளால் வெல்லவேண்டி வந்ததும் இவர்களால்தான். குறிப்பாக ரஜனி ரசிகர்கள் பா.ம.கவுக்கு எதிராக கடும் பிரசாரம் செய்தனர். பாட்டாளி மக்கள் கட்சியின்


வைகோ

முற்போக்கு வாதம் தமிழகத்தில் [illegible] மாநிலத்தில் சாபக்கேடு என்றே சொல்லவேண்டும்.

ஆந்திரா மாநிலத்திலும் இவ்வாறே


ராமதாஸ்

பிரச்சினை உள்ளது. அங்கும் சினிமா நடிகர்களிடம் மக்கள் சரணடைய வேண்டிய அவலம் அரசியல்வாதிகளின் தவறினால் ஏற்பட்டுள்ளது. ஆந்திராவிலும் தமிழகத்திலும் கேரளாவைவிட படிப்பறிவு வீதம் மிக குறைவாகும். கேரளாவில் சினிமா நடிகர்கள் அரசியலில் செல்வாக்குடன் இல்லை என்பது கவனிக்கப்படவேண்டும். இந்தத்தேர்தலில் கேரளாவின் ஒவ்வொரு தொகுதியிலும் கலாநிதிப்பட்டம் (பிஎச்டி) பெற்ற ஒருவராவது களத்தில் உள்ளனர். சில தொகுதிகளில் முக்கிய வேட்பாளர்கள் இருவருமே கலாநிதிப்பட்டம் பெற்றவர்களாக இருப்பதும் கவனிக்கத்தக்கது. இதே நிலைமையையே தமிழகத்தில் கொண்டுவர ராமதாஸ் அவதிப்படுவது சரிதான். ஆனால், அதற்கு அவசரப்படுவது ராமதாஸுக்கு ஆபத்தாக முடிந்துள்ளது. [illegible] இருந்த செல்வாக்கையும் [illegible]க்கவே நேரிட்டுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சியுடன் கூட்டணி வைத்ததால் ஜெயலலிதாவுக்கு ஓரளவு லாபமே. அ.தி.மு.கவுக்கு அவ்வளவு செல்வாக்கில்லாத வட தமிழக தொகுதிகளில் பா.ம.கவின்


கருணாநிதி

வன்னியர் வாக்கு வங்கி மூலம் அ.தி.மு.க வெற்றியை எட்ட வாய்ப்புள்ளது. மொத்தத்தில் கூட்டணிமுன், தான் மட்டும் லாபம் அடைவது என்ற தனது யுக்தியை ஜெயலலிதா இங்கும் வெற்றிகரமாக பிரயோகித்துள்ளார். கடந்த சட்ட சபைத் தேர்தலில் ம.தி.மு.கவுக்கும் இதேவகையான வைத்தியத்தைத்தான் ஜெயலலிதா செய்திருந்தார். அ.தி.மு.க கூட்டணியில் அ.தி.மு.க 60 இடங்களை வெல்ல தோழமைக்கட்சிகளான ம.தி.மு.க 6 இடங்களில் மட்டுமே வெல்லமுடிந்தது.

இதேவேளை கலைஞரின் மகன் மு.க.அழகிரி மதுரை தொகுதியில் நேரடியாக களமிறங்கி உள்ளது பெரும்பரபரப்பான விஷயமாகி இருக்கிறது. இதுவரை தேர்தலில் போட்டியிடாத அழகிரி தானே போட்டியிடுவதால் அ.தி.மு.கவினருக்கு கிலி ஏற்பட்டுள்ளது. மதுரை உள்ளிட்ட தென்தமிழகம் அ.தி.மு.கவின் கோட்டை ஆகும். அங்கு அழகிரி கடுமையாக உழைத்து தி.மு.கவை உயர்த்தியுள்ளார். எனவே, இத்தேர்தலில் முன்போல் அ.தி.மு.கவினால் இலேசாக தென்மாவட்டங்களில் வெல்ல முடியாது என்று கருதப்படுகிறது. காங்கிரஸுக்கும் தென் தமிழகத்தில் சிவகெங்கை, தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி தொகுதிகளில் செல்வாக்கு இருப்பதால் தி.மு.க அணிக்கு தென்மாவட்டங்களில் அ.தி.மு.கவின் செல்வாக்கை மீறி வெற்றி கிட்டலாம் என நம்பப்படுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 07.08.1934

உதிர்வு 15.03.2009



அமரர்

## விநாசித்தம்பி சின்னையா

கடந்த 15.03.2009 அன்று இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் பெரியதேவனத் தாய் பிள்ளையார் ஆலய அந்தியேட்டி மடத்திலும், சபிண்டீ கரணக் கிரியைகள் நாளை 13.04.2009 திங்கட்கிழமை முற்பகல் அன்னாரது இல்லத்திலும் இடம்பெறும். அந்தியேட்டிக் கிரியைகளி லும் சபிண்டீகரண கிரியைகளிலும் பங்குபற்றி மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பன்,
குடத்தனை.

குடும்பத்தினர்.



# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அருட்திரு.
**பற்றிக் இம்மானுவேல்**
(குணேன்)
குருத்துவம் - 19.05.1978

மலர்வு 07.05.1951 உதிர்வு 12.04.2001



''சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்''

54/3, புனித அன்னாள் கோயில் முன் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

என்றும் மறவாத:
அன்பு மம்மி, அக்கா, மைத்துனர்,
லண்டனில் வசிக்கும் மருமகள் குடும்பம்.


## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கூட்டங்கள்

நவாலி,ஏப்.12

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் வியாழக்கிழமை பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

விவசாயக் குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 11 மணிக்கும் இடம்பெறும்.

(50-100)

## விஷமிகளால் கடை தீக்கிரை

கோப்பாய்,ஏப்.12

கரந்தன் சந்திப் பகுதியில் இயங்கி வந்த சைக்கிள் திருத்தும் கடையொன்று விஷமிகளால் தீவைத்து எரித்து நாசமாக்கப்பட்டுள்ளது.

கடையின் ஓலையால் வேயப்பட்ட கூரை முற்றாக எரித்துள்ளது.

கடையில் பெறுமதியான பொருள்கள் எதுவும் இல்லாதிருந்தமையால் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(50-72)

## புத்தாண்டு பணப்பரிசில் மூலம் காப்புறுதிதாரர்களை மகிழ்விக்கவுள்ள செலிங்கோ ஆயுள் காப்புறுதி

**பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நம்பிக்கை மிகு வாடிக்கையாளர்கள் மத்தியில் 27 மில்லியன் ரூபாவை பணப்பரிசாக பகிர்ந்தளிக்கவுள்ள ஆயுள் காப்புறுதித் தலைமை நிறுவனம்...**

புத்தாண்டு காலமானது செலிங்கோ லைஃப் காப் புறுதியின் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவரவுள்ளது. ஆயுள் காப்புறுதி முன்னோடி நிறுவனமான செலிங்கோலைஃப் காப்புறுதி நிறுவனம் 2004ஆம் ஆண்டில் அறி முகம் செய்த (அவுறுது கே போனஸ்) திட்டத்தின் கீழ் தொடர்ந்து இவ்வாண்டும் 27 மில்லியன் ரூபா பகிர்ந் தளிக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டுகளைப் போலவே இம்முறையும் உடனடியாக மாற்றத்தக்க காசோலைகளாக இது வழங்கப்படும். ஏப்ரல் மாத காலப் பகுதியில் காப்புறுதிதாரர்களின் வீடுகளுக்கு தனித்தனியாகச் சென்று இந்தப் பரிசுப் பணம் வழங்கப்படும்.

''மீண்டும் செலிங்கோ லைஃப் காப்புறுதி தனக்கே உரிய உன்னதமான திட்டத்தை அமுல் செய்கின்றது'' என்று இந்தத் திட்டம் குறித்து செலிங்கோ ஆயுளின் பிரதித் தலை வர் ஆர்.ரெங்கநாதன் கூறினார். ''இந்தக் கொடுப்பனவுகளானது வருடாந்த போனஸாக தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் ஆயிரத்து 400 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக வழங்கப்படுகிறது'' என்று அவர் கூறினார்.

பிரதித் தலைவர் ரெங்கநாதனின் கூற்றுப்படி இவ் வருட போனஸ் தொகையோடு சேர்த்துக் கடந்த ஆறு வருடங்களாகச் செலுத்துப் பட்டுள்ள செலிங்கோ லைஃப் மொத்த புத் தாண்டு கால போனஸ் கொடுப்பனவானது 127 மில்லியன் ரூபாவாகும். மொத்தமாக இதைப் பெற்றுக் கொண்டவர்களின் தொகை 53 ஆயிரத்துக்கும் அதிக மானதாகும்.

இந்தப் போனஸ் கொடுப்பனவுகளானது செலிங்கோ லைஃபின் ''ஆயுள் வெகுமதி'' பிரத்தியேக அனுகூலங்களை வழங்கும் திட்டங்களுக்கு அப்பாற்பட்டதாகும். கடந்த மாதம் கம்பனி மூன்று லட்சத்துக்கும் அதிக மான காப்புறுதிதாரர்களுக்கு ஆயிரத்து நானூறு மில்லியன் ரூபாவை போனஸ் கொடுப் பனவாக வழங்க ஆரம்பித்தது. காப்புறுதிதாரர்களின் நம்பகத்தன்மையை அடிப் படையாகக் கொண்டு இந்த போனஸ் விகிதங்கள் வடி வமைக்கப்பட்டுள்ளன. இதன்படி காப்புறுதிக் கொள்கையானது எவ்வளவு காலம் செயற்படத் தக்கதாக இருக்கின்றதோ அதற்கேற்ப அதிகமான போனஸையும் பெற் றுக்கொள்ளலாம்.

இந்த விசேட போனஸ் கொடுப்பனவானது 10 வருடங்கள் பூர்த்தியடையும் ஒரு காப்புறுதிக்கு ஆயிரம் ரூபா வுக்கு 25 ரூபா என்ற ரீதியிலும், 15 வருடங்களைப் பூர்த்தி செய்யும் ஒரு காப்புறுதிக்கு ஆயிரம் ரூபாவுக்கு 50 ரூபா என்ற ரீதியிலும் அமைந்திருக்கும். இதன்படி செயற் படத்தக்க நிலையில் உள்ள ஒரு மில்லியன் பெறுமதி யான ஒரு காப்புறுதிக்கு 10 ஆண்டுப் பூர்த்தியில் 25 ஆயிரம் ரூபாவும் 15 ஆண்டுகள் பூர்த்தியில் 50ஆயிரம் வழங்கப்படும்.

இலங்கையின் மிகப்பெரியதும் மிக

### விளம்பர விவரணம்

வெற்றி கரமானதுமான ஆயுள் காப்புறுதி நிறுவனமான செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம் புதிய கண்டுபிடிப் புகள் உற்பத்தி அபிவிருத் திகள், வாடிக்கையாளர் சேவைகள், தொழில் சார் அபிவிருத்திகள் என்பனவற்றுக்காகக் காப்புறுதித் துறையில் பல விருதுகளை வென்ற ஒரு நிறுவனமாகும். உள்ளூர் காப்புறுதித் துறையில் இதன் கிளை வலையமைப்பானது மிகவும் விசாலமானதாகும். சிறந்த கூட்டாண்மைப் பிரஜை மற்றும் சிறந்த வர்த்த நற்பெயரைக் கட்டியெழுப்பல் என்பனவற்றுக் காக உள்ளூர் மற்றும் சர்வதேச விருதுகள் பலவற் றையும் இது வென்றுள்ளது. செலிங்கோ ஆயுள் நிறுவனம் 2008இல் சந்தா வருமானமாக 8.2 பில்லியன் ரூபாவையும் ஈட்டியுள்ளதோடு கம்பனியின் ஆயுள் நிதியத்தையும் 2008 டிசெம்பர் 31இல் 21 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
சிறி நதியாவின் இனிய
தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வாடிக்கையாளர் எதிர்பார்த்திடும்
அதியுயர் தரத்திலான வர்ண
புகைப்படங்களை
Frontier 370
மூலம் நீங்கள் துரிதமாக
பெற்றுக்கொள்ளலாம்

# சிறி நதியா
## நகை மாளிகை & டிஜிட்டல் கலர் லாப்





- Print Size 03R up to 10 x 15
- Digital Media to Print (CD, Zip, Flash Memory, USB Card)
- Old Photograph Restoration
- Calender & Greeting Card Printing
- High Quality Image From Traditional & Digital Media
- Index/ Framed Prints & Decorative Prints
- Digital Album Designing & Album Binding

20 நிமிட சேவை



FUJIFILM



உங்கள் இல்லத்தில் நடைபெறும் மங்களகரமான
நிகழ்வுகளை சிறந்த முறையில் புகைப்படங்களாக
பிரதியாக்கம் செய்யவும், டிஜிட்டல் அல்பங்களிலே
வடிவமைத்திடவும், தேசிய அடையாள அட்டை,
பாஸ்போட், போஸ்ரல் அளவிலான புகைப்படங்களை
குறுகிய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்,
நவீன டிஜிட்டல் வீடியோ கமராக்கள் மூலம் பதிவுகளை
செய்து அழகு பார்க்கவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்...

01, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2222709

லக்ஸன் பிளாஸா கட்டடம்
108A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2228412


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மாற்றம் ஒன்றுக்கான ஆரம்பப் புள்ளி



போர் நிறுத்த ஒப்பந்தங்கள் கொடிய போரின் மற்றுமொரு முகம். இராஜதந்திர முயற்சியின் பிறப்பு.

அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், சில விட்டுக்கொடுப்புக்கள், ஆசைகளை காட்டுதல், எதிர்பார்ப்புக்களை மெருகேற்றுதல் போன்றவற்றை நாசுக்கான முறையில் நகர்த்துதல் இராஜதந்திரத்தின் இன்னோரு பக்கம்.

இவற்றினூடாக விருப்பப்படாத விடயங்களைக் கூட தமது நலன்களுக்கு ஏற்ப இணங்க வைத்துக்கொள்ளுதல் குறிப்பிடத்தக்க அம்சம்.

இது உலக வரலாற்றில் நீண்ட காலமாக தொடர்ந்து வருகிறது. இவை அனைத்தினதும் பின்னணியில் பலமே மூலதனமாக உள்ளது.

பலத்தில் உயர்ந்தவனே இராஜதந்திர களத்திலும் உயர்வான்.

பலம் என்பது தனித்து அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ பலத்தை மையமாக கொண்டாலும் தனித்து அதற்குள் மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல.

இராஜதந்திரம் - பேச வேண்டிய நேரத்தி லெல்லாம் பேசுவது கிடையாது. பேசப்படுகின்ற விடயங்களிலெல்லாம் அர்த் தங்கள் இருக்காது.

தம்மைச் சுற்றி அராஜகங்கள் தலைதூக்கும் போது அமைதியாக இருப்பதும், பொருத்தமற்ற நேரங்களில் தேவையற்ற விடயங்களை கிளறுவதும் இராஜதந்திரம்தான்.

இவை எல்லாவற்றுக்கும் பின்னணியில் விரித்து வைத்திருப்பது ஒரு பொறி. அதிலிருந்து மீள்வது கடினம்.

விடயங்களை ஆழமாக அவதானித்து, தனது இலக்கில் மிக கவனமாக செயற்பட்டு, சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப திறமையாக செயற்பட்டு அவ்வாறன ஒரு பொறியை வைக்கக் கூடியதே சிறந்த இராஜதந்திரமாகும்.

தனித்து அரசியலுக்கும், பொருளாதாரத்துக்கும் மட்டுமன்றி வெற்றிகரமான ஒரு போரை முன்னெடுப்பதற்கும் இராஜதந்திரம் துணை நிற்கும்.

மேற்கூறிய அம்சங்களை தன்னகத்தே கொண்ட ஒரு இராஜதந்திரப் பொறிதான், "ஈழப் போர் - III" இன் முடிவு காலத்தோடு இலங்கைத் தீவை நோக்கி சடுதியாகவும் விரைவாகவும் நகர்ந்தது.

இந்த நகர்வுக்கு பல்வேறு பின்புலங்கள் இருப்பினும், தமிழ் மக்களைப் பொறுத்த வரை அவர்களுடைய "தலைவிதி யோடு" தொடர்புபட்டமை முக்கியமானது.

தமது அவல வாழ்வுக்கு பரிகாரம் கிடைக்கும், சுபீட்சமான வாழ்வு மலரும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் இருந்தார்கள்.

பாலஸ்தீன பேச்சுவார்த்தை முன்னெடுப்புகள் ஒரு தேங்குநிலை களமாக இருந்தமையை சரிவர எடைபோட்ட போதும், நல்லதொரு மாற்றத்துக்கான ஆரம்பப் புள்ளியாக போர் நிறுத்த ஒப்பந்தம் திகழ் வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எமக்கு இருக்கிறது. ஆதலால் நல்லதொரு மாற்றத்துக்கான ஒரு சந்தர்ப்பமாக இதனை நோக்குவோம்" என்ற தொனிப்படவே போர் நிறுத்த ஒப்பந் தம் தொடர்பான தமது கருத்தினை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை வெளிப்படுத்தியிருந்தது.

புதிய உலக ஒழுங்கின் போக்குக்கு ஏற்ப, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தினூடாக புலிகள் சவால் நிறைந்த 'சர்வதேச மயப்பட்ட இராஜதந்திர களத்தை திறந்து வைத்தார்கள்.

அதிலும் கவனிக்கப்பட வேண்டிய பிரதான விடயம் யாதேனில், அந்த சவால் மிகுந்த இராஜதந்திர களத்தில் உலக வல்லரசுகளும், பிராந்திய வல்லரசுகளும் முக்கிய தரப்புகளாக இருந்தமையாகும்.

இந்தியாவுடனும் அதன் படைகளுட னும் போர் புரிவதற்கு புலிகள் தீர்மானித்த பிற்பாடு எடுக்கப்பட்ட அடுத்த 'அபரிதமான' ஒரு முடிவாகவே இதனை நோக்க முடிகிறது.

வெற்றி தோல்வி என்பதற்கு அப்பால், அந்த களம் திறக்கப்பட வேண்டியது, சளைக்காத போராட்டம் அவசியமானது என்பதுடன் அதற்கான ஆத்மபலம் உண்டு என்ற அடிப்படையில் எடுக்கப்பட்ட ஒரு முடிவாகவே இதனை கணிப்பிட முடிகிறது.

இந்த வேரோட்டத்தில் முளைவிட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்தவும், சர்வதேசத்தை திருப்திப்படுத்தவும், புலிகளைப் பலவீனப்படுத்தவும் மேற்கின் விசுவாசியான ஐக்கிய தேசிய கட்சியினால் மேற்கின் அனுசரணையுடன் முன்னகர்த்தப்பட்டது.

சர்வதேசம் எனக் கூறப்படுவோருக்கு, ஈரான், ஈராக்குக்கு இணையான எண்ணெய் வளமோ, அல்லது ஆபிரிக்கா கண்டத்தில் குவிந்துள்ளது போன்ற கனிம வளங்களோ அல்லது கிழக்கு ஐரோப்பாவில் உள்ளது போன்ற தமது தேசிய நலனில் தாக்கத்தை உண்டு பண்ணக்கூடிய கேந்திர முக்கியத்துவமோ இலங்கைத் தீவுக்கு இல்லை.

ஆனால், அது போன்ற முக்கியத்துவம் இலங்கைத் தீவுக்கு இல்லாவிட்டாலும் கூட இலங்கைத் தீவை புறந்தள்ளி வைக்க முடியாத அளவுக்கு கணிசமானதும் அவசியமானதுமான முக்கியத்துவம் இலங்கைத் தீவுக்கு உண்டென்பதை எந்தக் கட்டத்திலும் மறுக்க முடியாது.

சீனா, இந்தியா, பாகிஸ்தான், ஈரான், ரஷ்யா, அமெரிக்கா என சுழல்கிற 'அமைதிப் புயலின்' சூட்சுமம் இலங்கைத் தீவு ஒதுக்கி வைக்கப்பட முடியாதது என்பதை வெளிப்படுத்துகிறது.

மேற்கூறிய சூட்சுமம், இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு அதிர்ஷ்டகரமான சாதகத்தன்மையை அள்ளி வழங்குகிறது.

அந்த தன்மை இலங்கை ஆட்சியாளர் களை எத்தகைய பொருத்தமற்ற தீர்மானங்களையும், முடிவுகளையும் எடுக்கத் தூண்டுகிறது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது என்ற முடிவானாலும் சரி, போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவது என்ற முடிவானாலும் சரி மேற்கூறப்பட்ட அடிப்படையில் தான்மேற்கொள்ளப்பட்டது.

உதாரணமாக, அமெரிக்காவின் ஆசியுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.



முடிந்த வரை புலிகளை பலமிழக்கச் செய்தல் என்ற பொறியுடன் அமெரிக்காவின் ஆதரவுடன் தனது சில அமைச்சர்களுக்கோ நாட்டின் ஜனாதிபதிக்கோ தெரியாமல் ரணில் விக்கிரமசிங்க போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

சர்வதேச பாதுகாப்பு வலையமைப்பு என்பது இதன் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். உண்மையில் இந்த திட்டமானது, புலிகளை பலமிழக்கச் செய்தல் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிப்படையாக கூறும் திட்டத்தை விட அபாயகரமானது.

குழப்பங்களினுடாக புலிகளுக்குள் பிளவுகளை உண்டாக்கி பலமிழக்கச் செய்தல் என்ற அவர்களுடைய கன்னி முயற்சி வெற்றி பெற்றது.

அதனூடாக அமைப்பையும் அதன் தலைமையையும் பலவீனப்படுத்துதல் திட்டமாகும்.

அதன் காரணமாக புலிகள் போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து தன்னிச்சையாக விலகிக் கொள்வார்கள். அதன் விளைவாக அவர்கள் முற்று முழுதாக சர்வதேசத்திலிருந்து ஒரங்கட்டப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு தென்னிலங்கையில் பெருமளவில் காணப்பட்டது.

ஆனால், புலிகள் தொடர்பான எதிர்பார்ப்பு அவர்களின் வேறுபட்ட பிரதிபலிப்புகளால் மீண்டும் ஒருமுறை தவிடுபொடியானது.

ஐக்கிய தேசியக் கட்சியில் முக்கிய அமைச்சர்களாக இருந்த மிலிந்த மொரகொடவும், நவீன் திசநாயக்காவும் 2005 இல் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் புலிகளுக்குள் பிளவை ஏற்படுத்தியது தாம்தான் (ஐக்கிய தேசியக் கட்சி) என்பதை பிரசார கூட்டங்களில் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தனர்.

அதற்கான விளைவுகளை ஜனாதிபதி தேர்தலில் அறுவடை செய்து, இன்று அதை வெளிப்படுத்தியவர்கள் கூட இல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியும் பிளவுபட்டு, அதன் தலைமையும் பலவீனப்பட்டு நீண்டகாலமாக கட்டிக் காத்து வளர்த்த கட்சியின் தனித்துவமும் சிதைவடைந்து, இன்று கட்சியின் எதிர்காலம கேள்விக்குள்ளாகி இருக்கிறது.

இவ்வாறான நிலையில், அதிகமான போர் நிறுத்த மீறல்களை தமிழீழ விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என்று இலங்கை அரசாங்கத்தால், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செயப்பட்டிருந்தது.

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டும் பல சம்பவங்களும் இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதில் 2007 நவம்பர் இடம்பெற்ற சு.ப. தமிழ்ச் செல்வன் மீதான தாக்குதலும், மாவீரர் நாளன்று நடத்தப்பட்ட தாக்குதல்களும் அவற்றுள் சிலவாகும்.

மேற்குறிப்பிட்ட நிலையில், சர்வதேச சமூகம் தொடக்கம் உள்நாடு வரை தமிழீழ விடுதலைப் புலிகளே போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து தன்னிச்சையாக விலகும் முடிவை அறிவிப்பார்கள் என்ற எதிர்வு கூறல்கள் நிலவியிருந்தன.

ஆனால், அதற்கு எதிர்மாறாக அரசாங்கம் அத்தகைய முடிவை 2008 ஜனவரி 2 ஆம் திகதி அறிவித்திருந்தது.

இது யார் யாருக்கு என்ன செய்தது என்பதை விட அமெரிக்காவை அசௌகரிய மடையச் செய்துள்ளது என அமெரிக்கா தெரிவித்த கருத்து முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது.

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்ததினூடாக, தாம் அசௌகரியம் அடைந்துள்ளதை அமெரிக்க வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் சீன் மக்கோமக் (Sean McCormack) பின்வருமாறு குறிப்பிட்டார். "United States was troubled by the decision".

இராஜதந்திரமென்பது கேவலமான விடயங்களை மிக இனிமையான முறையில் சொல்வதும் செய்வதும் (Diplomacy is to do and say the nastiest things in the nicest way) என அமெரிக்க பல்துறை அறிஞரான ஐசாக் கோல்ட்பேர்க் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவரை ஒருவர் நெருக்கடிக்குள் தள்ளும் பொறி மிகுந்த இராஜதந்திர களத்தில் யார் வென்றார்கள் என்பது ஒரு புறமிருக்க, 2002 இல் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்துடன் சமாதான மும், சுபீட்சமும் மலரும் என எதிர்பார்திருந்த மக்கள் மீண்டும் ஒரு தடவை ஏமாந்து போனார்கள் என்பது கவலையான விடயம்.

இத்தகைய நிலையிலேயே, சர்வதேச உறவுகளுக்கான பிரிவு என்ற ஒரு கட்டமைப்பை உருவாக்கி, அதற்கான பொறுப்பாளராக கே.பி. எனப்படும் பத்மநாதனை நியமித்ததினூடாக, சர்வதேச ரீதியாக கணிசமான காலப்பகுதி இடைவெளியாக இருந்த இடத்தை, தமிழீழ விடுதலைப் புலிகள் கால மறிந்து, உரியமுறையில் நிரப்பியுள்ளார்கள்.

களமும் புலமும் தீவிரமடைந்துள்ள ஒரு காலகட்டத்தில்தான், நோர்வேயின் அனுசரணையுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச உறவுகளுக்கான பிரிவுப்

- நி.பாலதரணி -

பொறுப்பாளர் கே.பி. எனப்படும் பத்மநாதனுக்கும், மனிதாபிமான விவகாரங் களுக்கான ஐ.நா. செயலாளர் ஜோன் ஹோம் ஸுக்கும் இடையியே, தொலைபேசி மூலமான உரையாடல் இடம்பெற்றது. இதனால் இலங்கை அரசாங்கத் தரப்பு மிகுந்த அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்துள்ளதாக கொழும்புச் செய்திகளினூடாக அறிய முடிகிறது.

களமுனையில் தொடர்ச்சியான பின்னகர்வுகளில் ஈடுபட்டு வரும் புலிகள், இராஜதந்திர களத்தில் படி நிலை வளர்ச்சியடைந்து வருகிறார்கள் என்பது தெளிவாகிறது.

மூன்று தசாப்த காலமாக இலங்கைத் தீவில் தொடரும் இனக்குழும அரசியல் [illegible] என்றுமில்லாதவாறு சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ந்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தொடர்பாக மென்மையான நிலைப்பாட்டை எடுத்து வந்த ஐ.நா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இவற்றின் கூட்டணிகளின் நிலைப்பாட்டில், மாற்று நிலையாக்கம் ஒன்று சடுதியாக ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இதனை புதிய மாற்றம் ஒன்றுக்கான ஆரம்பப் புள்ளியாக கருதமுடியும்.

இலங்கை அரசாங்கமோ வன்னிக் களமுனையில் தமது கவனத்தை குவித்திருக்க, புலிகளோ சர்வதேச இராஜதந்திரக் களத்தில் முன்னகர்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

சுமார் ஐந்து தாசப்த காலங்களுக்கு மேலாக, அணிசேரா கொள்கையில் இருந்த இலங்கை, மேற்குலகம் விரும்பாத ஒரு கொள்கையை கடைப்பிடிக்கப் போய், தனக்கிருந்த ஆதரவை இழந்தது மட்டு மன்றி, தமிழர் தரப்புக்கு சாதகமான சூழலுக்கான "ஒரு வாசற் கதவை" உருவாக்கிக் கொடுத்துள்ளது.

இது தனித்து மேற்குலகின் இலங்கை தொடர்பான கொள்கையை மாற்றியமைக்க வழிகோலியது மட்டுமன்றி, பெரும் பான்மையான புலம்பெயர் தமிழர்களையும் வெவ்வேறு வடிவங்களில் ஆக்ரோசத்துடன் அணிதிரள வைத்துள்ளது.

"ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு", "இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு" ஆகியன நீதியை நிலை நிறுத்தி உரிமையை மீளப்பெறுவதற்காகச் சட்டரீதியான நடவடிக்[illegible]ல் ஈடுபட, "தமிழ் இளையோர் அமை[illegible]" முதன்மையாகக் கொண்ட புலம்பெயர் தமிழர்களின் கவனயீர்ப்பு போராட்டங்கள் தீவிரமடைந்து வருகிறது.

தமது உறவுகள் தமிழர் தாயகத்தில் நாளாந்தம் படுகொலை செய்யப்படுவதால், வெகுண்டெழுந்த புலம்பெயர் தமிழர்களின் அறவழிப் போராட்டங்கள் சர்வதேச சமூகத்தின் மீது அழுத்தத்தை உண்டுபண்ண தொடங்கியுள்ளன.

இவற்றுக்கான சில உதாரணங்களே, கனடா நாடாளுமன்றத்தில் இலங்கைத் தீவு தொடர்பாக இடம்பெற்ற அவசர கலந்துரையாடல் மற்றும் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாத போதும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கத்தீவில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டமை ஆகும்.

இவை போன்ற நடவடிக்கைகளின் வெளிப்பாடே, போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்புகளும் உடனடியான மனிதாபிமான போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டுமென ஐ.நா. உள்ளிட்ட மேற்குலகு அழுத்தம் கொடுத்து வருவ தாகும்.

இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளிலும் பார்க்க, புலிகளை முற்று முழுதாக அடித்து போரை முடிவுக்கு கொண்டு வருவதாக விடுக்கப்பட்ட காலக்கெடுக்கள் அதிகம்.

இலங்கையின் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதி, பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவை பேச்சாளர் போன்றோர் காலக்கெடு விதித்துகளைத்துப் போன நிலையில், அவர்களின் வரிசையில் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் ஜி.எல். பீரிஸும் புலிகளுடனான போர் இன்னும் மூன்று வாரகாலத்துக்குள் முடிவுக்கு கொண்டு வரப்படும் என தெரிவித்துள்ளார்.

ஆனால், தென்னிலங்கையில் வெளிப்படையாகப் பேசப்படுகின்ற விடயங்களுக்கும், பாதுகாப்புச் சபையில் பேசப்படுகின்ற விடயங்கக்கும் இடையில் பாரிய வேறுபாடு நிலவுவதாக அறியமுடிகிறது.

அதனைத்தான், வன்னிக் களமுனை யின் மிகப்பிந்திய களநிலவரமும் வெளிப்படுத்துகிறது.

சமர்களை தொடர்ச்சியாக வென்ற இலங்கைப் படையினரால், அவர்கள் நினைப்பது போலவோ அல்லது அவர்க ளின் அரசாங்கம் எண்ணுவது போலவோ போரினை வெல்ல முடியவில்லை.

புலிகளை நெருக்கடிக்குள் தள்ளிய போர், இப்போது, அதனை முன்னெடுக்கின்ற அரசாங்கத்தையே முட்டி மோதி பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்போகிறமைக்கான சாத்தியக் கூறுகள் தென்பட ஆரம்பித்துள்ளன.

களமுனையில் கையோங்குவதால் இராஜதந்திரத்தை வளைத்துப் போடு வதிலும் பார்க்க, இராஜதந்திர நகர்வின் ஊடாக கள முனையில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும்.

இதனைத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நான்காம் கட்ட ஈழப்போரும் கட்டியம் கூறி நிற்கிறது. *

(நன்றி: தமிழ்நாதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கந்தையா தனபாலசிங்கம்
### (இராசலிங்கம்)

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், மின்சாரசபை - சுன்னாகம்)

தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் கடந்த 05.04.2009 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் தையல்நாயகியின் அன்புக் கணவரும் தவரஞ்சிதம், தயாரஞ்சிதம், தனரஞ்சிதம், அம்பிகைதாசன், சிவதாசன், குமரதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வைகுந்தநாதன், ஸ்ரீகாந்தன், சிவகுமார், குமுதினி, விக்னேஸ்வரி, முகுந்தினி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், அமுதலிங்கம், அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினசிங்கம், செல்வநாயகம், காலஞ்சென்ற கனகசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் வசீகரன், பிரதீபன், கௌசிகன், சிவகௌரி, துளசி, வாசுகி, பிரபு, கிருத்திகா, கவிராஜ், சகாணன், தேனகா, குகரூபன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2009) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் காலை 9.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.மணியளவில் கல்கிசை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்,
த.சிவதாசன் (மகன்).
102-5/1, Manning Place, Colombo-06.
T.P:011-2364449
(C/558027)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு, உப்புமடம் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையிலுள்ள, சேவிஸ் ஸ்ரேசனுக்கு அண்மையிலுள்ள, 2 பரப்புடன் சேர்ந்த வீடுவளவு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778575171

## வீடு விற்பனைக்கு

நாவலர் வீதி, கச்சேரி நல்லூர்ச் சந்திக்கு அருகில் கடையுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடுவிற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0602214688/0212229119
(சி/557957) 0775184725

## இறைச்சிக்கோழி விற்பனை

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
செம்மணி பாம்,
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.
(84343)

## மாங்கல்யா திருமண சேவை

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேலை செய்யும் இருபாலாரது, குறிப்புகள் முழு விவரங்களுடன் உண்டு. நம்பிக்கையான, திருப்தியான, துரிதமான சேவை. ஜாதகக் குறிப்புகள் எம்மிடம் சகல இடங்களிலும் இருந்து கிடைத்த வண்ணம் உள்ளன. தேர்வுக்கு சகல நாள்களிலும் ஒரு மணிக்குப் பின் நேரில் தொடர்புகொள்ளலாம்.
தொ.பே.இல.: 021 222 6043 மொ.இல.: 077 1386846
ந.திருவிளங்பர், 90, பட்டநாதர் கோயில்வீதி, நல்லூர் வடக்கு.

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, சைவத்தமிழ் பாடசாலைக்கு அருகில் வீடு கட்டுவதற்கு உகந்த 3¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.P.: 077 4744635
(84425)

# வீதி புனரமைப்பு

நெடுந்தீவு,ஏப்.12

நெடுந்தீவு மேற்கு, கரமத்தை கந்தசுவாமி கோயில் பகுதியில் இருந்து காராப்பிட்டி கடற்கரை வரையிலான பிரதான வீதி புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக இந்த வீதியில் 200 மீற்றர் தூரம் வரையான பகுதி திருத்தியமைக்கப்படும். இப்பகுதியில் காராப்பிட்டி நல்ல தண்ணீர்க் கிணறுகள் அமைந்துள்ளதனால் தினசரி பெரும் எண்ணிக்கையானயான மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்துவதுடன் பவுசர்கள் மூலம் ஏனைய பகுதிகளுக்கான குடிதண்ணீரும் எடுத்துச் செல்லப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு மேற்படி வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (50-11)

# பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.12

சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களிடையே நடைபெற்ற வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி புவேந்தன் பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு விதை தானியங்கள் வழங்கப்பட்டு, அவற்றின் மூலம் பயன்களைப் பெற்ற பயனாளிகளுக்கே இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.(204)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## உற்பத்தி முகாமையாளர் தேவை

தகைமைகள்: விவசாய / விலங்கு விஞ்ஞான சான்றிதழ் அல்லது அதற்கு இணையான / மேற்பட்ட தகைமைச் சான்றிதழுடன் பாலுற்பத்தித் துறையிலும் ஆகக்குறைந்தது ஒரு வருட கால அனுபவம் இருத்தல்வேண்டும்/ நீண்டகாலம் பால்பொருள் உற்பத்தியில் அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

நியமனம்: ஆரம்பத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு நியமனம் வழங்கப்படும்.

சம்பளம்: தகைமைக்கு ஏற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பிணை: நியமனத்தின்போது ரொக்கப்பிணை செலுத்துதல்வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் தங்களது பூரண சுயவிவரத்துடன் தகைமைச் சான்றிதழ்கள் இணைக்கப்பட்டு 27.04.2009ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அரிசிஆலை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
(சி/558033) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

## 30ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
29 ✱ 07 ✱ 1938



மறைவு
14 ✱ 03 ✱ 2009

### அமரர் கந்தையா முருகையா

இந்த மண்ணில் நீண்ட காலம் வாழ்ந்து
எமக்கெல்லாம் வாழ்விற்கு உயர்ந்த வழிகாட்டி
எம்மை அன்புடனும் பண்புடனும் வளர்த்து
பணியாவும் முடிந்ததென்று இறைவடி சேர்ந்துவிட்டீர்
உங்கள் ஆத்மா சிவபதம் கலந்து நிற்க
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"அபிவாசா",
ஐயனார் கோயிலடி, அளவெட்டி வடக்கு. குடும்பத்தினர்.

சிவமயம்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 - 05 - 1932



மறைவு
05 - 04 - 2007

இணுவையூர் அமரர்

### இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம்

சுந்தரத் தீபமாகச் சுடரொளி வீசி நித்தம்
சந்தமும் சான்றோராய் எமை வளர்த்த நின்
பந்தமும் பாசமும் பக்தியும் பரோபகாரமுமாகத்
தந்தனை ஆண்டு இரண்டு அகன்றினும் மறவோம் ஐய!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'செல்வானந்த வாசா',
இணுவில் மேற்கு, இணுவில். குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை சதாசிவம்

கோண்டாவில், நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சதாசிவம் 01.04.2009 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் கணவரும் சிவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் வைத்திலிங்கம், ஞானாபரணம், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான இரத்தினம்மா, செங்கமலம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் 04.04.2009 சனிக்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.வைத்திலிங்கம்
(சகோதரன் -ஓய்வுபெற்ற ஆசிரியர்).
இல.109, நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு. (84350)





ராஜாதி ராஜ
ராஜகம்பீர ராஜமார்த்தாண்ட
லக்கிலாண்ட் பிஸ்கட் மன்னன்
குடும்பத்துடன்
யாழ்.நகர் வாரார்! வாரார்!! வாரார்!!!

நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும் யாழ்.நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக்களில் தரத்தில் அதிஉயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல்தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டுக்கு வெறும் கையுடன் செல்லுவதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கி லாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்,நைஸ்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (Gem) என்னும் பல

Manufactured By:
Luckyland
Biscuit Manufactures
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள் : சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.021 222 2567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கெவர் வாழவோ

சிறுகதை

**யோ.பெனடிக்ற் பாலன்**

யாழ்ப்பாணம், நல்லூரைப், பிறப்பிடமாகக் கொண்ட யோ.பெனடிக்ற் பாலன், அறுபதுகளின் ஆரம்பத்தில் ஈழத்து இலக்கியத்துறையில் பிரவேசித்தவர். சிறுகதை, நாவல், கவிதை மற்றும் நாடகம் ஆகிய பல்துறைகளிலும் ஆக்கங்களைப் படைத்தவர்.

அரச அறிவியலில் சிறப்புக் கலைமாமணிப் பட்டம் பெற்ற இவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டமும் பெற்றவர்.

ஆரம்பத்தில் பல வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பத்திராதிபராகவும், பின்னர் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியவர்.

மலையகத்தில் நீண்டகாலம் ஆசிரியப்பணி புரிந்ததால் மலையக மக்களது வாழ்க்கை குறித்து இவரால் நிறைய எழுத முடிந்தது.

குட்டி, பாலஸ்தீனம் என்னை அழைக்கிறது என்பன இவரது குறு நாவல்கள் ''சொந்தக்காரன்'' என்ற இவரது நாவல் மலையக மக்களது வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டது. தலை விதியைப் பறிகொடுத்தோர், மற்றும் 1995 ஆம் ஆண்டுக்கான சாகித்திய விருது பெற்ற 'விபச்சாரம் செய்யாது இருப்பாயாக' என்பவை இவரது சிறுகதைத் தொகுதிகள்.

அமரராகி விட்டார்.

இவரது 'இங்கெவர் வாழவோ' சிறுகதை இவ்வார இலக்கியப் பொழிலை அலங்கரிக்கிறது.

காம்பராவின் உள்ளோரத்தில் தான் அணிந்திருக்கும் மிலிற்றிக் கோட்டுக்கு மேலால் மார்பில் கைகளை இறுகக் கட்டியவாறு இருந்த சரவணம், கால் நீட்டி, கைகளைப் பின்னால் ஊன்றி இருந்து வேதனைப்பட்டு முனகிக் கொள்ளும் தன் மனைவி தங்கம்மாளை அனுதாபத்தோடு நோக்கியவாறு இருந்தான்.

இரு பெண் பிள்ளைகளும் முன்னால் குந்திக் கொண்டிருந்தன. கைக்குழந்தை தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. மகன் மேகநாதன் எங்கோ போய்விட்டான்.

தங்கம்மாவுக்கு இது பெறுமாதம். பெறுமாதக் கர்ப்பிணியாக இருந்தும் அவள் நேற்றுவரை மலையில் ஏறிக் கொழுந்து எடுத்துக் கொண்டுதான் இருந்தாள். இன்று காலை மலைக்குப் போக எழுந்ததும் அடிவயிறு நோகத் தொடங்கியது. பத்து மணிக்கு மேல் நோவும் உளைவும் அதிகரித்துக் கொண்டது. அவளைத் தோட்ட ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக ஸ்டோருக்குச் சென்று டீ மேக்கரிடம் லொறி கேட்டு வந்து அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் சரவணம். இரண்டு மணியாகியும் லொறி வரவில்லை.

தோட்டாஸ்பத்திரி அரை மைலுக்கு அப்பால் அடுத்த டிவிசனில் இருக்கிறது. கார் பிடிப்பதற்கு அவன் கையில் பணமில்லை. இரவு கடைக்காரனைக் கெஞ்சித்தான மாவு கடன் வாங்கி வந்தான். இன்றுதான் தோட்டத்தில் சம்பளம். பலவாறு யோசித்துக் கொண்டிருந்த அவன் வேறு வழியில்லாமல் தங்கம்மாளை நடத்திக் கூட்டிக்கொண்டு போய் ஆஸ்பத்திரியில் விட்டான்.

ஆஸ்பத்திரியில் இருந்து வரும்போது சரவணத்தின் மனம் மிகவும் சோர்வடைந்திருந்தது. இரு கைகளையும் மார்பின் மேல் இறுகக் கட்டிக் கொண்டு மெதுவாக நடந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது சகல டிவிசன்களிலும் உள்ள தொழிலாளர்கள் சம்பளத்திற்காக பாக்டரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

தங்கம்மாளுக்கு இப்படித் திடீரென்று வயிறு நோகுமென்று அவன் நினைத்திருக்கவில்லை. தங்கம்மாளின் உடலில் நல்லிரத்தம் இல்லையென்பது அவனுக்குத் தெரிந்த உண்மையென்றாலும் தோட்டத்து ''டாக்டர்'' நல்லிரத்தத்துக்குப் ''பிரைவேட்டில் ஊசி போடவேணும் காசு கொண்டு வா'' என்று கூறிய பின்பே அதுவும் மனசில் ஆழமாக உறுத்தியது. இந்த நினைவையெல்லாம் அவனுடைய மனம் ஒரு மூலையில் ஒதுக்கி விட்டு, தங்கம்மாள் அந்த நோவிலும் மறந்து போகாமல் கூறிய வார்த்தைகளைத் தன்னோடு அணைத்துக் கொண்டிருந்தது.

''எது எப்படிப் போனாலுமுங்க, மறந்து போவாமே இந்த மாதம் சம்பளத்தில மவனுக்குப் பொயித்தகத்துக்கு பணங் கொடுத்திடுங்க அவன் நல்லா படிப்பானுங்க; அவன் படிச்சதொரை மாதிரி வரணுங்க''.

தங்கம்மாள் என்ன சொல்வது? அவனுடைய உள்ளத்திலும் அதே எண்ணம்தான் அதிகவேகத்துடன் துடித்துக் கொண்டிருந்தது. சரவணம் மகன் வயிற்றில் இருக்கும்போதே அந்த முடிவு எடுத்திருந்தான். அவனுடைய முதல் இரு பெண் பிள்ளைகளான இராசலட்சுமியும், சானகியும் வீட்டில் இருக்கிறார்கள். அவர்களைத் தோட்டப் பாடசாலைக்குத்தானும் ஒழுங்காக அனுப்ப முடியவில்லை. நம்மைப் போல் எழுத்தறிவில்லாதவர்களாக இருப்பதில் சிறிது துக்கந்தான்.

''சரவணம் நில்லு; ஒரு விஷயம்!''

தன் கால் அடிகளையே பார்த்தவாறு வந்த சரவணம் நிமிர்ந்தான். கறுத்த ரோட்டில் தோட்ட வாத்தி யார் வந்து கொண்டிருந்தார்.

''சலாமுங்க சேர்''.

''சலாம், உன்ரை மகன் மேகநாதனை கவர்மெண்டு ஸ்கூலிலே சேர்த்திட்டியா?''

''ஆமாங்க''.

''நல்லது, அவன் நல்ல கெட்டிக்காரன்; நல்ல மூளைசாலி, கஷ்டப்பட்டென்றாலும் படிப்பிச்சுப் போடு என்ன?''

''சரியுங்க''.

''எங்கே போறாய்?''

''சம்பளத்துக்குங்க''.

''சரி, நான் வாறன். தோட்டத்தில் எல்லோரும் பிள்ளையைப் படிக்கப் போடனும் எண்டு சொல்லுவாங்க; கடைசியில புல்லு வெட்டத்தான் அனுப்புறாங்க; நீ இவனை நாசமாக்கிடாதே!''

''இல்லைங்க சேர்''.

சம்பளத்திற்கு என்று கூறியபோது அவன் மனதில் ஒரு வித பீதி எழுந்தது. அவனும், தங்கம்மாளும் ஒரு மாதமாகக் கொட்டும் குளிரிலும், மழையிலும் கஸ்டப்பட்டு உழைத்த உழைப்புக்கான ஊதியத்தைப் பெறுவதற்கு அவன் மனம் தயங்கிக் கொண்டது. அந்தத் தயக்கம் ஒவ்வொரு மாதமும் ஏற்படுவதென்றாலும் இம்மாதம் அதன் அழுத்தம் அதிகம். இந்த மாதம் மலையில் கொழுந்து வற்றிய காலமென்று கிழமையில் மூன்று, நான்கு நாள்களே வேலை கொடுத்தார்கள். தங்கம்மாள் பதினாலு நாளும், தான் பதினைந்து நாளும் செய்த வேலைக்கு வரும் கூலியில் அரிசி, பருப்பு, மாவுக்கு பிடித்துக் கொள்ளும் பணம் போக கையில் கிடைக்கப் போவதை இரவு முழுவதும் நன்றாகக் கணக்குப் பார்தது வைத்திருந்தான். லயத்தில் உள்ள கடன்காரர்களுக்கும், அரிசிக் கடைக்காரர்களுக்கும், பலசரக்குக் கடைக்காரர்களுக்கும் சம்பள நாளைக் கூறி சமாளித்தாயிற்று. மாதம் முழுவதும் வாங்கிய கடன் தொகையையும் கிடைக்கப் போகும் கூலியையும் வாழ்க்கைச் சுமைகளையும் பாரப்படுத்திக் கொண்ட மனம் அடிக்கடி அச்சத்துடன் விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்த மனமே தோட்ட வாத்தியார் கூறியதையும் விருப்பத்தோடு மீட்டுச் சந்தோஷப்பட்டுக் கொண்டது. மாலை 6 மணி ஆனதும் குப்பி விளக்கில் இருந்து படிக்கத் தொடங்கி விடும் தன் மகனை தன் கண்களுக்குள் வருவித்துக் கொண்டான்.

சம்பளம் வாங்கிக்கொண்டு வரும்போது சாமான்கள் வாங்கி வருவதற்காக குட்டிச் சாக்குகளைக் கையில் கொண்டு ஆண்களும், பெண்களும் அவனைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள். பெண்கள் வெள்ளைத் துண்டைத் தலையில் கொங்காணியாகப் போட்டிருந்தார்கள்.

''இந்த விடியாமூஞ்சிப் பொழைப்பில மனுசன் எப்படித்தான் வாழ்ந்து தொலைக்கிறது!''

ஒரு கிழவி கத்திப் பேசிக்கொண்டு போனதை அவன் காதில் வாங்கவில்லை! அவனும் அவன் யோசனையும். அவன் பௌத்த பாடசாலைப் பக்கமாக வரும்போது மேகநாதன் எங்கிருந்தோ ஓடி வந்தான். ''ஐயா, இந்தப் பயணமும் ஏமாத்திப் போடாதீங்க? எனக்கு பொத்தகம் வாங்கப் பணம் கொடுத்திடனும் நான் ஸ்கூலுக்குப் போகனும் என்ன சொல்றீங்க? இந்தக் கடிதம் நான் பொஸ்டா வருவேன்!''

அவன் தகப்பனின் மிலிற்றிக் கம்பளிச் சட்டையின் ஒரு மூலையைப் பிடித்தவாறு கேட்டான். சில விநாடிகள் மௌனமாக நடந்த அவன், ''சரி போயி, அக்காவோட லயதில் இருந்துக்கோ நான் வாறன்'' என்று சொன்னான். மேகநாதன் மகிழ்ச்சியடைந்து துள்ளியடித்துக் கொண்டு ஓடினான்

சரவணம் கடைத் தெருவையும் கடந்து படிகளால் ஏறி பாக்டரிக்கு முன்னால் வந்து விட்டான். அங்கு சின்னத்துரை மேசையிலிருந்து, கிளார்க் 'செக்'றோலில் பெயர்களை அழைக்க அழைக்க கூலியை எண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தான். தொழிலாளர்கள் நிரையாக மௌனமாக நின்றார்கள். துரைக்கு முன்னால் [illegible] நம் தொழிலாளர்களுடன் அவனும் சேர்ந்து நின்றான். தன் பெயர் அழைப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

மழைக் குணமாக இருந்தது. கூதல் காற்று வேகமாக வீசிக் கொண்டிருந்தது. தேயிலைமலை முதுகுகளில் கருக்கொண்ட மேகங்கள் கொழுத்த எருமைகளைப் போலப் புரண்டு கொண்டிருந்தன. அந்தக் குளிர் காற்றுக்குத் தன் கைகளைக் குறுக்காகப் போட்டு, தோள்களை இறுகப் பற்றிக் கொண்ட சரவணம், மற்றத் தொழிலாளர்களை ஒவ்வொருவராக நோக்கினான். தன்னைப் போலவே அவர்கள் முகங்களும் பிரச்சினைகளால் முனகும் உள்ளங்களின் பிரதிபலிப்பாக மந்தாரமிட்டிருப்பதை அவதானித்தான். தான் மட்டும் அந் நிலையில் இல்லையென்று அவனால் திருப்திபட்டுக் கொள்ள முடியவில்லை. (14 ஆம் பக்கம் பார்க்க....)

# மருத்துவ நூல் எனவும் கொள்ளத் தக்கதே திருக்குறள்

மக்கள் இனத்தின மனத்திற் படர்ந்த நோயை அகற்றி 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' வழிவகுத்த ஒரு நூல் என்பதால் திருக்குறளைஒருமருத்துவநூல்எனவும் அடையாளப்படுத்த இயலும். தாவரத்துக்கும் மக்களுக்கும் உள்ள ஒரு பொதுத்தன்மையை விளக்கும் வகையில் அமைந்த குறள் ஒன்று குறித்து இங்கு நோக்குதல் சாலச்சிறந்ததாகும்.

**இருப்பவர்:இல்லாதவர்**

உலகிடை வாழும் மக்கள் பலதிறப்பட்டவர். புறநலனகளாலும், அக நலனகளாலும் இவ்வேறுபாடு தோன்றுகிறது, புறத்தே உள்ள உறுப்பான செலவம் போன்றஒன்று ஒருசிலரிடம இருப்பதையும், ஒரு சிலரிடம் இல்லாமல் இருப்பதையும் காண்கிறோம். இருப்பவர் இல்லாதவர் என்ற இவ்விருபகுதியையும் தவிர முன்னர்இருந்து இப்பொழுது இழந்தவர் என மூன்றாவது ஓர் இனத்தையும் காண்கிறோம். இன்று புற உறுப்பாகிய பொருட் செல்வத்தைப் பெற்றிருப்பவரை என்றுமே இவ்வாறு பெற்றிருப்பர் என்றும் கூற முடியாது. இன்றில்லாதிருப்பவரை என்றுமே இல்லாது இருப்பவர் என்றும் கூறமுடியாது. முன்னர் இருந்து இப்பொழுது இழந்தவரைக் காண்கிறோமாகலின் இன்று இல்லாதிருப்பவர் நாளை உடையவராதலுங் கூடும். தாவர உலகில் இக்காட்சியை என்றுங் காண்கிறோமன்றோ? இலையுதிர் காலத்திற் பட்டுப்போனவை போலக் காட்சி நல்குகின்ற மரங்கள் மீண்டும் தழைத்து அழகிய காட்சி நல்குவதை யாரோ அறியாதார்? பழம் தோன்றிய நிலையிற் பூக்கள் தோன்றுவதில்லை. ஆனால், மறுபடி அச்செடியிற பூக்கள் பூவா என்று யாரேனும் கூறிவிடமுடியுமா? அவ்வாறு ஒருவர் கூறினாலும் அறிவுடைப் பெருமகள் அதனை ஏற்றுக் கொள்வார்களா! இலையுதிர் காலத்திற் காட்சி தரும் மரம், பட்டமரம் போன்ற நினைவை உண்டாக்குகின்றது. ஆனாலும் அதனைப் பட்டமரம் என்று ஒருவர் கூறினால் யாரும் ஏற்றுக் கொள்வதில்லையன்றோ?



**எதனைக்கொண்டு மதிப்பிடுவது?**

அதே போன்று மனிதர்கள் நிலையைக் கொண்டு அவர்களை மதிப்பிட வேண்டுமாயின் எதனைக் கொண்டு மதிப்பிடுவது? புற உறுப்பான செல்வத்தைக் கொண்டு மதிப்பிடலாமா? அவ்வாறு மதித்தால் அது நிலையான மதிப்பாகுமா? இன்று பொருளுடையார் என்ற காரணத்தால் ஒருவரை உயர்ந்தவர் என்று மதிப்பிட்டு விட்டால் நாளை அவர் இல்லாதவராக ஆகி விட்டால் நம் மதிப்பீடு என்ன ஆகும்? எனவே அது கொண்டு மதித்தல் கூடாது என்பது பெறப்பட்டது. மேலும் இல்லாதவர் உடையவர் ஆதலும் உண்டு. இலையுதிர் காலத்து இழந்த முதிர்ந்த பழைய இலைகளைக் காட்டினும் அழகிய சிறந்த புதிய இலைகளை மீண்டும் செடிகளும், மரங்களும் பெறுவதுபோல் இன்று பொருளற்றார் நாளை பொருட்செல்வம் பெற்றுத் திகழ்தலும் உண்டு.

ஆனால் வேரிற் பழுதுபட்டமரம் தவறாமல் அழிந்துவிடுவது போல, மனிதரிற் சில உறுப்புக்களிற் பழுதுபட்டவர் அழிந்தே விடுவர். இதனைக் கூற வந்த வள்ளுவர் மிக அழகான ஒரு சொல்லாற குறிப்பிட்டுச் சொல்கிறார்.

**''பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள் அற்றார் அற்றார்மற்று ஆதல் அரிது''**

குறளின் பொருள் எளிதில் விளங்கக் கூடியதே. பொருள் செல்வம் அற்றவர்கள் மற்றொரு காலத்தில் மீண்டும் அதனைப் பெற்று விளங்குதல் கூடும். ஒருகாலத்து இன்மை (இலையுதிர்ந்த அல்லது பூவாத காலத்து மரம்போல) என்றும் இன்மையை உணர்த்தாது. ஒருகாலத்து உடையவராக (தளிர்த்துப் பெற்றுத் திகழும் மரம்போல) அவர் ஆதலும் கூடும். ஆனால் அருள் அற்றவர்கள் மீண்டும் ஒருகால் அதனை அடைய முடியும் என்று கூறமுடியாது. அதனை வலியுறுத்திக் கூறவந்த ஆசிரியர் 'அருள் அற்றார் அற்றார்' என்று கூறி நிறுத்தாமல் 'மற்று ஆதல் அரிது'என்று இரண்டாம் முறையுங் கூறிச் செல்கிறார்.

கருத்து:- அ.ச.ஞானசம்பந்தன்

## குறைகள் இல்லா வாழ்வு வேண்டும்

எங்கும் இன்பம் மலர்ந்திட வேண்டும்
எதிலும் துன்பம் அகன்றிட வேண்டும்
பொங்கும் மகிழ்வு பெருகிடல் வேண்டும்
பொய்மை யென்றும் அகன்றிட வேண்டும்

உழுதுண்டு வாழ்வோர் உயர்ந்திட வேண்டும்
உத்தமராய் வாழ நாம் முயன்றிடல் வேண்டும்
ஒழுக்கம் என்றும் வளர்ந்திடல் வேண்டும்
ஒற்றுமை என்றும ஓங்கிடல் வேண்டும்

குற்றம் இல்லா உலகம் வேண்டும
குறைகள் இல்லா வாழ்வு வேண்டும்
பெற்றோரை மகிழ்வுற வைத்திடல் வேண்டும்
பேணி அவரை நாம் காத்திடல் வேண்டும்


மூத்தோர் வார்த்தை மதித்திடல் வேண்டும்
முனைப்பாய் அவர்சொல் கேட்டிடல் வேண்டும்
கூத்தன் அடியிணை போற்றிடல் வேண்டும்
குவலயம் போற்றிட நாம் வாழ்ந்திட வேண்டும்

படிக்கும் பள்ளியை மதித்திடல் வேண்டும்
பாங்காய்க் கற்று நாம் உயர்ந்திட வேண்டும்
எங்கள் மொழியது உயர்ந்திட வேண்டும்
எதிரிகள் இல்லா நிலையது வேண்டும்

**செல்வன் க.வரோதயன்**
(யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பொருளாதார சரிவு நிலைமையைச் சீர்செய்து நிலைநாட்ட அனைத்து நாடுகளும் ஒன்றிணைய வேண்டும்



இப்போது நடந்து முடிந் துள்ள உச்சிமகாநாடு மிக பயனுள்ளதொரு சந்திப்பாக இருந்துள்ளது. உலக பொருளாதார மீள் எழுச் சிக்கான எமது முயற்சியில் இது திருப்புமுனையாக அமையும் என்று நான் நம்புகின்றேன்.

எதுவானாலும் லண்டன் உச்சி மகாநாடானது வரலாற்று முக்கியத்துவமானது. காரணம் நாம் எதிர்கொள்ளும் சவால்கள் அவ்வளவு பெரிதாகவும் அகன்ற விரிவாகத்தையும் கொண்டவையாக வுள்ளன. அத்துடன் மகாநாட்டு நடந்துள்ள காலமும் அவைகளில் நாம் கொண்டுள்ள அக்கறையின் தார்ப்பரியமும் முக்கியமானவை. சவால் மிகத் தெளிவாகவே உள்ளது. உலக பொருளாதாரம் சுருங்கிக்கொண்டிருக்கிறது. வணிகத் துறையும் சுருங்குகின்றது. வேலையில்லாமை அதிகரித்து வருகின்றது. சர்வதேச நிதி அமைப்பானது பெரும்பாலும் உறைந்துபோய்விட்டது. ஆனால் நாம் எதிர்கொண்டுள்ள நெருக்கடியை இந்த உண்மை நிலைமைகள் எடுத்துக்காட்டுவதாய் இருக்காது. ஏனென்றால் அவைகளுக்குப் பின்னால் எத்தனையோ எண்ணிக்கையான மக்கள் முகம் கொடுக்கும் வேதனைகளும் நிச்சயமற்ற தன்மைகளும் இருக்கின்றன.

அவைகளை அமெரிக்காவில் காண்கின்றோம். இங்கே லண்டனில் காண்கின்றோம். உலகம் முழுவ திலும் அதனைக் காண்கின்றோம். குடும்பங்கள் தமது வீடுகளை இழந்து வருகின்றன.

**கடந்த 02 ஆம் திகதி லண்டனில் நடந்து முடிந்த ஜி 20 நாடுகளின் உச்சி மகாநாட்டையடுத்து அமெ ரிக்க அதிபர் பராக் ஒபாமா ஊடகவியலாளர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டார். உலகம் முழுவதிலுமிருந்து வருகைதந்திருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் அமெரிக்க அதிபர் உரை நிகழ்த்தினார். அந்த உரையிலிருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.**

தொழிலாளர்கள் தமது தொழில்களையும் சேமிப்புகளையும் இழந்து வருகின்றார்கள். மாணவர்களின் கனவுகள் பலிக்காது போகின்றன. அநேகர் அனேக மானவற்றை இழந்து விட்டார்கள்.

**தொழில் இன்மை**

அமெரிக்காவில் தொழில் இல்லாதவர்களின் எண்ணிக்கை இன்று வெளியிடப்பட்ட அறிக்கை யின்படி இருபத்தாறு வருடங்களில் மிக உயர்ந்த புள்ளி விபரமாகும். இது தொடர்பாக எமது பிரஜைகள் அனைவரும் பாடுபடவேண்டும். அவசரத் தன்மையுடன் செயல்படவேண்டும் என்று கருது கின்றோம்.

முன்னெப்போதையும் விட நமது பொருளாதாரங்கள் மிக நெருக்கமாக இணைந்துள்ள இன்றைய கால கட்டத்தில் முழு உலகமே மிக மோசமான பொருளாதார இறங்கு முகத்துக்குள்ளாகியுள்ளது. இன்றைய நாளில் உலகத் தலைவர்கள் முன்னெப்போதையும் விட மிகவிரிவான மற்றும் ஒருங்கிணைந்த செயற்பாட்டுக்கு முன்வந்துள்ளார்கள்.

**கடந்தகாலத்தில் ஏற்பட்ட சவால்கள்**

கடந்த காலத்தில் இப்படியான உலக சவால் களை எதிர்கொண்டபோது உலகம் செயல்படுவ தில் மிக தாமதம் காட்டியது. மக்கள் இதற்காக பெரும் எடுப்பில் விலை கொடுக்க நேர்ந்தது.

இன்று நாம் வரலாற்றிலிருந்து பாடம் படித் துக்கொண்டுள்ளோம். பலவாரங்கள் ஆயத்தம் செய்து இரண்டு நாள்கள் கவனமாக பேச்சுவார்த் தைகள் நடத்தி நாங்கள் வளர்ச்சியை நிலைநாட்டவும் இதுபோன்ற நெருக்கடிகள் மீண்டும் ஏற்ப டாதிருக்கவும் பல தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முன்னெப்போதும் இல்லாதவகையில் தீர்மானித்திருக்கின்றோம்.

இதில் முக்கியமான அம்சங்களில் ஒன்று வளர்ச் சிக்கும் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும் உறுதி கொண்டுள்ளோம்.வளரும் நாடுகளுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக துணிச்சலான முடிவு களை எடுத்துள்ளோம். இதன்மூலம் இறங்குமுகம் காட்டும் சந்தை நிலைகளில் நாம் தங்கியிருக்க நேராது சர்வதேச நாணயத்தின் கடன் வழங்கும் திறமையை மும்மடங்காக்கியுள்ளது ஜி 20 அமைப்பு. பல்வேறு வளர்ச்சி வங்கிகள் மூலம் கடன்கள் வழங்க இதனால் சாத்தியமாகும். இது எல்லா நாடுகளிலும் கொள்முதல் சக்தியை அதிகரிப்பதுடன் சந்தைகளையும் விரிவாக்குவதாய்இருக்கும். உலகின் பிரதான பொரு ளாதாரங்களுக்கிடையிலான ஒத்துழைப்பானது சிறந்த சந்தைகளுக்கான எமது ஆதரவை காட்டுகிறது.

எதிர்காலத்தில் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக நிதி நிறுவனங்களில் வெளிப்படைத் தன்மை யையும் மூலதனப் பாதுகாப்பையும் அதிகரிப்பதற்கு நாங்கள் சம்மதித்துள்ளோம். முறைப்படியாக முக்கிய நிறுவனங்கள் சந்தைகள், உற்பத்திகளுக்கு மேற்பார்வைகளை வழங்கவுமிருக்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்தையும் உலக வங்கியையும் சீர் அமைத்து விரிவுபடுத்தவு மிருக்கின்றோம்.அந்த வகையில் அவை மேலும் அதிக திறமையோடும் வினைத் திறனோடும் பிரதிநிதித்துவத்தோடும் செயல்படக்கூடும்.

மேலும் ஜி 20 அமைப்பின் அதிக கருத்து வெளிப்பாட்டுக்கு சந்தர்ப்பம் இல்லாத உறுப்பி னர்களைப் பாதுகாக்கவும் விரும்புகின்றோம். இந்த முயற்சியில் அமெரிக்கா தலைமை வகித்து வழிகாட்டத் தயாராய் இருக்கிறது. பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்கள் பிரிவினருக்கு உடனடி நிவாரணமாக 44.8 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கும் அடுத்துவரும் நாள்களில் எமது காங்கிரஸ் சபையுடன் இணைந்து செயற்பட நான் விரும்புகின்றேன். ஆபிரிக்காவிலிருந்து லத்தீன் அமெரிக்கா வரையில் இந்த உதவி நீளும். ஒரு பில்லியன் டொலருக்கு மேற்பட்ட தொகை உணவுப் பாதுகாப்பு இரட்டிப்பு உதவி வழங்கப்படும். ஏழ்மையிலிருந்து தங்களை மேல் உயர்த்திக் கொள்வதற்கு விரும்பும் மக்களுக்கு தேவையான எல்லாத்தையும் நாம் வழங்குவோம்.

இதெல்லாம் கருணையால் செய்வதென்பதல்ல. இவை எல்லா நாடுகளுக்குமான எதிர்கால சந்தை ஏற்பாடுகள் எதிர்கால உலக பொருளாதார வளர்ச் சிக்கான முனைப்பாளர்களுக்கான உதவிகளாகும்.

இந்த உச்சிமாநாட்டின் வெற்றிக்குழைத்த பிரதமர் கோர்டன் பிரவுன் மற்றும் அவரது குழுவினர் மற்றும் உலகம் முழுவதையும் சேர்ந்த எனது சகாக்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களுக்குத் தெரியும் 20 நாடுகளின் தலைவர்களால் தங்களுக்கிடையிலான முரண் பாடுகளைத் தீர்த்துக்கொள்வதென்பது கடினமான காரியம். எங்கள் எல்லோருக்கும் தேசிய கொள் கைகள் இருக்கின்றன. எமக்கு அரசியல் கலாசாரம் இருக்கின்றது. ஆனால், எமது மக்கள் நாம் எல்லோரும் ஒன்றாக வரவேண்டும் என்று விரும்பு கிறார்கள். ஆக ஜி 20 மீண்டும் இந்த இலையுதிர் காலத்தில் கூடுவதற்குத் தீர்மானித்திருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இதுதான் ஆரம்பம் என்று நான் நம்புகின்றேன். எமது பிரச்சினைகள் ஒரே சந்திப்பில் முற்றுப்பெறப்போவதில்லை. இரண்டு கூட்டத்திலும் முடிவுறமாட்டாது.

**இருதரப்பு பேச்சுகள்**

பல தலைவர்களுடன் நான் இருதரப்புப் பேச் சுக்களை நடத்தியுள்ளேன். பொருளாதார மீட்சி பற்றியும் வளர்ச்சி பற்றியும் நாங்கள் பேசினோம். இருதரப்பு வேலைகளை முன்னெடுப்பது தொடர்பாக பல பிரச்சினைகள் பற்றி பேசினோம்.

**அணு ஆயுத குறைப்பு**

அணு ஆயுத அச்சுறுத்தலை குறைப்பது எப்படி என்பது பற்றி ஆராய்ந்தோம். வடகொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தலுக்கு ஒருமைப்பாடான செயல்பாடுபற்றி ஆராய்ந்தோம். பயங்கரவாதத்தை எவ்வாறு திருப்பி அனுப்புவது ஆப்கானிஸ்தானை எவ்வாறு ஸ்திரப்படுத்துவது காலநிலை மாற்றகத் தின் தாக்கத்திலிருந்து நமது கோளத்தை எவ்வாறு காப்பாற்றுவது என்பது பற்றியெல்லாம் ஆராய்ந்தோம். இவ்வாறான ஏராளமான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது தொடர்பாக யதார்த்தமான நீடித்து நிற்கக்கூடிய வளர்ச்சி தொடர்பாக எம்மால் அடித்தளமான நடவடிக்கைகள் எடுக்க முடியாதுள்ளது.

இறுதியாக ஒருமித்த செயற்பாடு இல்லாமல் 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள முடியாது. எப்பொழுதுமே சம்மதிக்க வைப்பது என்பது ஒருபோதும் இலகுவாக இருக்கப்போவதில்லை. முடிவுகள் விரைவாக வந்து சேரும் என்பதில்லை.

என்னைப் பொறுத்தவரை கருத்துகளை வலிந்து புகுத்துவதைவிட வித்தியாசமான கருத்துகளையும் ஒருமைப்பாடான கருத்துகளை உருவாக்குவதையும் நான் மதிக்கின்றேன்.

## ஜி 20 உச்சி மாநாட்டுக்குப் பிறகு ஊடகவியலாளர்கள் மத்தியில் அமெரிக்க அதிபர் தெரிவித்த கருத்துக்கள்

அந்தவகையில் தான் கடந்த சில தினங்களில் நாம் முன்னேற்றம் கண்டோம். அவ்வாறுதான் வரும் மாதங்களிலும் வருடங்களிலும் நாம் முன்னேறுவோம் எமது நோக் கங்களை நிலை நாட்டுவோமாக. எமது நாட்டில் நான் அடிக்கடி புதியயுக பொறுப்புகள் பற்றி பேசி வந்திருக்கின்றேன். இந்த யுகமானது எமது எல் லைப் பிராந்தியத்துடன் முடிவடைந்துவிடக் கூடாது என்று நான் நம்புகின்றேன்.

மேலும் மேலும் ஒன்றோடொன்று இணைந்து செல்கின்ற இன்றைய உலகில் எமது பொது சவால்களைத் தீர்த்துக்கொள்வதில் ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கு எம் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கின்றது. இதற்கு அதிக காலம் எடுக்கும் என்றாலும் நாம் எல்லோரும் காலத்துக்கு ஏற்ப எமது அறிவுடன் செயல்படுவோமா னால் உலக சுபீட்சத்தை எம்மால் மீளவும் கட்டியெழுப்ப முடியும் என்று நான் நம்புகின்றேன்.

இதையடுத்து குழுமியிருந்த நிருபர்களின் கேள் விகளுக்கு அதிபர் ஒபாமா விடையளிக்கத் தொடங் கினார்.கருத்தாழமும் நகைச்சுவையும் கலந்ததாக பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது.

**இந்திய பிரதமர் ஆச்சரியமான மனிதர்**

ரைம்ஸ் ஒப் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்ட நிருபருக்கு அதிபர் ஒபாமா பதிலளிக் கையில் கூறியது:

உங்கள் பிரதம மந்திரி மிகவும் ஆச்சரியமான மனிதர். நான் நினைக்கிறேன் அவர் ஒரு அறி வாளி, கண்ணியமானவர். இந்தியாவை வழிநடத்துவதில் சிறப்பாக பணியாற்றியுள்ளார். பிரதமராய் வந்த பிறகு மட்டுமல்ல அதற்கு முன்னரும் பொருளாதாரத்தில் மகோன்னத வளர்ச்சி பாதையில்- அது ஆச்சரியமானது - இது உலகம் முழுவதற்கும் என்று நினைக்கின்றேன் -என்றார் ஒபாமா.

-சிபெரு-



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




மூவரையும் கொல்லப்போவதாகக் கூறிய மந்திரக்கிழவி அடுத்து என்ன செய்வதென்று ஆழ்ந்து யோசித்தாள். தன்னுடைய மாயக்கண்ணாடிக்கும் புலப்படாமல் அவர்கள் மூவரும் எப்படி மறைந்து கொண்டார்கள் என்பது அவளுக்குப் புரியவில்லை. மந்திரக்கிழவி சிந்தித்தபடியே குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருப்பதைக் கண்ட ராட்சதர்கள் தம்மை எப்படித் தண்டிப்பது என்று அவள் யோசிப்பதாக எண்ணி, இன்னும் பயந்து போயினர்.

குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருந்த மந்திரக்கிழவியின் கால்களில் ஏதோ ஒட்டிக் கொண்டது போல இருந்தது. மெதுவாகக் குனிந்து கால்களைப் பார்த்தாள். காலில் சிறிதளவு மண் ஒட்டியிருந்தது. ஏதோ சந்தேகம் வரவே மாளிகையின் தரைப்பகுதியை அவள் இன்னும் கூர்ந்து நோக்கினாள். மாளிகையின் பிரதான கதவினருகே திட்டுத் திட்டாக மண் சிந்தியிருந்தது. அந்த மண்ணை: கைகளில் எடுத்தாள் கிழவி.



மண் கையிலிருந்த பகுதி கறுப்பாக மாறத் தொடங்கியது. ''இது என்னுடைய சக்தியின் தன்மைக்கு அப்பாற்பட்ட அரியவகை மண்'' என்று தனக்குத்தானே கூறிக் கொண்டாள். பிறகு திடீரென அந்த மண்ணை ஒரு ராட்சதன் மீது தூவி விட்டு, உடனேயே மாயக் கண்ணாடியிடம் ஓடிச் சென்றாள்.

''ஏய்! மாயக்கண்ணாடியே! வாசலில் நிற்கும் இந்த அடிமைகளை ஒருமுறை காட்டு'' என்று கூறினாள்.

அவளது கட்டளைப்படி இரு ராட்சதர்களையும் கண்ணாடி காட்டியது. ஆனால் மண் தூவப்பட்ட ராட்சதனின் ஒருசில உடற்பகுதிகளே கண்ணாடியில் தெரிந்தன. இதனைக் கண்ட மாயக்கிழவியின் முகத்தில் கொடூரமான புன்னகை ஒன்று தோன்றியது. *(தொடரும்)*

# அதிஷ்டத்தை தொலைத்தவன்

ஒரு சோம்பேறி அதிஷ்ட தேவதையிடம் அதிஷ்டத்தைத் தேடிச் சென்றான். அவன் வழியில் சென்று கொண்டிருக்கும்போது ஒரு வழுக்கைத்தலை ஓநாயைக் கண்டான். அந்த ஓநாய் அவனைப் பார்த்து ''நீ எங்கே செல்கிறாய்?'' எனக்கேட்டது. அதற்கு அவன் ''நான் அதிஷ்ட தேவதையைத் தேடிச் செல்கிறேன்'' என்றான். அதற்கு ''எனது தலையில் மயிர் முளைக்க என்ன செய்ய வேண்டும் எனத் தேவதையிடம் கேட்டுவா'' என ஓநாய் கூறியது. அதற்கு அவனும் 'சரி' எனக் கூறிச்சென்றான். சிறிது தூரம் சென்றதும் ஒருமுந்திரித்தோட்டம் குறுக் கிட்டது. அது அவனைப் பார்த்து ''நீ எங்கே செல்கிறாய்'' எனக் கேட்டது. அதற்கு அவன் ஓநாயிடம் கூறிய அதே பதிலைக் கூறினான். அதற்கு முந்திரித்தோட்டம் கூறியது ''எனது பழங்கள் புளிப்பாக உள்ளது இனிப்பாக்க எனன செய்யலாம் எனக்கேட்டு வா'' எனக் கூறியது அதற்கும் அவன் 'சரி' எனக் கூறிச்சென்றான்.

கடைசியில் அதிஷ்ட தேவதையைச் சந்தித்தான் அவன். முந்திரித் தோட்டமும் ஓநாயும் கேட்டதைக் கூறிவிட்டு அதன்பின் தன் பிரச்சினையைக் கேட்டான். அதற்கு தேவதை அவர்கள் இருவருக்கும் தீர்வைச் சொல்லி விட்டு, சோம்பேறிக்கு கூறியது : ''உனது அதிஷ்டம் வழியிலேயே இருக்கின்றதென'' அவன் தேவதைக்கு நன்றி கூறிவிட்டுச் சென்றான். வழியில் முந்திரித் தோட்டத்தை சந்தித்து ''உன் அடியில் தங்கப் புதையலுண்டு அதை யாருக்கும் கொடுத்தால் பழங்கள் இனிக்கும்'' என கூறினான். அதற்கு முந்திரித்தோட்டம் கூறியது. அப்புதையலை ''நீயே எடுத்துக் கொள்'' என்றது. அதற்குச் சோம்பேறி ''என் அதிஷ்டம் வழியில் இருக்கிறது'' எனக் கூறிவிட்டுச் சென்றான். பின் ஓநாயைச் சந்தித்து ஓநாய்க்கு கூறினான். ''நீ யாராவது சோம்பேறியின் ஈரலைத் தின்றால் உனக்கு மயிர் முளைக்கும்'' என கூறினான். சோம்பேறிக்கு வழியில் நடந்ததை ஓநாய் அறிந்தது. ''இவனே ஒரு சோம்பேறி இவன் இருந்து பயனில்லை'' எனக்கூறி சோம்பேறி மீது பாய்ந்து, அவனது ஈரலைத் தின்றது. கடைசியில் சோம்பேறி அதிஷ்டத்தைத் தொலைத்து இறப்பைத் தேடினான். எனவே சோம்பேறிபோல் நாமும் வாழாமல் புத்திசாலியாக இருந்தால் அதிஷ்டம் எம்மைத் தேடிவரும்.

- **மு.வேணுஷா**, தரம் 8A, யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.




## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? - 11

1. இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் பெயர் என்ன?
2. ஐ.பி.எல். - இருபது - 20 போட்டிகள் இம்முறை எங்கு நடைபெற உள்ளன?
3. பிரிட்டிஷ் பிரதமரின் பெயர் என்ன?
4. இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானின் இயற்பெயர் என்ன?
5. மாயத்தீவு மந்திரக்கிழவி தொடரில் வரும் இளவரசியின் பெயர் என்ன?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 22.04.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

### விடை தெரியுமா?-09 சரியான விடைகள்

(1) ந.சத்தியபாலன்.
(2) இங்கிலாந்து.
(3) பிரைன்லாறா.
(4) செக்கு.
(5) யாழ்.மத்திய கல்லூரி.

### பரிசுபெறுவோர்

01. தே.சாகுஜன்,
*தரம் - 8, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.*
02. சி.அனோஜன்,
*தரம் - 6E , யாழ்.இந்துக் கல்லூரி.*
03. அ.ஜெனோசன்,
*தரம் - 7A, புனித பத்திரிசியார் கல்லூரி.*
04. சி.அகன்யா,
*தரம் - 8E , யாழ்.இந்து மகளிர் கல்லூரி.*
05. பா.அம்புயன்,
*தரம் - 8A , புனித பத்திரிசியார் கல்லூரி.*
06. ஒ.நிதுசன்,
*தரம் - 8C, யாழ்.இந்துக் கல்லூரி.*

குறிப்பு:
விடை தெரியுமா பகுதியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்குகொள்ளவும். விடைத்தாள்களுடன் சிறுவர் கதிர் விண்ணப்பப் படிவம் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும். விடைத்தாளுடன் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களை மறக்காது குறிப்பிடுங்கள்.

## பள்ளிக்கூடம்



பள்ளிக்கூடம் சென்று நாம்
பாடம் படிக்கச் செல்லுவோம்
குரு தந்த படிப்பினால் - உயர்ந்து
நாங்கள் வளர்ந்திடுவோம்

பள்ளிக்கூடம் சென்று நாம்
ஆசிரியர் சொற்படி நடந்திடுவோம்
ஒழுக்கமுள்ள பிள்ளையாக நல்ல
பாடங்களையும் கற்றிடுவோம்

பள்ளிக்கூடம் சென்று நாம்
முத்தான குழந்தைகளாகப்
முதல் மணி அடிக்க முன் வகுப்பில் போய் இருப்போம்
பள்ளிக்கூடம் சென்று நாம் அறிவை வளர்த்திடுவோம்

**ப.பிரணவன்**, தரம் 7 B,
புனித பத்திரிசியார் கல்லூரி.

## நட்பு

நண்பிக்காக உயிர் கொடுப்பது
ஒன்றும் கஷ்டமில்லை
ஆனால் உயிர் கொடுக்கும் அளவிற்கு
நண்பிகள் கிடைப்பது தான் கஷ்டம்

**த.துஸ்யா**, தரம் - 9
யாழ்.கொழும்புத்துறை
இந்து மகா வித்தியாலயம்.

## முயற்சி

1. முயன்று பார் மனிதா
உன்னால் முடியும்
எழுந்து வா சண்டையை நிறுத்தி
சமாதான ஒளியை ஏற்றிடலாம்
2. துணிந்து நில் மனிதப்
துன்பங்களைக் கூட
மன உறுதியால்
துவம்சம் செய்யலாம்

**போ.யசோதா**, தரம் - 8 B,
யா/வட இந்து மகளிர் கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-....................................
தரம் :-....................................
பாடசாலை :-....................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## மாணவர் தூரிகை




**சி.சிவறாயன்**, தரம் - 9,
யா/கீரிமலை, நகுலேஸ்வரா, மகா வித்தி.



**சி.சிவதர்சிகா**, தரம் - 9 A,
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.




**நா.மதன்ராஜ்**, தரம் - 5,
யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி.



**ச.திவிஜா**, தரம் - 8 B,
யா/மகாஜனக் கல்லூரி.



**தி.ஆன்சிஸ்ரா**, தரம் - 7 D,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



**இ.கவிராஜ்**, தரம் - 5,
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி.



**கி.அர்ச்சிகா**, தரம் - 2 B,
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.



**ஒ.அபிராமி**, தரம் - 1,
யா/தொல்புரம் அ.மி.த.க.பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலையும் மனதையும் புனிதமாக்கும் மருத்துநீர் தேய்த்து நீராடிப் புத்தாண்டை வரவேற்போம்

இந்துக்களின் திருநாளாம் சித்திரை வருடப் பிறப்பன்று விஷு புண்ணிய காலத்தில் மருத்துநீர் தேய்த்து நீராடுவது எம் முன்னோர்களால் தொன்று தொட்டு கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஒரு நடைமுறையாகும்.

இன்றைய நிலையில் எம்மில் எத்தனை பேர் இவ்வழக்கத்தை முறையாகப் பின்பற்றுகின்றோம்? எம்முன்னோர்கள் தங்கள் வாழ்வின்அனுபவங்களை வைத்து எமக்குச் சில நடைமுறைகளை விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அந்தவகையில் பல குளியல் முறைகள் எம்முன்னோரால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அவற்றில் எண்ணெய்க்குளியல், மூலிகைக் குளியல், சூரியக்குளியல், மண் குளியல் எனப் பல்வேறுபட்ட குளியல் முறைகளை நம் முன்னோர் எம்மத்தியில் விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இவற்றில் குளியல் முறைகள் குறைந்தது வாரத்தில் ஒருமுறையேனும் நாம் மேற்கொள்வது எமது ஆரோக்கிய வாழ்விற்கு நல்லதாகும். ஆனால், நாம் இந்த வருடப்பிறப்பு நாளிலாவது அதைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும் என்ற நிலையில் இன்றும் பின்பற்றுவது வரவேற்கத்தக்கதாகும்.

சித்திரை வருடப்பிறப்பானது தனியே தமிழர்நாம் மட்டும் கொண்டாடும் விழா அல்ல. இது எமது சகோதர இனமான சிங்களவர்களாலும் கொண்டாடப்படுவதாகும். அத்தினத்தன்று, சிங்களவர்கூட எண்ணெய் வைக்கும் சடங்கினை மதகுரு முன்னிலையில் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கதாகும்.

இதே நடைமுறையிலேயே, மூலிகைக் குளியல் முறையில் புதுவருட தினத்தன்று தமிழர்கள் அதாவது இந்துக்கள் தலைக்கு ''மருத்து நீர்'' வைத்துக் குளிப்பது வழக்கம்.

மருத்து நீர் ஒரு மருத்துவ நீராகும். இதில் பல்வேறுபட்ட மருத்துவ முக்கியத்துவமான மூலிகைகள், ஜீவப்பொருள்கள் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இம் மருத்து நீரைப் புதுவருட தினத்தன்று தலைக்குத் தேய்த்தபின் அவ்வருடத்திற்கான இலையை அதாவது வரப்போகின்ற வருடத்திற்குரிய இலையைக் காலிலும், முடிந்துபோகின்ற வருடத்துக்குரிய இலையைத் தலைக்கும் வைத்து நீராடவேண்டும் என்பர். இதற்காக ஒவ்வொரு வருடமும் இலைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துகின்றனர். உதாரணமாக:- இலவு, விளாத்தி, கடம்பு, ஆல், வேம்பு, கொன்றை, புங்கு, கல்லால், அரசு முதலிய இலைகளைப் பயன்படுத்துகின்றனர்.

மருத்துநீரைத் தயாரிக்கவென சேர்க்கப்படும் மூலிகைகளை எடுத்துக் கொண்டால், அவை இருமல், காய்ச்சல் மற்றும் கண் நோய்கள், தோல் வியாதிகள் யாவற்றையும் தீர்க்கக் கூடியவையாகவும், உடலின் சூட்டைத் தணிக்கத் தக்கவையாயும் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

அதோடு தேகக் குளிர்ச்சியையும், நறுமணத்தையும், புத்துணர்ச்சியையும் கொடுக்க வல்லனவாகவும் உள்ளன. மருத்துநீரில் சேர்க்கப்படுகின்ற மூலிகை, ஜீவச்சரக்குகள்;

**பூக்களில் - தாழம்பூ, மாதுளம் பூ, தாமரைப்பூ, குங்குப்பூ.**
**இலைகளில் - வில்வமிலை, பீர்க்கமிலை.**
**சமூலங்களில் - விஷ்ணுகிராந்தி, அறுகு, சீதேவியார் செங்கழுநீர்.**

இவற்றுடன் மஞ்சள், சுக்கு, மிளகு, திப்பலி, பச்சைக்கற்பூரம் மற்றும் பால், கோசலம், கோமயம் (சாணம்), கோரோசனை, என்பவற்றைச் சுத்த நீரிலிட்டுக் கொதிக்க வைத்து தலைக்கு வைத்து முழுகுதலே மருத்துநீர் மூலிகைக்குளியலாகும்.

மருத்து நீரின் மகத்துவம் குறித்த செய்யுள் ஒன்றின் இறுதி வரியில் ''மருத்து நன்னீரானனைக்கச் சிரசைத் துயராறுமே'' என்று மருத்து நீரின் மேன்மையைக் கூறியுள்ளனர். அதாவது உடலிற்கு உயர்வானதும் முக்கியமானதும் தலை. இத்தலையில் ஏற்படுகின்ற நோய் என்ற துயரை நீக்கும் - அறுக்கும் தன்மை கொண்ட நல்ல நீராம் இந்த மருத்து நீரெனக் கூறியுள்ளனர்.

இவ்வாறான மருத்துநீரில் சேரும் மூலிகை, ஜீவப் பொருள்களின் குணங்கள் இருக்குமிடத்து, அதனைத் தலையிலிட்டு குளித்தால் எமது உடல் ஆரோக்கியம் மேம்படும்.

அனைத்து மூலப்பொருள்களின் குணங்களையும் இணைத்துப் பார்க்குமிடத்து, தேகச்சூட்டைத்தணிப்பதும், இருமல், காய்ச்சல் மற்றும் தோல் வியாதிகளைப் போக்க வல்லதும், தலையைக் குளிர்த்துவதால் புத்துணர்சியையும், தேகக் குளிர்மையையும் ஏற்படுகின்ற தன்மை கொண்டது இந்த மருத்து நீர் என்ற முடிவுக்கே வரலாம்.

மருத்துநீர் என்ற சரியான பெயருக்கு உரிய இந்நீரை எம் முன்னோர்கள் தம் அனுபவத்தில் பயன்படுத்தி காலத்திற்கும், உடலுக்கும் ஏற்றாற்போல தகுந்த மூலப்பொருள்களைக் கொண்டு பயன்படுத்தியுள்ளனர். அதை எம்மையும் பயன்படுத்த அழைக்கின்றனர். எனவே எமது பண்பாட்டு முறைகளைக் கைவிடாது அவற்றைப் பயன்படுத்தி அனுபவித்து சுக வாழ்வு வாழ முயல்வோம்.

**செ.போல்ரன் றஜீவ்,**
*4 ஆம் வருடம், சித்திமருத்துவத்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*




# ஓராண்டு நினைவஞ்சலி

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்"




## சுப்பிரமணியம் சுகந்தராசா (சுகந்தன்)
(எழுதுமட்டுவாழ்)

என் இனிய சகோதரனே! பாசத்தின் நண்பனே!
இரக்கமற்ற காலன் பாதியில் உன்னை பறித்தான்.
அன்று சிட்டுக்குருவிகளாகப் பறந்தோம், சிரித்துச்சிரித்து மகிழ்ந்தோம்,
குரங்குகள் போல தாவித்திரிந்தோம், மலர்களைப் போல
அழகாக வாழ்ந்தோம் - ஆனால்
கொடிய யுத்தம் பிரிவுகளை ஏற்படுத்த, அன்னிய தேசத்தில்
அடைக்கலம் தேடினாய்.
இன்று மனித தர்மமும், குணங்களும் மாறி, நாகரிகம் என்று
அன்பை விலை பேசும் காலமிது.
பணத்துக்கும், பகட்டுக்கும் பூஜை செய்து வழிபாடு நடத்தி
மற்றவரின் வேதனையை வேடிக்கை பார்க்கும் உலகமிது.
நீதியையும், சத்தியத்தையும் உள்ளே மறைத்து, வந்தவழி
நினைவுகளையும் மறந்து, வேசத்தை முகமூடியாக்கி,
கைகுலுக்கும் ரோபோக்களாக வலம் வரும் நேரமிது.
இத்தனைக்கும் விதிவிலக்காய் தூய அன்போடும், கள்ளம்
கபடமில்லா குழந்தை உள்ளத்தோடும் ஆழமான அன்பைத்
தந்த ஆண்டவரின் அன்புச் சீடன் நீ!
உள்ளதை மகிழ்வோடு கொடுக்கும் மாசில்லா தாய் போல நீ!
அந்தோ உன் மனதுக்குள் தான் எத்தனை சோகங்கள் மறைந்திருக்கும்.
உன் பெற்றோரின் பிரிவு; சகோதரிகளின் வாழ்வு;
உற்றார் உறவினர் என்று யாருமில்லாத் தனிமை.
எத்தனை சிலுவைகள்.
வானமே உன் எல்லையைக் காட்டு!
சூரியனே நீ மறையாதே!
நிலவே நீ தேயாதே!
பூமிப்பந்தே நீ சுழலாதே!
கடலே நீ ஆர்ப்பரிக்காதே!
நெருப்பே எரியாதே! காற்றே வீசாதே!
நான் நேசித்த முகம்; நான் அன்பு செய்த தோழன்;
என்னை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொள்கிறான்
அவனுக்கு அஞ்சலி செலுத்த.
நிரந்தரமாகத் தூங்கிவிட்ட நீ நிம்மதியாகத் தூங்கு.
தளராது பயணித்து உன்னோடு சேருவேன்.
கடின உழைப்பின் வெற்றியில் நீ இல்லாத காலம்.....
நினைவுகளுடன் நிதி.

மெழுகுவர்த்திகளுடன்
சொந்தங்களும்,
நண்பர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
01 . 01 . 1939

ஆண்டவன் அடியில்
12 . 04 . 1991



## திருமதி துரைராசா கோணேஸ்வரி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட
எங்கள் குடும்ப விளக்கு
ஆண்டுகள் பதினெட்டாகியும்
மாறாதம்மா எங்கள் பாசம்
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாப்பயணம் சென்றாயோ!
இப்புவியில் நாம் உள்ளவரை
உம் நினைவு என்றும் அழியாது அம்மா!

(63736)

95, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# அந்தியேட்டி அழைப்பு



தோற்றம்
06.02.1924

மறைவு
14.03.2009

அமரர்


## கந்தப்பா வேலுப்பிள்ளை (வேலப்பா)

கடந்த 14.03.2009 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13.04.2009) திங்கட்கிழமை காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வே.தில்லையம்பலம்,
வே.பரமானந்தம்,
மாதர் சங்கத்தடி,
சீலாப்புலம், கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

மனைவி- தங்கம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(சி.556026)


இப்பொழுது
செலிங்கோ லை.்.ப்
வழங்கும்

செலிங்கோ
கேஷ் போனஸ்

செலிங்கோ லை.்.ப் உடன் இணைந்திருக்கும் காப்புறுதிதாரர்களுக்கு இப்பொழுது செலிங்கோ லை.்.ப் வழங்கும் கேஷ் போனஸ். இது உங்களுக்கு பணமாக கிடைக்கப் பெறுவதுடன் உங்கள் வீட்டிற்கே வந்து கொடுக்கப்படும் ஒரு விசேட பரிசு. எந்த ஒரு காப்புறுதி நிறுவனங்களினதும் காப்புறுதிதாரர்களுக்கு கிடைக்கப் பெறாத, செலிங்கோ லை.்.ப் காப்புறுதிதாரர்களுக்கு மட்டும் கிடைக்கும் இப்பரிசு, **ஏப்ரல் மாதத்திற்குள் உங்கள் இல்லம் வந்து சேரும்.** இந்த கேஷ் போனஸானது 10 மற்றும் 15 வருடங்களை பூர்த்தி செய்த ஆயுள் காப்புறுதிதாரர்களை மட்டும் கௌரவிக்கும் புதுவருட பரிசாகும்.

மேலதிக விபரங்களுக்கு (011) 2 461 461

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

செலிங்கோ கேஷ் போனஸ்

செலிங்கோ லை.்.ப்

செலிங்கோ இன்சுவரன்ஸ் பிஎல்சி

134, காலி வீதி, கொழும்பு 3. கம்பனிப் பதிவு இலக்கம் - PQ 24 தொலைபேசி: (011) 2 461 461 இணையத்தளம்: www.ceylincolife.com

செலிங்கோ லை.்.ப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்து வில்லன்

'பொல்லாதவன்' பட வெற்றியைத் தொடர்ந்து தனுஷ் - வெற்றிமாறன் கூட்டணியில் உருவாகி வரும் புதியபடம் 'ஆடுகளம்'. 'பொல்லாதவன்' படத்தைப் போலவே வித்தியாசமான, விறுவிறுப்பான படமாக இது அமையவுள்ளது. 'ஆடுகளம்' படத்திற்கு ரசிகர்களுக்குப் பரிச்சயமில்லாத புதுமுகம் ஒன்றை வில்லனாக அறிமுகம் செய்ய வெற்றிமாறன் எண்ணினார். எனினும் படத்தில் வருகின்ற வில்லன் பாத்திரத்திற்கு ஏற்றால் போன்று எவருமே சிக்கவில்லை.

இந் நிலையில் தற்செயலாக, ஈழத்து எழுத்தாளரான வ.ஐ.ச.ஜெயபாலனின் புகைப்படத்தை வெற்றிமாறன் பார்த்திருக்கிறார். உடனேயே தனது வில்லன் பாத்திரத்திற்கு இவர்தான் பொருத்தமான ஆள் என நினைத்த வெற்றிமாறன் வ.ஐ.ச.ஜெயபாலனை அணுகித், தன் எண்ணத்தைச் சொன்னார். ஜெயபாலனும் இதற்குச் சம்மதிக்கவே, இப்போது ஆடுகளம் படப்பிடிப்பு களைகட்டியுள்ளது.



# புது முரளி!

நீண்டகாலமாகத் தமிழ் சினிமாவில் இருந்து காணாமல் போயிருந்த நடிகர் முரளி மீண்டும் களமிறங்கவுள்ளார். 'உன்னை நீ அறிந்தால்' என்ற படத்தில் நாயகனாகத் தோன்றவுள்ளார் நடிகர் முரளி. ஒரு காலத்தில் தமிழின் முன்னணி நாயகனாகக் கலக்கியவர்தான் இந்த முரளி. காலமெல்லாம் காதல் வாழ்க, இதயம், வட்டாக்குடி இரணியன், சுந்தரா ரவல்ஸ் போன்ற வெற்றிப் படங்களில் நடித்துப் புகழின் உச்சியில் இருந்தபோது, பல்வேறு பிரச்சினைகள் இவரைச் சூழ்ந்து கொண்டன. இதனால் இவர் படங்களில் நடிப்பதும் நின்று போனது. "முன்னர் நான் விட்ட தவறுகளைத் திருத்திக் கொண்டு இப்போது புது முரளியாக உங்கள் முன் தோன்ற உள்ளேன்" என்று கூறுகிறார் முரளி.

## திரைவிமர்சனம்



# அயன்

கோடை காலத்தில், ரசிகர்களை இன்னும் சூடேற்றி, உணர்ச்சிப் பிழம்பாக்கும் நோக்கோடு மிரட்டலாக வெளிவந்திருக்கிறது 'அயன்' திரைப்படம்.

சூர்யா, தமன்னா, பிரபு, கருணாஸ் போன்றோரின் நடிப்பில், ஹரிஸ் ஜெயராஜின் இசையில் உருவாகியுள்ளது 'அயன்'.

கடத்தலையே முழுநேரத் தொழிலாகக் கொண்ட நிழல் உலகத் தலைவர்களில் ஒருவரான பிரபுவின் விசுவாசமான அடியாளாக சூர்யா வருகிறார். பிரபுவுக்காகப் பல்வேறு கடத்தல் வேலைகளை வெற்றிகரமாகச் செய்து வருகிறார் சூர்யா. இதனால் இவர்களது எதிர்க்கும்பல் ஓர் உளவாளியாக ஜெகனை இவர்களிடம் அனுப்பி வைக்கிறது. ஜெகனோடு நட்பாகும் சூர்யா, ஜெகனின் தங்கையான தமன்னாவைக் காதலிக்கிறார். ஒரு கட்டத்தில் ஜெகனின் சுயரூபத்தை அறியும் சூர்யா, நட்பையும், காதலையும் தூக்கி எறிகிறார். இறுதியில் என்ன நிகழ்கிறது என்பதை விறுவிறுப்பாகச் சொல்லியிருக்கிறது 'அயன்'

சண்டைக் காட்சிகளிலும், காதல் காட்சிகளிலும் வெளுத்துக் கட்டியிருக்கிறார் சூர்யா. இவருக்குச் சற்றும் சளைக்காது தமன்னா, பிரபு ஆகியோரும் நடிப்பில் தமது திறமைகளை நிரூபித்துள்ளனர்.

இதுவரை காலமும் ஒளிப்பதிவாளராகவே அறியப் பட்டவரான கே.வி.ஆனந்த் 'அயன்' திரைப்படம் மூலம் நல்ல இயக்குநராகவும் வெளிப்பட்டுள்ளார்.

பாடல்கள் எல்லாமே கேட்போரைப் பரவசப்படுத்துகின்றன. ஒளிப்பதிவு மிகவும் அற்புதமாக அமைந்துள்ளது.

மொத்தத்தில் பார்ப்போருக்கெல்லாம் பயன் தருவதாய் அமைந் துள்ளது 'அயன்'

★★★



கலைச்சுடர்

# விரைவில் ஷில்பா ஷெட்டிக்குத் திருமணம்



லண்டனைச் சேர்ந்த தொழிலதிபர் ராஜ்குந்த்ராவும், ஷில்பாவும் கடந்த ஆண்டு ஒரு விழாவில் சந்தித்துக் கொண்டனர். இச் சந்திப்பு நட்பாக மாறிப் பின்னர் காதலாகவும் மலர்ந்தது. ஒரு கட்டத்தில் இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவுசெய்தனர். ஆனால், இதில் ஒரு சிக்கல். ராஜ்குந்த்ரா ஏற்கனவே திருமணமானவர். மனைவியை முறைப்படி விவகாரத்துச் செய்ய, வழக்குத் தொடர்ந்தார் ராஜ். ராஜ்குந்த்ரா தன்னைவிட்டு பிரிவதற்கு ஷில்பாதான் காரணம் என்று ராஜ்குந்த்ராவின் மனைவி கவிதா புகார் கூறினார். இந்த வழக்கு நீதிமன்றத்தில் இன்னும் நடந்துவருகிறது. கோர்ட் மூலம் கவிதாவுக்கு பணம் வழங்க ராஜ் முடிவுசெய்தார்.

ஆனால் இதற்கு உடன்படாத கவிதா, தனியாகத் தன்னிடம் பணத்தை வழங்குமாறு கணவனிடம் கேட்டார். இது பற்றி ராஜ்குந்த்ரா கூறியபோது:- ஜீவனாம்சம் அதிகம் கேட்டு கவிதா வாதாட வழியில்லை. எனவேதான் பணத்தைத் தனியாகத் தருமாறு கேட்கிறார். இதற்கு நான் ஒரு நிபந்தனை விதித்தேன். இந்த விவகாரத்திற்கும் ஷில்பாவிற்கும் சம்பந்தம் இல்லையென்று எழுதித்தருமாறு கேட்டேன். கவிதாவும் அதன்படி எழுதித் தந்துவிட்டார்.

எனவே ஷில்பாவும் நானும் இன்னும் ஆறு மாதத்திற்குள் திருமணம் செய்துகொள்வோம் என்றார்.



அடுத்தடுத்துப் புதுப்பட வாய்ப்புகள் வருவதால் சந்தோஷத்தில் திக்கு முக்காடிப் போயுள்ளார் சந்தியா. சமீபத்தில் பி.வாசுவின் 'ஆப்தரக்ஷகா' எனும் கன்னடப் படத்தில் நடிக்கும் வாய்ப்பு வந்தது. அந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போதே, இரண்டு தமிழ்ப் படங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது சந்தியாவுக்கு.

செல்வா இயக்கும் 'நாற்றுக்கு நூறு' படத்தில் வினய்க்கு ஜோடியாக வரும் 5 நாயகிகளில் சந்தியாவும் ஒருவர். அடுத்த படம் சிம்பு தேவன் இயக்கும் 'எறும்புக் கோட்டையில் முரட்டுச் சிங்கம்' படத்தில் சந்தியாவுக்கு நாயகி வேடம். இந்தப் படத்தில் லோரன்ஸுக்கு ஜோடியாக நடிக்கிறார் சந்தியா. எறும்புக் கோட்டை.... படத்தில் இவரைத் தவிர பத்மப்ரியா மற்றும் லக்ஷ்மிராய் ஆகியோர் நடித்தாலும் இவருக்குத்தான் முக்கிய வேடம் என்று பரவலாகக் கூறப்படுகின்றது.

# எறும்புக் கோட்டையில் சந்தியா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கெவர் வாழவோ....

*(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

''சரவணம்!''

அவன் பெயர் அழைக்கப்பட்டதும் மிக அவசரமாக, ஆவலோடு சென்று துரையிடம் கூலிப் பணத்தை வாங்கிக் கொண்டு வந்து திரும்பவும் எண்ணிப் பார்த்தான். அவன் கணக்குப்படி ஐந்து ரூபா குறையக்கண்டு, கோபாவேசத் துடன் திரும்பியபோதுதான் தோட் டத்தில் விறகு வெட்டியதற்குத் தெண்டம் போட்டது ஞாபகம் வர அதிலேயே நின்று கையில் உள்ள பன்னிரெண்டு ரூபாவை ஏக்கமும் வேதனையும் மன எரிவும் கலந்த கண்களுடன் பார்த்துக் கொண்டான்.

''இங்கே பாராய்யா, ஒரு மாசமா ஒழைச்சு கையில கெடச்ச சம்பளத்தை. இதென்னயா இது?''

பக்கத்தில் நின்ற தொழிலாளியின் தோளைப் பிடித்துத் திருப்பிக் கூறினான்.

''இங்கே பாரண்ணே, எங்கூலியைப் பாரண்ணே ஐம்பது சதோம்!'' அவன் தன் கையை விரித்து சரவணத்துக்குக் காட்டினான்.

''டேய் பார்த்தியாடா இது தாண்டா நம்ம ஒழைப்பு, கூலி! முதலாளி வர்க்கம் எம்மை சாகவும் விடாதடா, வாழவும் விடாதடா. நம்ம சங்கத்துக்காரங்க கூறுவது தாண்டா சரி. முதலாளி வர்க்கத்தைப் பூண்டோடு அழிக்கனும். ஆமடா அழிக்கனும்டா! வெள்ளக்காரன் இருந்து நம்மையும் இந்த நாட்டு மண்ணையும் கொள்ளையடிச்சுட்டு போறாண்டா!'' அவனு டைய கண்கள் சிவந்து கொண்டன.

''ஆமா அவங்களை நாம ஒழிச்சுக் கட்டுறதுக்கு முன்னால, அவங்க நம் மளை பட்டினிபோட்டு, கொன்னுடு வாங்க போலிருக்கு'' மற்றவன் சொல் லிக்கொண்டு நடந்தான்.

''ம்..... இதை என்ன செய்வது?'' என்று உள்மனது அங்கலாய்த்துக் கொண்டிருக்க நிமிர்ந்து அங்கும் இங்கும் பார்த்தான்.

''இந்தா சரவணம்; நாணயமா இந்தக் கடிதம் பணத்தைக் கொடுத்திடப்பா!''

மூண்டன் கணக்கப்பிள்ளை கையை நீட்டிக்கொண்டு முன்னால் வந்து நின் றான். அவனிடம் தீபாவளிக்கு, மூன்று மாதத்திற்கு முன் கடன்பட்டிருந்தான்.

''ஐயா, இதுதான் சம்பளோம்! வட்டிக்காசை எடுத்திடுங்க! அடுத்த மாசம் தந்திடுறேன் சாமி!''

நாலு ரூபாயைக் கணக்கப் பிள்ளை யின் கையில் வைத்ததும் அவன் மனம் குளிர்ந்து அப்பால் சென்று விட்டான்.

'பாக்டரி' முன்னால் வழி நெடுக அங்காடி வியாபாரிகள் புடவை, புகை யிலை, வெற்றிலை, உணவுப்பண்டங் கள், பழவகை, சுருட்டு, அரிசி முதலிய னவற்றை வைத்துக் கொண்டு கலகலப் பாக விற்றுக் கொண்டிருந்தார்கள். சரவணம் ஒன்றையும் கவனியாதவனாக 'விர்' என்று கடைத்தெருவை நோக்கி நடந்தான்.

''ஏய், சரவணோம்! இந்தா நில்லு, கடனைக் கொடுத்திட்டுப் போயிரு!'' வடை, முறுக்கு விற்கும் ரெங்கையா கத்தினான். அவன் கத்துவான் என்று சரவணத்துக்குத் தெரியும். கேட்காத வனைப் போல நடந்து வந்துவிட்டான்.

''சரவணம்! இங்க வந்திட்டுப் போ!''

தலையைத் திரும்பிப் பார்த்தான். 'ஐயா! தங்கசாமி வேசமோன்'. மனம் அசந்து கொண்டது.

''எங்கிட்டுப் போகப் பார்க்கிறே! இங்கே வா!''

தங்கசாமிப் பிள்ளை கடைக்குள் இருந்து அவனை அழைத்தான். அவன் கடைக்குள் சென்றான்.

''கையில எவ்வளவு இருக்கு?''

சரவணன் பொத்தியிருந்த கையை அவன் பலவந்தமாகப் பிடித்து விரித் தான். தங்கசாமி அதைப் பறித்து எடுத்து எண்ணிப் பார்த்துவிட்டு, வேறு எங்கும் ஒளிந்து வைத்திருக்கிறானா என்று அவனைப் பரிசோதித்தான். பிறகு அப்பணத்தைப் பெட்டியில் போட்டான்.

''சரி போ! பாக்கி எட்டு ரூபா இருக்கு. மறந்து போகாமை அடுத்த சம்பளத்திற் குக் கொடுத்திடணும். போ! எவ்வளவு நாளா ஏமாத்திறே''.

''ஐயோ! என் மகனுக்குப் பொயித்தகம் வாங்கிட.....''

''இந்தா..... வேறு பேச்சே வாணாம், போ, போ, போ!''

சரவணம் வெறும் கையைப் பிணைந்து கொண்டு அவன் முகத்தை ஏறிட்டு நோக்கித் திரும்பவும் ஏதோ கூறி அந்தப் பணத்தைக் கேட்க நினைத் தான். கொஞ்ச நேரம் நின்றுவிட்டு கேட் டாலும் கிடைக்காதென்ற முடிவோடு தெருவுக்கு வந்தவன் திரும்பி ஓடி தங்க சாமி கடைக்குள் ஒளிந்து நின்றான்.

புஞ்சிக்கீரா சந்தியில் நின்றான், அவன் அங்கு நின்ற தொழிலாளர்களி டம் கள்ளுக் குடித்த பணம் அறவிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்குத் தவணை சொல்ல முடியாது. அடிக்கப் போய்விடுவான்.

அந்தக் கடைத்தெருவால் தொடர்ந்து செல்ல அவனுக்குத் தயக்கம் ஏற்பட் டது. சாவன்னாவும், சாகுல் ஹமீதும், புகையிலைக்காரனும் கடனுக்குப் பிடித்துக் கொள்வார்கள். அவர்கள் அவன் சம்பளத்துக்கு வரும்போது பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கும் இங்கும் பார்த்துவிட்டு யாருக் கும் தெரியாமல், சிங்கள விவசாயிகளின் வயல்களின் ஊடாக குறுக்குப்பாதை பிடித்து இரகசியமாக நடந்து கடைத் தெருவைக் கடந்து வந்து லயத்திற்குக் கிட்டவுள்ள ரோட்டில் ஏறி நடந்தான், மனம் புழுங்கிக் கொண்டிருந் தது.

மோட்டார் சைக்கிள் சத்தம் தூரத்தில் கேட்டது. அவன் நிமிர்ந்து பார்ப்பதற் கிடையில் மூலையால் திரும்பிவிட்டது. அதில் வட்டிப்பணம் அறவிட பாய் வந்து கொண்டிருந்தான். ஓடிப்பாய்ந்து தோலைப் பற்றைக்குள், தலைமறைவாகி யிருந்தான். நல்ல காலம் 'பாய்' காண வில்லை. அவன் அந்தப் பாய்க்கு இப்படி ஆறு மாதம் டிமிக்கி கொடுத்து விட் டான். பாய் சென்றதும் எழுந்து லயத்துக்கு வந்தான். காம்பரா வாசலில் இரு பெண் பிள்ளைகளும் அவனை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். அவன் கையில் றொட்டிப் பார்சல் இல்லாத தைக் கண்டதும் இருந்த அவர்களுக்கு உற்சாகமெல்லாம் கெட்டு விட்டது. உள்ளே குப்பி விளக்கில் பழைய புத்தகத்தை விரித்துப் பார்த்துக் கொண்டிருந்த மேகநாதன் வெளியில் ஓடி வந்தான். சரவணம் அவனைக் கவ னியாதவன் போல உள்ளே சென்று சுவர் ஓரத்தில் உட்கார்ந்திருந்தான். மேகநாதன் போய் அவனுக்கு முன்னால் நின்றான். நீண்ட நேரமாகியும் அவன் புத்தகத்திற் குப் பணம் கொடுத்த பாடில்லை. முன்னால் அமர்ந்து கொண்டான்.

அவன் முன்னால் வந்து நாய்க்குட்டி யைப் போல் தன் முகத்தை மேகநாதன் ஏறிட்டுப் பார்த்துக்கொண்டிருப்பதன் காரணத் தைப் புரிந்து கொண்ட சரவணம், அவனைக் கவனியாதவன்போல் வெளியே பார்த்துக்கொண்டான்.

''நீ படிச்சது காணும்!''

உள்ளத்தைக் கிழித்துக் கொண்டு அவ் வார்த்தைகள் வந்தன.

தோட்ட வாத்தியார் கூறியவைகள் அடிமனத்திலிருந்து சொந்த உணர்வு களுடன் ஊறி நெஞ்சை எரித்துக் கொண்டிருந்தன.

அந்த எண்ணத்தைத் தள்ளிவிட முனையும்போது, இரவுச் சாப்பாட்டிற்கு என்ன செய்வது? தங்கம்மாளுக்கு ஊசிபோடப் பணம் வேணும் என்ற உடனடித் தொல்லைகள் உள்ளத்தின் மையத்தில் இடம் பிடித்துக் கொண்டன. வாட்டத்தில் போட்ட தேயிலைக் கொழுந் தைப் போல் முகம் வதங்கியிருந்தது.

''நா நல்லா படிப்பனய்யா! படிச்சு தொரை மாதிரி இங்கிலீசு பேசுவனய்யா! நீங்க தானே கவர்மெண்டு ஸ்கூலிலே சேர்த்து விட்டீங்க. நீங்களும் அம்மாவும் ஒழைக்க எனக்கு பொத்தகத்துக்குப் பணங்கொடுக்க முடியாதா?''

சரவணம் கண்களை வெட்டி மகனின் முகத்தைப் பார்த்தான். மகனின் கண்கள் கலங்கி இருந்தன. அவனுக்குக் காரணம் புரியாமல் கோபம் எழுந்து கொண்டது. மேகநாதனின் தலையில் ஆத்திரத்துடன் பிடித்துக் கையால் உதைத்து விட்டான்.

''இவர் பெரிய ஆளு! இவர் படிச்சு நம்மை மகாராசாவாக்கப் போறாரு! சும்மா போடா! இந்தத் தோட்டத்தில் எவன்டா படிச்சிருக்கான்? இவர் படிக்கப் போறாரு? உன்னைப் போலத்தாண்டா நான் என் அப்பனைக் கேட்டேன். அவன் என்னைப் படிப்பிச்சுப் போட்டானா? என் அப்பனும் ஆயாவும் இதே தோட்டத் தில் தாண்டா வேலை செய்து. இந்த தேயிலைச் செடிக்கு பசளை ஆயிட் டாங்க? இல்ல கேக்கிறன் என் அப்பன் என்னைப் படிப்பிச்சானா? அப்பனும் என்னைப் புல்லு வெட்டத்தான் கலைச்சான் நீயும் நாளைக்கு புல்லுவெட்டப் போயிரு!..... இப்ப ஏதாவது பேசினா உதைச்சுக் கொன்று போடவன் ஆமா!''

தகப்பனின் ஆவேசமான, தீர்க்கமான குரலில் நலுங்குற்றுப் பயந்துபோன மேகநாதன் மௌனமாக இருந்தான். அழுகையை அடக்கி கீழுதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டான். சரவணத்தின் கண்கள் மகனை எண்ணிக் கலங்கத் தொடங்கியபோது சம்பளம் எடுத்து வரும் நேரத்தில் இன்னொரு தொழிலா ளிக்குத் தானே சொன்னவை மனதில் உள்ளிருந்து உணர்வுகளோடு கலந்து மேலெழுந்து வந்தன.

''முதலாளி வர்க்கத்தை ஒழிச்சுக் கட்டணும்''.

நீதியான உணர்வுகள் ஆத்திரம் கொண்டு ஆழமாகக் கிளர்ந்து கொள்ள கைவிரல்கள் தாமாகப் பொத்தி இறுகிக் கொள்கின்றன. அந்தப் பொத்தி இறுகிய கை முடிச்சுகளுக்கு எதிரிகள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்!

(நன்றி: உழைக்கப் பிறந்தவர்கள் மலையகச் சிறுகதைகளின் இரண்டாவது தொகுதி.)

## சொற்சிலம்பம் - போட்டி இல:56

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | ■ | 13 | | |
| ■ | 14 | | | | | ■ | |
| 15 | | | | ■ | 16 | 17 | ■ |
| 18 | | | | 19 | | | 20 |
| 21 | | ■ | 22 | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. அருச்சுனன் மகன்
5. கூட்டல் குறியீடு
7. வேறுபாடு/மாறுபாடு
8. கீறுதல்
9. உடல் இயக்கத்துக்கு உதவும் உடற் பகுதி
10. வேகம்
11. குரங்கு/பாடல்
12. இசைப்பாட்டு
13. அன்னை
14. கண்டித்து வெளியிடும் கூற்று
15. படிப்பதும் இதற்கு; பறக்க விடுவதும் இதையே
16. நீர்த்தன்மையான இடத்தில் படர்வது
18. சுவடு
19. நகைப்பு
21. உற்பத்தி செய். ஏவல் சொல் கடைசி எழுத்தை இழந்து நிற்கிறது
22. ஒரு தோற்கருவி.
23. பின்னடிப்பு

### மேலிருந்து கீழ்

1. உயிர்காக்கும் மருந்து/தேவர் உணவு
2. குடிமகன்
3. நிலம்
4. இளம்பெண்
5. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்
6. புத்திஜீவி
10. தத்து/பெரும் நிலப்பரப்பு
12. பொருள்
13. யானையின் மேல் ஆள்கள் அமரும் இடம்
14. உத்தரவு
15. இந்தக் கதிரைக்குத்தான் போட்டி
17. முத்து விளைவது இதற்குள்
19. தடுத்து வைக்கும் இடம்
20. உள் செல்

### போட்டி விதிகள்

*1. வாசகர்எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங் கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 56**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர் (22.04.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கப்பட வேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல. 56 இல் வெற்றிபெறுவோர் களது விவரம் 26.04.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்ட சாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 54 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சாகவதம் (6) குண்டம் (7) தந்தி (9) படு (10) பதவிதுற (12) கூட்டல் (13) கட்டம் (14) கொய் (15) ஆருடம் (16) தழு... (17) குடம் (18) நேரம் (19) தின் (20) கரும்புலி

**மேலிருந்து கீழ்**

(1) சாகுபடி (2) கண்டு (3) வட (4) தம்பட்டம் (5) பந்து (8) திறனாய்வு (11) தடம் (12) கூட்டம் (13) கருடன் (14) கொழும்பு (15) ஆகுதி (16) தரம் (18) நேகு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோச னைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் : 54 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள்வருமாறு:

**1 ஆம் பரிசு**
திருமதி ச.சந்திரராசா,
இல: 9, பறாளாய் வீதி,
சுழிபுரம்.

**2 ஆம் பரிசு**
க.நுவந்தன்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
மு.ஹேமமாலினி,
மடத்தடி,
பலாலி வீதி,
உரும்பிராய்.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி ரதி சிவசீலன்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(2) செல்வன் கு.பேர்ஸ்போல்,
இல: 26, சென்ற்.ஜேம்ஸ் கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(3) செல்வி லாவண்யா தங்கராசா,
சிவன் வீதி, ஆவரங்கால்,
புத்தூர்.

(3) போ. போ.போகராசா,
வல்லை வீதி, தொட்டிலடி,
சங்கானை.

(4) வ.இரத்தினசிங்கம்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகள் காலத்தால் மறக்கப்பட்டு வரும் அவக்கோலம்!

## அந்நியர் ஆட்சியில் தமிழ்-சிங்கள இனங்கள் அந்நியோன்யமாக வாழ்ந்தமை வரலாற்றின் ஓரங்கம்

**சிங்களவர்கள் மரம் எனவும் ஏனைய சிறுபான்மையினர் மரத்தில் படரும் கொடிகள் எனவும், தமிழர்கள் இந்நாட்டில் வந்தேறுகுடிகள் எனவும் சிங்கள அரசியல் தலைவர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கருத்துக்கள் வெளிப்படுத்தி வந்துள்ளனர். இதேபோல் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவும் சிறுபான் மையினர் பெரும்பான்மையினரை அனுசரித்து நடக்க வேண்டுமெனக் கூறியுள்ளார்.**

**இவ்வாறு கூறுபவர்கள், தமிழர்கள் இலங்கைக்கும் சிங்கள மக்களுக்கும் ஆற்றிய பணிகளை மறந்து விட்டனர். தமிழர்கள் இலங்கைக்கும் சிங்களவர்களுக்கும் ஆற்றிய பணியைப் பற்றிச் சுருக்கமாக விவரிக்கிறது இக்கட்டுரை.**

இங்கு கூறப்பட்டுள்ள விடயங்கள் யாவும் வரலாற்று நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவையே. இதில் எனது கருத்துகளோ அபிப்பிராயமோ எதுவும் சேர்க்கப்படவில்லை. இங்கு கூறப்படும் விடயங்களுடன் பலருக்கு (எனக்கும்கூட) உடன்பாடு இல்லாதிருக்கலாம். அல்லது மாறுபட்ட கருத்துகள் இருக்கலாம். இலங்கைக்கும் சிங்களவர்களுக்கும் எம்மவர்கள் ஆற்றிய சேவையை எம்மவர்களாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே இக் கட்டுரை வரையப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் இலங்கையில் நிலவிய தமிழ்-சிங்கள உறவு பற்றியும் இலங்கைக்கும், சிங்களவர்களுக்கும் தமிழர்கள் ஆற்றிய பங்களிப்புப் பற்றியும் சுருக்கமாகப் பார்ப்போம்.

விஜயன் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் ஐந்து சிவாலயங்கள் இருந்ததாகவும் விஜயன் அவற்றைப் புனர் நிர்மாணம் செய்ததாகவும் முதலியார் இராசநாயகம் Ancient Jaffna என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். விஜயன் புனரமைத்த ஆலயங்களின் விவரம் வருமாறு:-

திருத்தம்பலேஸ்வரம் (நகுலேஸ்வரம்), தெய்வேந்திரன் கோவில், (தெவி நுவர) கோணேசர்கோயில் தம்பலகாமம், திருக்கேதீஸ்வரம், கதிர்காமம் என்பவையே அவையாகும். விஜயனுக்குப் பின்னர் எல்லாளனின் காலத்தில் எல்லாளனும் பல விகாரைகளைக் கட்டுவித்ததாகக் கூறப்படுகிறது. போர்த்துக்கீசர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இலங்கை யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை என மூன்று இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டு மூன்று அரசர்களால் ஆளப்பட்டு வந்தது.

கண்டி, கோட்டை இராச்சியங்கள் சிங்கள அரசர்களாலும் யாழ்ப்பாண இராச்சியம் தமிழ் அரசர்களாலும் ஆளப்பட்டு வந்தன. 1450 ஆம் ஆண்டளவில் செண்பகப் பெருமாள் எனும் நாமம் பூண்ட புவனேகபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி பதினேழு ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனது காலத்திலேயே நல்லூர்க் கந்தசாமி கோயில் கட்டப்பட்டது. இதன் காரணமாகவே இன்றும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் கட்டயம் சொல்லும்போது கட்டயத்தில் ''சிறிசங்கபோதி புவனேகபாகு'' என்ற வரிகள் இடம்பெறுகின்றன.

### ஐரோப்பியர் காலம் போர்த்துக்கேயர் காலம்

இலங்கைக்கு முதன்முதலில் வந்த ஐரோப்பியர்கள் போர்த்துக்கீசரே. போர்த்துக்கீசர் 1517 ஆம் ஆண்டு கோட்டை இராசதானியைக் கைப்பற்றினர். போர்த்துக்கீசர் கோட்டையைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து கோட்டை இராச்சியம் கோட்டை, சீதாவாக்கை என இரண்டாகப் பிரிந்தது. கோட்டையைப் புவனேகபாகுவும், சீதாவாக்கையை மாயாதுன்னையும் ஆட்சி செய்யத் தொடங்கினர். புவனேகபாகு போர்த்துக்கேய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டு ஆட்சி செய்யத் தொடங்கினான்.

மாயாதுன்னை போர்த்துக்கேய மேலாதிக்கத்தை ஏற்க மறுத்தான். 1545 ஆம் ஆண்டு கண்டி, யாழ்ப்பாண அரசர்களின் உதவியுடன் கோட்டைமீது போர் தொடுத்தான்மாயாதுன்னை. புவனேகபாகுவும்போர்த்துக்கேயரும்இணைந்து இத்தாக்குதலை முறியடித்தனர்.

1547 ஆம் ஆண்டு மாயாதுன்னையும் செகராசசேகரனும் (சங்கிலி - யாழ்ப்பாண அரசன்) இணைந்து தஞ்சாவூரிலிருந்து பெற்ற தமிழ், முஸ்லிம் படைகளின் உதவியுடன் மறுபடியும் கோட்டையை முற்றுகையிட்டனர். சீதாவாக்கைச் சேனையும், யாழ்ப்பாணச் சேனையும் இணைந்து பித்திக்கல், அப்பித்திகம், சியனகோரளை ஆகிய பகுதிகளை ஊடறுத்துச்சென்று ஜெயவர்த்தனபுரக் கோட்டையைச் சுற்றிவளைத்தன. இச்சம்பவம் 1547 ஆம் ஆண்டு ஜூலை பத்தாம் திகதி இடம்பெற்றது. புவனேகபாகு கொழும்பிலிருந்த போர்த்துக்கேயருக்குத் தகவல் அனுப்பிவிட்டு மாயாதுன்னை-சங்கிலி படையை எதிர்த்து ஆவேசத்துடன் போரிட்டான். புவனேகபாகுவின் மருமகன் விதியபண்டார, மாயாதுன்னை- சங்கிலி படைகளிலிருந்த வீரர்களை வெட்டிச்சரித்தான். போர்த்துக்கேயரும் புவனேகபாகுவுடன் இணைந்து நடத்திய தாக்குதலில் நிலை குலைந்த மாயாதுன்னை-சங்கிலி படைகள் பின்வாங்கின. மாயாதுன்னைக்கு உதவிக்குச் சென்ற தமிழ் வீரர்கள் சிலர் அங்கேயே தங்கிவிட்டனர். பாணந்துறையில் வாழும் தமிழர்கள் இந்தப் பரம்பரையில் வந்தவர்களெனக் கூறப்படுகிறது.

1552 ஆம் ஆண்டு புவனேகபாகு இறந்ததும் அவன் மகன் தர்மபாலன் அரசனானான். விதியபண்டார தர்மபாலனின் ஆட்சியிலும் படைத் தளபதியாகப் பதவி வகித்தான். போர்த்துக்கேயருக்கும் விதிய பண்டாராவுக்குமிடையே பிணக்கு ஏற்பட்டதால், போர்த்துக்கேயர் விதிய பண்டாராவை தந்திரமாகப் பிடித்துச் சிறையில் அடைத்தனர். தனது மனைவியின் உதவியுடன் சிறையிலிருந்து தப்பிய விதிய பண்டார காலியிருந்து கொழும்பு வரை காணப்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்களை இடித்துத் தரைமட்டமாக்கியதுடன் கண்ணில் பட்ட கிறிஸ்தவர்களையும் கொன்றான்.

பின்னர் தனது எதிரியான மாயாதுன்னையுடன் நட்புப் பூண்டு விதவையான மாயாதுன்னையின் மகளைத் திருமணம் செய்தான். மாமனுடன் ஏற்பட்ட தகராறையடுத்து மனைவி, மாமி ஆகியோருடனும் தனது பரிவாரத்தோடும் யாழ்ப்பாணம் புறப்பட்டான். யாழ்ப்பாணம் வந்து தாராக்குளத்தடியில் முகாமிட்ட விதிய பண்டார செகராசசேகரனுக்குத் தூதனுப்பினான். போர்த்துக்கேயரைத் துரத்திவிட்டு இலங்கை முழுவதையும் ஒருகுடையின்கீழ் தான் ஆளவேண்டும் என்பதே விதிய பண்டாராவின் விருப்பம்.

### வீரமாகாளி கோயில் அருகில் கூடினர்

செகராசசேகரனும் தனது தளபதியாக விதியபண்டாராவை நியமிக்கும் நோக்குடன் விதியபண்டாராவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளத் தீர்மானித்தான். வீரமாகாளியம்மன் கோயிலின் முன்றலில் சத்தியம் செய்து கொள்வதற்காக இருவரும் கூடினர். செகராசசேகரன் தனது தலையாரிமார், வன்னியர்கள், முதலாளிமார், சேனாதிபதிகள் புடைசூழ நின்றான். விதியபண்டாரவும் தனது பரிவாரங்களுடன் கோயில் முன்றலுக்கு வந்தான். அந்தவேளை தவறுதலாக வெடி மருந்தில் தீப்பற்றியது.

தமிழர்கள் தனக்கு ஏதோ சதி செய்கிறார்கள் என்றெண்ணிய விதியபண்டார உறையிலிருந்து வாளை உருவி வீசினான். இதனையடுத்து சிங்களவருக்கும் தமிழருக்கும் போர் மூண்டது. இப்போரில் விதியபண்டார உயிரிழந்தான். விதியபண்டார அணிந்திருந்த புத்த தந்தத்தாது செகராசசேகரன் வசமானது.

தான் அநியாயமாக விதியபண்டாரவைக் கொன்று விட்டதாக எண்ணி மனம் வருந்திய செகராசசேகரன் விதியபண்டாரவின் நினைவாக ஆலயம் ஒன்றை அமைத்தான். கல்வியங்காட்டில் காணப்படும் பூதவராயர் கோயில் இதுவாக இருக்கலாம் என வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது நல்லூர்க் கோட்டையில் செகராசசேகரன் விட்டுச் சென்ற புத்தரின் புனித தந்தத்தாது, போர்த்துக்கேயர் வசமானது. போர்த்துக்கேயர்கள் புத்தரின் புனித தந்தத்தாதுவைக் கோவாவுக்கு எடுத்துச் சென்று, எரித்துச் சாம்பலாக்கிச் சாம்பலையும் கடலுக்குள் வீசினர்.

இவ்வாறு Ceylon Conquista, Ceylon Antia என்ற போர்த்துக்கேய நூல்களை மேற்கோள் காட்டி சுவாமி ஞானப்பிரகாசர் யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். முதலியார் இராசநாயகமும் தனது History of Jaffna என்ற நூலில் இதனை ஏற்றுக்கொண்டுள்ளார்.

### போர்த்துக்கேயரின் இரண்டாவது படையெடுப்பு

1591 ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி Andne de Funtado de mondoza என்ற பறங்கித்தளபதி 1400 பறங்கி வீரர்களும் 3000 சிங்கள வீரர்களும் அடங்கிய படையுடன் யாழ்ப்பாணத்தின் மீது போர் தொடுத்தான். சிங்கள வீரர்களின் எண்ணிக்கை 500 எனச் சில நூல்களில் உள்ளது. சிங்களப் படைக்கு விக்கிரமசிங்க முதலி என்ற தளபதி தலைமை தாங்கினான்.

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தை புவிராச பண்டாரம் என்பவன் ஆட்சி செய்து வந்தான். புவிராச பண்டாரத்தின் மெய்ப் பாதுகாவலனாக இருந்தவன் 'அத்தபத்து.' ஒக்டோபர் 28 ஆம் திகதி விக்கிரமசிங்க முதலியின் படைகளும் அத்தபத்துவின் படைகளும் நல்லூர்க் கந்தசாமி கோயிலுக் கும், வீரமாகாளி அம்மன் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் மோதிக் கொண்டன.

யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் கைப் பற்றியதையடுத்து கண்டியரசன் செனரத் என்பவன் தஞ்சாவூர் அரசனிடம் சரணடைந் திருந்த யாழ்ப்பாண அரசனின் புதல்விகளிரு வரையும் தனது மகன்மாருக்குத் திருமணம் செய்து வைத்தான். (Donacatherina)

1629 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தில் தனக்கும் உரிமையிருக்கிறது எனக்கூறி (தனது மகன்மார் யாழ்ப்பாண அரசுகளின் புதல்விகளைத் திருமணம் செய்தபடியால்) அத்தபத்து என்ற தளபதியின் தலைமையில் 10,000 வீரரை அனுப்பி போர்த்துக்கேயருடன் போர் தொடுத்தான். சிங்கள படைகள் வரும் வழியில் பச்சிலைப்



பள்ளியிலிருந்த தேவலாலயத்தை இடித்துவிட்டு அங்கிருந்த இரு குருமாரை யும் கொன்றுவிட்டு, யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்திலும் பலகோயில்களைத் தீக்கிரையாக்கிவிட்டு யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டன. கோட்டை மீதான முற்றுகை பதின்மூன்று நாள் நீடித்தது. இதற்கிடையில் மாத்தறையிலிருந்து தொமிங்கோ கார்வலோ காஸ் (Domingo Carvallocao) என்ற தளபதியை 7000 உள்ளூர் வீரர்களையும், 700 பறங்கியரையும் கொண்ட படையுடன் யாழ்ப்பாணம் அனுப் பினான் போர்த்துக்கேயத் தளபதியான கொன்ஸ் தாந்திறூடிசா. மாத்தறையிலிருந்து வந்த படை அத்தபத்து முதலியைக் கைது செய்தது. பிடிபட்டவர்களில் சிலர் குரூரமாகக் கொல்லப்பட்டனர். ஏனையோர் அடிமைகளாக விற்கப்பட்டனர். (கண்டியரச னின் படைகள் சேதமாக்கிய தேவாலயம் முகமாலையிலுள்ள தேவாலயம் என சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர் (யாழ்ப்பாணச் சரித்திரம் பக். 14-5-6 முதலியார் இராசநாயகம்) இலங்கையிலிருந்த மூன்று இராச்சியங்களிலும் மூன்று இராச்சியங்களினதும் தூதுவர்கள் இருந்துள்ளனர். கண்டி இராச்சியத்தில் கடைசியாகப் பதவி வகித்த யாழ்ப்பாணத்துத் தூதுவரின் பெயர் நமசிவாயம் (யாழ்ப்பாணச் சரித்திரம் - முதலியார் இரா சாநாயகம்)

### ஒல்லாந்தர் காலம்

ஒல்லாந்தர் தமது ஆட்சி காலத்தில் பல்வேறு வரிகளை அறவிட்டனர். வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பிரதேச மக்கள் வரிசெலுத்த மறுத்து வன்னிக்குச் சென்று அங்கிருந்து கண்டியரசனின் உதவியைக் கோரினர். இதனை யறிந்த ஒல்லாந்தர் அவர்களை அழைத்துச் சமரசம் செய்ததுடன் வரி நீக்கமும் செய்தனர்.

1

ஒல்லாந்தர்காலத்தில் வன்னிச் சிற்றரசர்கள் ஒல்லாந்தருக்குத் திறை செலுத்தி ஆட்சி செய்து வந்தனர். வன்னிச்சிகள் ஒழுங்காகத் திறை செலுத்துவதில்லை. இதனால்ஒல்லாந்தர் வன்னிமீது படையெடுத்தனர்.

ஒல்லாந்தர் வன்னிமீது படையெடுத்து வருவதையறிந்த வன்னிச்சிகள் கண்டி இராச்சியத்திற்குத் தப்பிச் சென்றனர்.

ஒல்லாந்தர் வன்னியைக் கைப்பற்றி கப்டன் நாகெல் (Captain Nagel) என்பவனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பினர். கப்டன் நாகெல் திறை செலுத்தி ஆட்சி செய்யத் தொடங்கினான். கப்டன் நாகெல் ஆட்சி நடத்துவதையறிந்த வன்னிச்சிகள் மீண்டும் வன்னி திரும்பினர்.

### பிரித்தானியர் காலம் பண்டார வன்னியன்

பிரிட்டிஷார் 1795 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பிரதேசங்களைக் கைப்பற்றி ஆட்சி செலுத்தத் தொடங்கினர். அப் போது வன்னியை ஆண்டு வந்த பண்டார வன்னியன் ஆங்கிலேயருக்குத்திறை செலுத்த மறுத்தான். 1803 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 25 ஆம் திகதி பண்டாரவன்னியன் கண்டியரசனின் உதவியுடன் முல்லைத்தீவுக் கோட்டை மீது தாக்குதல் தொடுத்தான். முல்லைத்தீவிலிருந்து ஆங்கிலேயத் தளபதி கப்டன் வொன்டிறிபேர்க் (Vondriberg) யாழ்ப்பாணத்திற்குத் தப்பிச் சென்றான். 31.10.1803 அன்று பண்டார வன்னியன் கற்சிலைமடு என்ற இடத்தில் வைத்து கப்டன் டிறிபேர்க்கினால் சிறைப் பிடிக்கப் பட்டான். பண்டாரவன்னியன் கைது செய்யப்பட்டபோது அவனிடமிருந்து கண்டி அரசனின் இலச்சினை பொறிக்கப் பட்ட பீரங்கியொன்றும் கைப்பற்றப்பட்டது.

### பிற்காலம் - இராமநாதன் காலம்

இலங்கையின் சுதந்திரத்துக்காகவும் ஒருமைப்பாட்டுக்காகவும் பாடுபட்டவர்களில் சேர்.பொன். இராமநாதன், சேர்.பொன். அருணாசலம், ஹண்டி பேரிம்பநாயகம் ஆகிய மூவரும் முக்கியமானவர்கள். இவர்கள் சுயராஜ்யம், பூரண சுதந்திரம் என்பன பற்றி வலியுறுத்தி வந்தனர்.

இராமநாதன் சட்டசபை உறுப்பினராக இருந்தபோது பௌத்த மடாலய சட்ட மூலம் (Buddist Tempanalities bill) சட்டசபையில் விவாதிக்கப்பட்டது. இந்த விவாதத்தில் உரையாற்றிய இராமநாதன் வெசாக் தினத்தன்று விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்று சட்டசபையில் வலியுறுத்தினார். 'சரசவி சந்திரேச' என்ற சிங்களப் பத்திரிகை இராமநாதனின் உரை யைப் பாராட்டி ஆசிரிய தலையங்கம் தீட்டி யது. 'சரசவி சந்திரேச' பத்திரிகை தீட்டிய ஆசிரிய தலையங்கம் வருமாறு:

''இராமநாதனைப் பாராட்டுவதற்கு எமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததை யிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்''

### சிங்களவர்களின் ஆங்கில மோகத்தைக் கண்டித்த இராமநாதன்

1904 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி இராமநாதன் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்குப் பிரதம விருந்தினராக அழைக்கப் பட்டிருந்தார். அங்கு சிங்கள மக்களின் ஆங்கில மோகத்தையும் மேலைத் தேய கலாசார மோகத்தையும் கண்டித்து உரையாற்றினார் இராமநாதன். இராமநாதனின் அந்த உரையில் இருந்து சில வரிகள்...

''சிங்களவர்களின் உதடுகள் சிங்களத்தைப் பேசாவிட்டால் வேறு யார் தான் சிங்களத்தைப் பேசுவார்கள்? தனது தாய் மொழியைப் புறக்கணித்து விட்டு ஒரு நாடு எவ்வாறு தனது தவறுகளிலிருந்து விடுபட முடியும்? உயரிய அறிவுள்ள சீரமைக்கப்பட்ட பாதையில் எவ்வாறு முன்னேறிச் செல்ல முடியும். ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவர்களுக்குச் சிங்கள இலக்கியம் பற்றிய அறிவு இல்லை''.

தனது உரையின் நடுவே இராமநாதன் சபையோரைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டார். ஒரு சிங்களவன் எப்படியிருக்க வேண்டும்? (What constitutes a sinhalese man) ஒருவரும் பதிலளிக்கவில்லை, மறுபடியும் கேட்டார்; மண்டபத்தில் அமைதி நிலவியது. தொடர்ந்து உரையாற்றினார். ''நீங்கள் உங்கள் நண்பர்களுடன் சிங்களத்தில் உரையாற்றுகிறீர்களா? நேற்று நான் ஒரு விருந்துபசாரத்திற்குச் சென்றிருந்தேன். அங்கிருந்த அனைவரும் ஆங்கிலத்தில் உரையாடிக்கொண்டிருந்தனர். ஆங்கிலேயர்கள் எங்காவது பிரெஞ்சு மொழியைப்பேசுகிறார்களா? அல்லது பிரெஞ்சுக்காரர் எல்லா இடத்திலும் ஜேர்மன் மொழியைப் பேசுகிறார்களா?

மொழி என்பது சிந்தனையின் வாகனம். (Language is the vehicle of thought) வெளிநாட்டுத் தத்துவங்களை உங்கள் நாட்டுக்கு அறிமுகப்படுத்த விரும்பினால் நீங்கள் உங்களது மொழியில் அறிமுகப் படுத்துங்கள். நீங்கள் இந்த நாட்டின் தலைவர்களாக வரவிரும்பினால் தத்துவங்களைச் சாதாரண மொழியில் அறிமுகப்படுத்துங்கள். நீங்கள் உங்களது மொழியைக் கற்பதற்கு மேலை நாட்டுத் தத்துவங்களை அறிமுகப் படுத்தினால் இறுதியில் அது அழிந்து விடும், அமெரிக்க நீக்ரோக்களைப் போல் மொழியற்ற இனமாக நீங்கள் மாறி விடுவீர்கள். தலையில் தொப்பி, கோட், தோளில் குடை, காலில் பூட்ஸ், வாயில் சுருட்டுண்டவற்றுடன் ஹௌ (how) என்று கேட்பவர்கள் சிங்களவர்களல்ல. இரண்டு பிக்குமார் உரையாடுவதை அவதானியுங்கள். தூய சிங்களத்தில் உரயாடுவார்கள். அந்தச் சிங்களத்தைப் பேசுபவர்கள் தான் சிங்களவர்கள்''. 'சரசவி சந்திரேச' பத்திரிகை இராமநாதனின் அந்த உரையைப் பாராட்டியிருந்தது. ஜனப் பிரபோத சங்கம் என்ற அமைப்புஇராமநாதனின் உரையைப்பாராட்டி, இராமநாதனுக்குக் கடிதம் எழுதியது. ✱ (வளரும்)

**ந.பரமேஸ்வரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து போக உயிர்த்த இயேசு அழைப்பு விடுக்கிறார்

''பொய்மையிலிருந்து உண்மைக்கும்
இருளிலிருந்து ஒளிக்கும்
சாவினின்று வாழ்வுக்கும்
அழைத்துச் செல்வாய் சாந்தி
என்றும் சாந்தி எங்கும் சாந்தி''

வன்முறையின் கோரக்கரங்களை உலகெங்கும் வியாபிக்கக் காண்கின்றோம். போலியும் ஏமாற்றும் பெருகிவிட்டன. முதலாளித்துவ மேடையில் ஒரு சிலரின், சர்வாதிகாரத்திற்காக எத்தனையோ பேர் ஒட்டாண்டிகளாக ஆக்கப்படுகின்றனர். உயர் குழாத்தினரின் வசதி வாய்ப்புக்களை இன்னும் அதிகரிப்பதற்காக கட்டமைக்கப்பட்டுள்ள சமூகப் பொருளாதார அரசியல் அடித்தளங்கள் அடித்தட்டு மக்களின் அவலங்களின் மேல் நகர்ந்து செல்லும் தேர்ச்சில்லுகளாய் உலகில் வலம் வருகின்றன. உலக அரசுகளினதும், அமைப்புக்களினதும் கோரமுகத்தை வன்னியில் அப்பாவி மக்களின் உடலங்களில் வரையப்படும் இரத்தக் கோலங்களில் கண்டு விக்கித்து நிற்கின்றோம். இந்த நிலையில்தான் மனிதம் எஞ்சிய இதயங்களெல்லாம் சாந்தி சாந்தி என்றும் சமாதானம், அமைதி, என்றும் அழுது புலம்பி வேண்டி நிற்கின்றன. உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்கு கூறியதும் ''உங்களுக்கு அமைதி உண்டாகுக'' என்ற வாழ்த்துத்தான். இந்த அமைதிக்கான ஏக்கம், சாந்திக்கான தாகம் நிறை வேறவேமாட்டாதோ என்ற நம்பிக்கையீனம் மனுக்குலத்தைப் பீடித்து நிற்கிறது.

### கடந்து போதல்

உண்மையில் இந்த சாந்தி எமக்குக் கிட்ட வேண்டுமென்றால் உள்ளும் புறமும் அமைதி மலர வேண்டும் என்றால் நாங்கள் தனித்தும் குழுமமாகவும் ஒரு கடப்பு அனுபவத்தினூடாகச் செல்ல வேண்டும். ஒரு நிலையிலிருந்து இன்னுமொரு நிலைக்கு கடந்து போவதன் ஊடாகத்தான் வாழ்வு மலர்கின்றது என்ற உண்மையை நாங்கள் ஆழமாக மனங்கொள்ள வேண்டும். மலர் தன்னிலையைக் கடந்து போகின்ற போதுதான் காய் உண்டாகின்றது; காய் தன்னிலையைக் கடந்து போகின்ற போது கனி உண்டாகின்றது; கனி தன்னிலையைக் கடந்து போகின்ற போது வித்து உருவாகின்றது; வித்து தன்னிலையைக் கடந்து போகின்றபோது புதிய மரம் உருவாகின்றது.... ஆக ஒரு நிலைக்கு இறந்து அதனைக் கடந்து போகின்றபோது புதிய இன்னுமொரு நிலை தோன்றுகின்றது. மேலும் புதியதொரு உயிர்ப்பு நிலை தோன்ற வேண்டும் என்றால் பழைய நிலைக்கு இறக்க வேண்டும் என்ற உண்மையும் மேலெழுகின்றது. இறப்பு என்பது எப்போதுமே ஒரு இழப்பு. ஆகவே அதனோடு வேதனை, வலி, துன்பம் என்பன இரண்டறக் கலந்திருக்கின்றன. துன்பத்தை ,வலியை அனுபவிக்காமல் யாரும் புதிய வாழ்வைக் கண்டடைய முடியாது. மரணத்தின் ஊடாகச் செல்லாமல் உயிர்ப்பைப் பெறமுடியாது.

### அடிமைத் தனத்திலிருந்து விடுதலைக்கு

இஸ்ராயேல் மக்களுடைய வாழ்வில் ஒரு கடப்பு அனுபவம் நிகழ்ந்தது. அதனை விடுதலைப் பயணமாக திருவிவிலியம் பதிவு செய்துள்ளது. எகிப்திய பேரரசில் அடிமைகளாகக் கடூழியம் செய்த இஸ்ராயேலர் மோயீசனின் வழிநடத்தலின் கீழ் இறைவனின் வாக்கை மட்டுமே நம்பி ஒரு விடுதலைப் பயணத்தை ஆரம்பிக்கிறார்கள். கடலைக் கடந்தும், மலை, குன்றுகளைக் கடந்தும் பட்டினி, மரணம், தாகம் என்ற அனைத்து வேதனைகளைக் கடந்தும் நாற்பது ஆண்டுகளாக நீண்டது அந்தப் பயணம். பயணத்தை ஆரம்பித்த பலர் அதன் முடிவில் இல்லை. வழிநடத்திய மோயீசன் கூட வாக்களிக்கப்பட்ட பூமியில் நுளையவில்லை. தளர்வுகள், சோர்வுகள், பின்னடைவுகள் மத்தியிலும் அவர்கள் உறுதியோடு நடந்ததால் அவர்கள் அடிமைத்தனத்தைக் கடந்து போனார்கள். விடுதலை வாழ்வை வாக்களிக்கப்பட்ட பூமியிலே கண்டு அனுபவித்தார்கள். எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட பூமிக்கு அவர்கள் கடந்து போன அந்தக் கடப்பு அனுபவமானது இன்னுமொரு உயர் பரிமாண கடப்பு நிகழ்வுக்கு முன்னோடியாக அமைந்தது.

### உலக ஆட்சியிலிருந்து இறையாட்சிக்கு

இயேசு உலகில் அவதரித்த போது அவருடைய ஆளுமையால் ஆகர்சிக்கப்பட்டவர்கள் அவரிடம் மோயீசன் போன்ற ஒரு தலைமையை தாவீது போன்ற ஒரு தலைமையை எதிர்பார்த்தார்கள். அருள்மொழி பெற்ற ஒரு அரசராகத் தமக்கு இஸ்ராயேலில் யூதாவின் செங்கோலை மீட்டுத் தருவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் இயேசு வெறுமனே ஒரு 'உலக' அடிமைத்தனத்திலிருந்து ஒரு 'உலக' விடுதலைக்கு அழைத்துச் செல்ல தயாராக இருக்கவில்லை. ஏனெனில் இத்தகைய ஒரு விடுதலை மீண்டும் புதிய புதிய அடிமைத்தனங்களுக்கு இட்டுச் செல்வதை அவர் மிகவும் தெளிவாக அடையாளம் கண்டார். ஆகவே அவர் இந்த உலகில் காணப்பட்ட அனைத்து அரசியல், சமூக, சமய, பொருளாதாரக் கட்டுமானங்களையும் வேரோட்டமாக மாற்ற வேண்டும் என்று எண்ணினார். உலகின் கட்டமைப்புக்கள் அனைத்திலும் தீமை புரையோடிப் போயிருப்பதை அவர் துல்லியமாக உணர்ந்து கொண்டார். ஆகவே இந்த உலகின் தீமையின் வடிவங்கள் அனைத்தையும் வேரோட்டமாக நிராகரித்து ஒரு மாற்று வாழ்க்கை முறையை வடிவமைக்க அவர் தம்மையே அர்ப்பணித்தார். இம்மாற்று வாழ்க்கை முறைக்கு அவர் இறையாட்சி என்று பெயரிட்டார்.

### சாவிலிருந்து வாழ்வுக்கு

சிலுவைக் கொலையின் மூலம் இயேசுவின் இறையாட்சி முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால் இயேசுவோ சிலுவை மரணத்தைக் கூட தனது இறையாட்சியின் வழியிலே எதிர்கொண்டதன் மூலம்; அன்பு வழியிலே எதிர்கொண்டதன் மூலம் சாவிலிருந்து வாழ்வுக்கு கடந்து போகின்றார். அவருடைய இந்த வாழ்வுக்கான கடப்பையே நாங்கள் உயிர்ப்பு என்று கொண்டாடுகின்றோம். இந்த உயிர்ப்பின் அனுபவம் அவருடைய சீடர்களிடையே ஒரு புதிய எழுச்சியைக் கொடுத்தது. இதோ ஏற்கனவே உங்களிடையே உள்ளது என்று இயேசு கூறிய அந்த இறையாட்சிச் சமூகத்தை வாழவும் பரப்பவும் முனைப்புக்கொள்கிறார்கள். "இனி ஆணென்றுமில்லை பெண் என்றும் இல்லை, யூதன் என்றும் இல்லை, கிரேக்கர் என்றும் இல்லை, அடிமை என்றும் இல்லை, உரிமைக் குடிமகன் என்றும் இல்லை கிறிஸ்துவில் அனைவரும் சகோதரர்களே'' என்ற உறுதிப்பாட்டோடு அவர்கள் இறையாட்சிச் சமூகங்களை கட்டி எழுப்புகிறார்கள். இந்த இறையாட்சியைக் கட்டியமைக்கும் பணியில் தங்கள் தலைவர் இயேசுவைப் போலவே பாடுகள் படவும், ஏன் மரணிக்கவும் அவர்கள் தயாராகின்றார்கள். இவ்வாறு தாங்களும் சாவிலிருந்து வாழ்வுக்கு கடந்து போகக் கற்றுக் கொள்கிறார்கள்.

### தொடரும் அழைப்பு

இயேசுவின் காலத்தில் இருந்ததை விட உலக ஆட்சியை நிலைநாட்ட முயலும் ஆதிக்க சக்திகளின் பிடி இன்று இன்னும் அதிகரிக்கின்றது. இவர்களால் விழிப்பு நிலைக்கு தள்ளப்படும் மக்களின் அவலம் பெருகி இருக்கிறது. ஆகவே இறையாட்சிக்கான அவசியமும் அதிகரித்திருக்கின்றது. எல்லாத் தரப்பினரையும் இறையாட்சிக்காக மனம்மாற அழைத்து அந்த பயணத்திலே சாவிலிருந்து வாழ்வுக்கு கடந்து போக உயிர்த்த இயேசு அழைப்பு விடுத்தபடியே இருக்கின்றர்.

பொய்மையிலிருந்து உண்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், சாவிலிருந்து வாழ்வுக்கும், இயேசுவோடு கடந்து செல்ல நாம் தயாரா? அப்படியானால் அவர் வழங்கும் சாந்தி, சமாதானம், அமைதி நம்மிடம் தங்கும்.

**அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்.**

## சொல்ல முடியா துயரங்களை சுமந்து நிற்கும் தமிழ் மக்களுக்கு உயிர்த்த இயேசுவின் இறையாசீர் நிறைவாகக் கிடைக்கட்டும்

### யாழ்.ஆயரின் ஈஸ்ரர் செய்தி

வருடா வருடம் கொண்டாடப்படும் ஈஸ்ரர் பண்டிகை கிறிஸ்தவர்களுக்கு முக்கிய திருநாளாகும். ஆண்டவராகிய கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடும் நத்தார் விழா உலக திருவிழாவாக கொண்டாடப்பட்டாலும் கிறிஸ்தவ மக்களின் ஆன்ம வாழ்வில் ஈஸ்ரர் பண்டிகையே முதன்மை பெறுகிறது. இதை பாஸ்கா பண்டிகை புனித வாரம் என்றும் உயிர்த்த ஞாயிறு என்றும் அழைக்கின்றோம்.

அனைத்துலக மக்களின் பாவ இருளை அகற்ற இறைமகன் கிறிஸ்து தமது பாடுகள், சிலுவை, மரணம், உயிர்ப்பின் வழியாக மீட்பை பெற்றுக் கொடுத்தார். இனி நாம் பாவத்துயரில் மரித்து அவரோடு கல்லறையில் புதைக்கப்பட்டால் புதுவாழ்வுக்குள் உயிர் பெறுகின்றோம் என பவுல் அப்போஸ்தலர் வாக்கு பண்ணுகிறார். "கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை.'' [உரோ 6:8].

எனவே இப் புனித பண்டிகைக்கு தயா செய்ய நாற்பது நாள்களைக் கொண்ட தவக்காலம் அனுசரிக்கப்பட்டு, குருத்தோலைப் பவனியோடு புனித வாரம் ஆரம்பமாகிறது. பாடுகளின்றி பட்டம் இல்லை, கோதுமை மணி நிலத்தில் வீழ்ந்து மடிந்தால் ஒழிய பலன் இல்லை.

மனித வாழ்வு பல்வேறு துன்பம் என்ற நெருப்பின் ஊடாக பயணித்துத்தான் நிறைவு எய்த முடியும். மனிதர் அனைவருக்காகவும் துன்புற்ற இயேசுவுடன் நாமும் ஒன்றித்துள்ளோம். வன்னிப் பரப்பில் கொடிய யுத்தத்தின் மத்தியில் துவண்டு துடிக்கும் மக்களினதும், தமது உயிரை கையில் பிடித்துக் கொண்டு பாதுகாப்பான இடத்தை தேடி ஓடி வந்து முகாம்களில் வாழும் மக்களினதும் அன்றாட துன்பத்தில் ஒன்றிணைவோம். எமது சுயநல மறுப்பினாலும் எமது பகிர்தலினாலும் எம்மை நாம் அவர்களுடன் அடையாளப்படுத்துவோம்.

எமது நாட்டைப் போன்று நீண்டகால போராட்டத்தில் சிக்கி அல்லுற்ற அங்கோலா நாட்டிற்கு கடந்த வாரம் விஜயம் செய்த எமது பரிசுத்த தந்தை ஏறக்குறைய ஒரு லட்சம் மக்களுக்கு திருப்பலி ஒப்புக்கொடுத்தபோது உயிர்த்த ஆண்டவரின் வல்லமை எவ்வித பிரிவினைகளையும் பழி வாங்கும் மனப்பான்மையும் மரணத்தின் அவலத்தில் வெற்றி கொள்ளும் என்று உரைத்தார். இச்செய்தி எமக்கு நம்பிக்கை தருவதாக அமைகிறது.

சொல்லமுடியாத துயரங்களை சுமந்து நிற்கும் தமிழ் மக்களிற்கு உயிர்த்த இயேசுவின் புதுவாழ்வும் இறையாசியும் நிறைவாக கிடைப்பதாக.

பேரருட் திரு.
**இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.**

## அதிகாரத்தையும் வல்லமையையும் வெற்றிகொண்டது கிறிஸ்துவின் உயிர்ப்பு

எந்நாளும், ஒடுக்கத்திலும், துன்பத்திலும், சுதந்திரம் சமத்துவம் அற்ற நிலையிலும் வாழும் நமக்கு நீதி, உரிமை, சுதந்திரம், சமத்துவம் அடங்கிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஆண்டவர் வகுத்த வழியும் பாதையுமே சிலுவை. அதுவே வெற்றி அளிக்கும். வெற்றியின் பிரஸ்தாபத்தை மறுபடியும் கொண்டாட ஈஸ்ரர் பண்டிகை நமக்கு ஒரு வாய்ப்பாகும்.

ஆண்டவரின் உயிர்த்தெழுதல் ஒரு வெற்றி. மரணத்தின் மேல் அடைந்த இவ்வெற்றி அதன் எல்லா அம்சங்களிலும் விரிவான வெற்றியாகிய கடவுளுக்கு எதிர்த்து நிற்கும் யாவற்றின் மேலும் கொண்ட வெற்றி.

பாவம், மரணம், பிசாசு ஆகியவை பிரிக்கமுடியாதபடி ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டு கிடக்கின்றன. அவைகள் எல்லாவற்றின் மேலும் இல்லாமல் ஒன்றின்மேல் மட்டும் வெற்றியடைவது கூடாதகாரியம். ஒன்றின்மேல் அடையும் வெற்றி மற்றதின் மேலும் கொள்ளும் வெற்றியே. எனவே எம் பெருமானின் உயிர்த்தெழுதல் முதலாவதாகவும், முனைப்பாகவும் தீய சக்திமேல் கொண்ட வெற்றியை நிறைவேற்றுவதாகும். அது ஆண்டவர் செய்து முடித்த பெரும் பணிக்கொரு சான்றாக விளங்குகின்றது. ஜீவகாலம் முழுவதும் அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை செய்யும் பணியே அப்பெரும்பணி. கிறிஸ்து பெருமானின் உயிர்ப்பு எல்லா அதிகாரத்திற்கும் வல்லமைக்கும் மேலாகக் கிறிஸ்து உன்னதங்களில் வீற்றிருக்கச் செய்த வல்லமையின் மகாமேன்மையான மகத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

ஆகவே, அன்பார்ந்த இறைமக்களே, இன்று நமக்கு தேவை நீதி, சமத்துவம், சுதந்திரம், சமாதானம் இவை யாவும் இறையரசின் விழுமியங்கள். இவற்றை ஆண்டவர் நிலைநாட்ட தெரிந்து கொண்ட வழி இடுக்கம், துன்பம் சகிப்பு நீடிய பொறுமை, நேர்மை ஆகிய சிலுவையின் வழி, இதுவே வெற்றியைத் தரும். இத் தகைய வாழ்வை நாம் எல்லோரும் கடைப்பிடிக்க ஆண்டவர் தெய்வீக வல்லமையை ஈந்து அருள் புரிவாராக.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சமாதானமும், மகிழ்ச்சியும், நம்பிக்கையும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

**எஸ்.கே.கதிர்காமர்,** குருமுதல்வர்,
இலங்கை மெதடிஸ்த திருச்சபை, யாழ்ப்பாணம்.

## விளையாட்டு நிகழ்வுகள்

வேலணை, ஏப்.12

வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் வி.அருளானந்தம் பிரதம விருந்தினராகவும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204-167)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் ஹொக்கிப் போட்டியின் இறுதி ஆட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக உடற் கல்வி அணி மோதும்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணியை எதிர்த்து யாழ்.ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதும். (50-86)

## 'உடைந்த உள்ளங்கள் உயிர்க்கட்டும்'

*உலகினை மீட்ட உத்தமன் இயேசு*
*பாவவினை நீக்கி உயிர்த்தார் அல்லேலூயா!*
*மகிழ்வுடன் ஆர்ப்பரிப்போம் ஆராதிப்போம்*
*மகிமை நிறை வாழ்வில் பங்கேற்போம் அல்லேலூயா!*

*உத்தமன் இயேசுவின் உயிர்ப்பு*
*உலகிலர் எமக்கு உன்னத நம்பிக்கையே!*
*உண்மையில் நாமும் ஓர்நாள் உயிர்பெறவே*
*உறுதிதரும் ஒப்பற்ற வாழ்வின் மகிமையே!*

*மானிட உலகில் மரணங்கள் - இன்று*
*மலிந்திட்ட பொருளாகின்றன மாண்பிழந்து*
*மனுக்குலமோ அதன் பொருள் உணராது*
*வலிந்தே வன்முறைகளில் வாழ்கின்றதே*

*உயிர்ப்பு எமக்கு உறுதிதரும் வாழ்வினாலும்*
*உயிர்க்க வேண்டும் உடைந்திட்ட உள்ளங்கள்*
*உயிர்வாழ மண்ணில்லை பொருளில்லை உறவில்லை*
*உயிர்தரும் உணவு உண்ணவே கரங்களில்லை*

*மாண்பற்ற போரின் கோரப்பிடியால் வன்னியில்*
*மரணிக்கும் மனிதங்களின் நிலையை எண்ணினால்*
*மறுகணமே நாமும் மரணித்திடுவோம் அதிர்வினால்*
*மறுக்கின்றனரே உண்மையுள்ள மனித அவலங்களை*

*பெற்றவர் காண பிள்ளைகள் மடியும் பரிதாபம்*
*உற்ற உறவுகளும் உதவிட முடியா நிலை அங்கு*
*பெற்ற வெற்றிதான் உண்மையென்ற தம்பட்டத்தினால்*
*கற்ற மனிதரையும் ஏமாற்றும் கலியுகமன்றோ*

*கைகள் இல்லை கால்கள் இல்லை கருணையில்லை என்று*
*ஏங்கும் உள்ளங்கள் உயிர்ப்பது எப்போது?*
*பிள்ளை இல்லை பெற்றோர் இல்லை பிறப்பின் பயனேது என்று*
*கலங்கும் உள்ளங்கள் உயிர்ப்பது எப்போது?*

*உயிர்தப்பி வந்தபோதும் தங்கும் முகாம்களில் உரிமையில்லை*
*உயிருக்காய் போராடும் உறவுகளை மீட்பாருமில்லை*
*உயிர்க்க முடியாது உடைந்திட்ட மனங்களை காப்பாருமில்லை*
*உயிரைத் தாங்கி ஊனர்களாய் வாழ்வோரைப் பார்ப்பாருமில்லை*

*உலகிலர் உயிர்காக்க பாடுகள் மரணம் ஏற்ற உத்தமனே*
*பலமிழந்த நாமும் ஏந்துகின்றோம் கரங்களை உம்மிடமே*
*உளமிழந்து உயிரிழந்து உரிமையிழந்திட்ட எம்மவரை*
*உறுதியுள்ள உம் வல்லமையால் உயிர்ப்பித்தருள்வாயே.*

**எஸ்.மேரி** (இளவாலை).

## கிறிஸ்துவின் உயிர்ப்பின் மூலம் நிரந்தர அமைதி கிடைக்கட்டும்

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வாழ்வின் கொண்டாட்டம், இயேசுவின் மரணத்தினால் எருசலேமில் அமைதியில்லா அமைதி காணப்பட்டது. 3ஆம் நாள் அவர் உயிர்த்தெழுந்ததினால் சிலுவை அரசன் சிங்காசனம் ஏறினார் என்ற நிச்சயமும் உண்டானது.

கிறிஸ்து பிறப்பு "அன்பின் திருநாள்'' என்றால், உயிர்த்தெழுதல் "வாழ்வில் திருநாள்'' என்று சொல்லலாம். "பயப்படாதிருங்கள்'' என்பது பிறப்பின் செய்தி. "உங்களுக்கு சமாதானம்'' என்ற உயிர்ப்பின் செய்தி நம்பிக்கையின் முழுமையைத் தருகின்றது. பிறப்பு ஒரு சரித்திரம் என்றால் உயிர்ப்பு வாழ்வின் ''நம்பிக்கை'' என்று சொன்னால் மிகையாகாது.

அன்று ஸ்திரிகள் கல்லறையின் இடத்தில் சென்று அவரைக் காணோமே... அவரை வைத்த இடமும் எமக்கு தெரியவில்லையே என்று கலங்கி அழுதார்கள், வேதனைப்பட்டார்கள். ஆனால் இன்றும் எம்மவர்கள் அதே சூழலில் அவ்விதமான பாதிப்பிலும், பயத்திலும் உறவுகளைக் காணாதவர்களாக, காணாத உறவுகளை கல்லறையின் இடத்தில் தேடுகிறவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

காலச்சூழல் வேறுபட்டாலும் பாதிப்புக்களும், நிகழ்வுகளும் ஒன்றே. ஆனாலும் உயிர்த்த ஆண்டவர் பேசிய முதல் வார்த்தை யாதாயின் "ஸ்திரியே ஏன் அழுகிறாய்?'' என்று வினாவியதே மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் அவர் அறிவிக்கிறார். அதனை ஏற்று நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. நமது மரணம் எங்கே இருப்பதாய் தோன்றுகிறதோ அங்கே இரட்சகர் இருக்கிறார். நம்பிக்கையின் இறுதிநிலை எங்கு உள்ளதோ அங்கே கனிகொடுத்தல் ஆரம்பமாகின்றது. இருள் எங்கே அடர்ந்திருக்கிறதோ அங்கே ஒருபோதும் மங்காத ஒளியின் பிரகாசம் வெளிப்படுகிறது.

நாம் கடந்து போனவற்றையும், நேற்றைய தினத்தையும் நினைத்துக் கொண்டிருந்தால் அவரது கல்லறையின் அண்டையில் மட்டும் அவரைத் தொழுது கொள்கின்றவர்களாகக் காணப்படுவோம். ஆனால் அவரோ விண்ணிலும், மண்ணிலும் எனக்குள்ளும், உங்களுக்குள்ளும் இருப்பதையும், வாழ்வதையும் உணர்ந்தால் உயிரோடிருக்கும் கிறிஸ்துவை கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கும்.

"அவர் உயிர்த்தெழுந்தார். அவர் இங்கே இல்லை. இதோ அவரை வைத்த இடம். உங்களுக்கு முன்னே கலிலேயாவிற்கு போகிறார். அவர் உங்களுக்கு சொன்னபடியே அங்கே அவரைக் காண்பீர்கள்'' -[மாற்கு 16:6-7]

உங்கள் யாவருக்கும் இந்நன்நாளில் வாழ்வும், சமாதானமும் நிறைவாக கிடைக்க மூவொரு கடவுளின் நாமத்தினாலே வாழ்த்துகின்றேன்.

அதிவண.கலாநிதி டி.எஸ்.தியாகராஜா, பேராயர் / தலைவர்,
தென்னிந்திய திருச்சபை, அமெரிக்கன் இலங்கை மிஷன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ உலகுக்குச் சவால் விடுக்கும் புற்றுநோய்

**புற்றுநோய் குறித்து சென்றவாரம் வெளியாகிய கட்டுரையின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது**

இலங்கையில் பெண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் மார்பகப் புற்றுநோயே முதலிடம் வகிக்கின்றது.

**எச்சரிக்கை அறிகுறிகள்**

(Warning Symptoms)

*மார்பகத்தில் நோ அற்ற கட்டிகள் தோன்றுதல்.

மார்பகத்தின் பருமன் அசாதாரணமாக அதிகரித்தல்.

*ஒரு மார்பகம் அசாதாரணமாக மறு மார்பகத்திலும் பதிவாக இருத்தல்.

*முலைக் காம்பிலிருந்து ஏதாவது திர

சுகநலம்

வம் அல்லது குருதிக் கசிவு ஏற்படல்.

*முலைக்காம்பு உருமாறியிருத்தல் அல்லது உள்வாங்கப்பட்டிருத்தல்.

*மார்பகத்தின் தோலில் சுருக்கங்கள் ஏற்படுதல் (Puckering ).

*மார்பகத்தின் தோலில் குழிகள் காணப்படுதல்(Dimpling ).

*மார்பகத்தின் தோல் தோடம்பழத் தோல் அமைப்பாக மாறுதல் (Peau-de-Orange ).

*கமக்கட்டுப் பகுதியில் நெறிகள் போடப்பட்டிருத்தல்.

*கையில் அசாதாரணமான வீக்கம் ஏற்படுதல் (Oedema of the upperlimb).

**மார்பகப் புற்றுநோயின் பிந்திய நிலையில்......**

பொதுவாக உடலில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள்.

*உடல் மெலிதல்.

*சோர்வு.

*இலகுவில் களைப்படைதல்.

*பசியின்மை.

**ஆபத்திற்குரியவர்கள் யார்?**

*பெண்கள் ஆண்களை விட அதிகளவில் (99 வீதம் பெண்கள், ஒரு வீதம் ஆண்கள்).

நெருங்கிய உறவினரிடையே மார்பகப் புற்று நோய் உடையவர்கள்.

*அதிகளவில் ஈஸ்ரோஜன்

> உலக சுகாதார ஸ்தாபன மும் யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மற்றும் யாழ்.பல்கலைக்கழக சமூக மருத்துவப் பிரிவு ஆகியன இணைந்து வழங்கும் வழிகாட்டுதல்கள் இவை.

(Oestrogen ) ஓமோன் சுரப்பு வரக்கூடியவர்கள்.

-மிகக் குறைந்த வயதில் பூப்படைதல்- 12 வயதிற்குள்.

-கூடிய வயதில் மாதவிடாய் நிறுத்தல் - 55 வயதிற்குப் பின்.

-பிந்திய வயதில் முதல் கர்ப்பம் தரிப்பவர்கள் -30 வயதிற்குப் பின்.

-குழந்தை இல்லாதவர்கள்.

-தாய்ப் பாலூட்டாதவர்கள்.

*அதிக உடற்பருமன் உடையவர்கள்.

*புகைப்பிடித்தல், மதுபானம் அருந்தும் பழக்கம் உடையவர்கள்.

*அதிக கொழுப்பு உணவை உட்கொள்பவர்கள்.

**சுயமார்புப் பரிசோதனை**

ஒவ்வொரு மாதமும் மாதப் போக்கின் பின் ஒரு வாரத்தினுள் அல்லது மாதப் போக்கு நின்றவர்கள் மாதத்தின் குறித்த ஒரு நாளில் குளிக்கும் போதே/ கண்ணாடியின் முன் நின்றோ/ படுத்திருந்தவாறோ சுயமார்புப் பரிசோதனை செய்யலாம்.

**1) பார்வை மூலம் பரிசோதித்தல்**

(Inspection )

கண்ணாடியின் முன் நின்று கைகளைத் தொங்க விட்டபடியும், மேலே உயர்த்தியவாறும், இடுப்பில் வைத்தும் மார்பகங்களில் மேலே கூறிய எச்சரிக்கை அறிகுறிகள் உள்ளனவா என அவதானித்தல்.

**2)தொடுகை மூலம் பரிசோதித்தல்**

(Palpation )

*வலது மார்பை இடது கையாலும், இடது மார்பை வலது கையாலும்.

*2 ஆம்,3ஆம், 4 ஆம் விரல் தட்டைப் பகுதியால் சோதித்தல்.

*விரல்களால் கிள்ளிச் சோதிக்க வேண்டாம். அப்போது சாதாரண மார்பகங்களில் கூட கட்டி உள்ளது போல் சந்தேகம் தரலாம்.

*வெளிப்பகுதியில் இருந்து முலைக் காம்மை நோக்கி வட்ட வடிவில் சோதித் தல்.



*கமக்கட்டுப் பகுதியையும் சோதிக்க வும்.

*இறுதியில் முலைக்காம்மை அழுத்தி ஏதாவது திரவக்கசிவு உள்ளதா என அவதானிக்க வும்.

*ஏதாவது அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடுங்கள்.

**கருப்பையில் கழுத்துப் புற்றுநோய்**

கருப்பையின் கீழ்ப்பகுதியையும் பிறப்பு கால்வாயையும் (யோனி மடல்) இணைக்கும் பகுதியான கருப்பைக் கழுத்துப் பகுதியின் சுவர்களில் ஏற்படும் மாற்றம் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாகும்.

பெண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் 13 வீதமானவை கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாகும். ஆரம்ப நிலையி லேயே அடையாளம் காணப்பட்டால் சிகிச்சை மூலம் 100 வீதம் குணமாக்கப் படக் கூடியது.

**கருப்பைக் கழுத்து புற்றுநோயை ஏற்படுத்துவதற்கு ஏதுவான காரணிகள்**

பாலியல் நடத்தைகள்

1.பாலியல் உடலுறவைக் குறைந்த வயதில் ஆரம்பித்தல்.

2.ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் உடலுறவு கொள்ளல்.

3. ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் தொடர்புடைய ஆணுடன் உடலுறவு கொள்ளல்.

4.இளவயதிலேயே உடலுறவை ஆரம்பித்த ஆண்/கருப்பைக் கழுத்து புற்றுநோயுள்ளவருடன் தொடர்புடைய ஆணுடன் உடலுறவு கொள்ளுதல்.

5.நீண்டகாலம் வாய் மூலமான கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளுதல்.

6.முன் தோலினை நீக்கம் செய்யாத ஆணுடன் உடலுறவு கொள்ளுதல்.

7.சில வைரஸ் தொற்றுக்கள்.

-பாலுண்ணியை ஏற்படுத்தும் வைரஸ் (HPV)

-ஹேப்பிஸ் வைரஸ்

**பிற காரணிகள்**

1.புகைத்தல்

-ஒரு நாளைக்கு புகைக்கும் சிகரெட்டுக்களின் எண்ணிக்கை.

-புகைப்பிடிக்கும் வருடங்களின் எண்ணிக்கை.

2.நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு.

3.எயிட்ஸ் நோயாளிகள்.

4.உறுப்பு மாற்றுச் சிகிச்சை செய்தவர்கள்.

5.விட்டமின் ஏ குறைபாடு.

6. அதிக எண்ணிக்கையான குழந்தைப் பேறு.

**கருப்பைக் கழுத்து புற்றுநோய்க்கான அறிகுறிகள்**

*மாதவிடாய் நின்ற பின்னர் ஏற்படும் இரத்தப்போக்கு.

*மாதவிடாய்க்கிடையான இரத்தப் போக்கு.

*உடலுறவின் பின்னான இரத்தப் போக்கு.

*அதிகளவான துர்நாற்றத்துடன் கூடிய வெள்ளைபடுதல். (தொடரும்)

**நோய் முற்றிய நிலையில்**

*கால் வீக்கம். *கால், இடுப்பு வலி.

*சிறு நீருடனான இரத்தப் போக்கு.

*மலத்துடனான இரத்தப்போக்கு.

*வயிற்றோட்டம்.

(வளரும்)

## புகைபிடிக்கும் பழக்கம் மனிதனின் ஆயுளைச் சுருங்கச் செய்யும்

# யாழ்.மாணவர்களின் கல்விநிலை பாதிப்புற மாலை சூடும் கலாசாரமும் காரணமாகிறது!

தற்போது பரவி வரும் மாலை சூடும் கலாசாரத்தால் கல்வி நிர்வாகங்கள் கலங்கிப் போகின்ற நிலை உருவாகி வருவதாகப் பலர் கருதுகிறார்கள்.

'ஆசிரியர்கள் பலர் தம் கடமையைச் சரிவரச் செய்யாமையால் எமது மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருவதாகப் பிரதேசப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டுகின்றன. அதனால் ஆசிரியர்கள் அனைவரும் ஒழுங்காகக் கற்பித்தல் அவசியமாகும்' மேற்படி கருத்து, வெளித்தோற்றப்பாட்டில் கல்வித்துறையைச் சாராத பிரமுகர் ஒருவரின் வேண்டுகோளாகத் தோன்றினாலும் குடாநாட்டின் கல்வி நிர்வாக அலகின் உயர்கல்வி அதிகாரி ஒருவரினால் அண்மையில் நகரின் பிரபல ஆண்கள் பாடசாலையொன்றில் நிகழ்ந்த அவ்வதிகாரியின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச ஆசிரியர்களுக்கான கழக நிகழ்வொன்றில் வைத்து ஆற்றப்பட்ட உரையின் ஒரு பகுதியாகும்.

பிரதேச கல்வி நிர்வாக அதிகாரிகளாகத் தற்போதைய கட்டமைப்பில் திகழும் வலய உயர் அதிகாரிகளது பிரதான கடமை தமது நிர்வாகப் பரப்பில் வரும் அனைத்து பாடசாலைகளையும் அவற்றின் பௌதீக மனிதவளங்களை முகாமை செய்வதன் மூலம் பரிபாலித்து உச்சப் பயனான மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை அதாவது பல்கலைக்கழக புகுமுக சித்தி வீதத்தை அதிகரித்தல் எனலாம். இந்த நீண்ட பொறிமுறைக்குள் பலவிதமான நிகழ்ச்சித் திட்டங்கள் அடங்கியிருக்கின்றன. பாடசாலைகளுக்கான அதிரடி விஜயங்கள் மூலம் அதிபர், ஆசிரியர்களது செயற்பாடுகள் பற்றிய கணிப்புகள், பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்கள் மூலம் பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளை அறிதல், பொதுப் பரீட்சைகளின் மாணவர்களின் அடைவுமட்டத்தை ஆய்வு செய்து உயர்ச்சி வீழ்ச்சிக்கான உண்மையான காரணங்களைக் கண்டறிந்து எதிர்காலத்தில் அத்தகைய நிலைமைகளைத் தவிர்தல், பாடசாலையில் நிகழும் கல்விக்குப் புறம்பான செயற்பாடுகள், இணைந்த கல்விக்குரிய செயற்பாடுகள் எனக் கல்வித் திணைக்கள சொல் அகராதிக்குள் வரும் விளையாட்டுப் போட்டிகள், கண்காட்சிகள், அரங்கச் செயற்பாடுகள், மொழித் தினங்கள் என இன்னோரன்ன செயற்பாடுகளில் பங்குகொண்டு அவை நடக்கும் முறைகளை மதிப்பிட்டு ஆலோசனை வழங்குவதன் மூலம் வளர்த்தெடுத்து அவற்றின் இலக்கினை அடைகின்றனவா என மதிப்பீடு செய்தல் என எத்தனையோ பணிகள் இருக்கின்றன.

மேற்கூறப்பட்ட கடமைப்பட்டியல் விடயங்கள் எல்லாம் ஓரளவு ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்பட்டால் பத்திரிகைகளைப் பார்த்துத்தான் மாணவர் கல்வித் தரம் வீழ்ச்சியடைவதையோ அன்றேல் கடமை தவறியோருக்கு வேண்டுகோள் பாணியில் உரையாற்றவேண்டிய தேவையிருக்காது என்பதே இங்கே நாம் உய்த்துணரக்கூடிய விடயங்களாகும். ஆனால் அந்த அதிகாரியின் கருதுகோளிற்கு உதவியாக இருக்கின்ற பத்திரிகைகளை வைத்துப் பார்க்கும் போது மேலே சொன்ன கடமைப் பட்டியலில் கடைசியாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளில் பங்குகொள்ளலே முக்கிய கடப்பாடாக அதிகாரிகள் கடைப்பிடிப்பது போல ஒரு தோற்றப்பாடு

### கோணல் லங்கள்

அண்மைக் காலமாக அதிகமாகத் தெரிகின்றமையை பெற்றோர்கள் அவதானிக்கவே செய் கின்றனர். அதுவும், அவற்றின் உச்சப்பயன் மாலைமரியாதை ஏற்றலும் அணிவித்தவருக்குப் பதவிப் பாதுகாப்பும் பதவியுயர்வும் மறுநாள் பத்திரிகைகளுக்கு இரட்டை நிரல் செய்திக்கேற்ற பேச்சுகளும் மாலைசூடிய படங்களும் மட்டுமே இலக்காக உள்ளமை போல் தெரிவிக்கின்றது; அவையே மிஞ்சுகின்றன.

மாலையிட்டு மரியாதை செய்தல் எம் தமிழர் பண்பு. அதை ஏற்றுக்கொள்வதும் எமது பெருந்தன்மையான செயல்தான். ஆனால் அரச வழிப்பதவி ஒன்றினால் உயர்நிலையிலிருப்பவருக்கு அவரின் கட்டுப்பாட்டில் இருக்கும் கீழ்நிலை அதிகாரிகளால் வழங்கப்படும் இத்தகைய கௌரவிப்புகளால் அவர்களின் நிர்வாக வரம்புகள் தகர்க்கப்படுவதுடன் இத்தகைய நிகழ்வுகளுக்காகப் பல நாள்களாக இடம்பெறும் பத்திரிகைகளால் மாணவர்களின் கல்வி செயற்பாடுக்குரிய நேரங்களும் விழுங்கப்படுகின்றன என்பது எதிர்மறைப் பயன்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இத்தகைய மாலைக் கலாசாரம் பரவி வருகின்றமை வருந்தத்தக்க விடயமாகும். தென்பகுதியில் இத்தகைய மரியாதைகளை ஏற்பவர்கள் நிச்சயமாக அரசியல்வாதிகளாக மட்டும் தான் இருப்பர். ஆனால் அரசியல்வாதிகள் தமது படங்களும் சொற்களும் பத்திரிகைகளுக்கு வருவதைத் தமது தொழிலின் ஒரு பகுதியாகவே கொண்டுள்ளனர். மேற்சொன்ன அதிகாரிகளோ தமது தொழிலாகவே வரித்துக்கொண்டு விட்டனரோ என்று சந்தேகப்படும் அளவுக்குப் பெருகியுள்ளது. இது வேதனையைத் தூண்டுவதாகவே அமைகிறது. இந்த நிலையிலேயே எமது பிரதேச அண்மைக் கால கல்வி வீழ்ச்சியைச் செய்தியாகவே அறிந்துகொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தென்படுகின்றது போலும். முன்னைய யாழ்.மாவட்டக் கல்விப்புல உயர் அதிகாரிகள் பலர் தமது பிரதேசத்தில் எந்த மூலையில் எந்த மாணவனுக்கு என்ன பெறுபேறு வரும் என அறிந்தவர்களாகக் காணப்பட்டமையும் ஆசிரியர்களது வாண்மைத்திறனை தனித்தனியே அறிந்துவைத்திருந்தமையையும் அக்கால வயோதிப அதிபர் ஒருவர் பெருமையுடன் நினைவு கூருகிறார். அத்தோடு அக்கல்வி அதிகாரிகள் குறித்து ஒருவித பயபக்தி அதிபர், ஆசிரியர்களுக்கு இருந்தமையையும் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆனால் விருந்தோம்பலும் விழக்களுக்காக மட்டும் பாடசாலை விஜயம் என எல்லாம் இப்போது மாறிப்போனதுதான் இன்றைய வீழ்ச்சி நிலைகளுக்கு காரணம் எனவும் அந்த மூத்த அதிபர் ஆதங்கப் படுகின்றார்.

அத்தோடு இக்கால கல்வி அதிகாரிகள், பாடசாலை பற்றி பெற்றோர்கள் விமர்சிக்கக் கூடாதெனவும், அவர்கள் வெறுமனே பாடசாலை உதவியாளர்களாக மட்டும் தான் விளங்க வேண்டும் என்ற தோரணையில் பல இடங்களிலும் பேசி வருவதும் ஆரோக்கியமான கல்வி நிர்வாகத்திற்கு உகந்ததல்ல என்பதே பலரின் கருத்தாகும்.

மேலும் பொதுப் பரீட்சையின் பின்னரான சரியான ஆய்வுகள் இவ்வதிகாரிகளினால் பிரதேசத்தில் சரியான முறையில் மேற்கொள்ளப்படாமையும் கண்ணை மூடிக்கொண்டு தங்கள் மேலிட நடவடிக்கைகளைச் சரியென நிலை நிறுத்துவதும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது எடுத்துக்காட்டாக அண்மையில் க.பொ.த சாதாரணதர மாணவர்களின் கணிதபாட வினாத்தாள் இலக்கு மாறிச் சென்றபோது, நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் மாணவர்களின் பரீட்சையின் பின்னரான விமர்சனக் கணிப்புக்கள் அப்பிரதேச கல்வி அதிகாரிகளூடாக தலைமைத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டதாகவும் ஆனால் எமது பிரதேசத்திலிருந்து எத்தகைய தகவல்களும் பரீட்சைத் திணைக்களத்தை வந்தடையவில்லை என்றும் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த மாகாண மட்ட மிக உயர் அதிகாரி ஒருவர் தமது கருத்தைப் பின் வருமாறு பகிர்ந்து கொண்டார். தேவைப்படும் இடமாற்றங்களைச் செய்து நிர்வாகக் கட்டமைப்பை மீள் நிர்மாணம் செய்ய விளையும்போது, அவர்களின் கீழ் உள்ள செல்வாக்குள்ள மூத்த பணியாளர்களை நாடி அவர்கள் மூலமாக முட்டுக்கட்டை போடுகின்றனர். இந்நிலையில் தமக்காக தடுத்த மூத்த பணியாளர்களை அவர்கள் தவறிழைக்கும்போது இந்த அதிகாரிகள் எவ்வாறு தட்டிக் கேட்க முடியும்?

யதார்த்தமாகச் சிந்தித்தால் நிர்வாக ஒழுங்கமைப்பின் பிரகாரம் இடமாற்றம் புத்தாக்கத்தைத் தருவதுடன் ஊழலைத் தடுக்கும் என்பது வெளிப்படை. எனவே ''தமது அபிமானிகளை'' விட்டு சில அடிகள் நகர்வதன் மூலம் சிறந்த நிர்வாக அமைப்பைத் தோற்றுவித்து எங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை முன்னேற்றலாம் என்பதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்தல் நல்லது.

சுருங்கச் சொன்னால் அடிக்கடி பாடசாலைகளுக்குச் செல்வதும் நேரடிக் களப் பரிசோதனைகளை மேற்கொள்ள லும் மாலை மரியாதைகளுக்கு விலை போவதனால் அதிபர் ஆசிரியர் உள்ளிட் டோரின் அசமந்தத்தைத் தட்டிக் கேட்க முடியாத நிலைமையைத் தவிர்ப்பதும் பெற்றோர்களை அழைத்து புறந்தள்ளி கருத்தறிதலும் தங்கள் மேலதிகாரிகளின் எண்ணங்கள் செயல்களையெல்லாம் கதிரைக்கஞ்சி கண்ணை மூடிக்கொண்டு வரவேற்பதனை நிறுத்துவதுமே யாழ்ப்பாணக் கல்வி வீழ்ச்சியை சரிசெய்யவல்ல நிர்வாக வழிகளாகும்.

- சத்தியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும்

காலம்: 18.04.2009, 19.04.2009
இடம்: லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பல தசாப்தங்களின் பின் சுதேச-பரம்பரை சித்த ஆயுள்வேத யாழ்ப்பாணத்திற்குரிய செகராஜசேகரம் பரராஜசேகரம் முதலிய மருத்துவ முறைகளை வளர்ப்பதற்கும் இம்முறைகளை இணைத்து போதனை செய்யும் இலங்கையிலேயே முதன்முதல் உருவான தமிழர்களின் சொத்தான லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியை முன்னேற்றுவதற்கும் வடமாகாண சுதேச மருத்துவர்களின் உரிமைகளையும் தேவைகளையும் இனங்கண்டு நிறைவேற்றுவதற்காகவும் நல்ல பொதுநோக்கத்திற்காக பேதங்களையும் ,பகைமைகளையும் மறந்து பரம்பரை சித்த ஆயுள்வேத வைத்தியர்களையும் வைத்தியர்களின் வாரிசுகளையும் இதில் நாட்டமுள்ள நலன் விரும்பிகளையும் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியுடன் தொடர்பு பட்ட அனைவரையும் ஓரணியில் திரட்டுவதற்காகவும் இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம் மாநாட்டுக்கும் கண்காட்சிக்கு (மூலிகைகள், ஓலைச் சுவடிகள், நூல்கள் மருந்துகள் உட்பட) தங்களது பங்களிப்பு (பிரேரணை/ கண்காட்சிப் பொருள்/ அனுசரணை) வழங்குவது பற்றி 16.04.2009) இற்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு வேண்டுவதோடு, குடும்ப சீட பரம்பரையாக சுதேச மருத்துவம் (மணி, மாந்திரீகம், ஔசத) மருத்துவம் செய்து வருபவர்களும் உடனடியாக தொடர்புகொள்ள வேண்டுகின்றோம்.

கௌரவ செயலாளர் ஜெ.ஜெயலன்
வட இலங்கை சுதேச மருத்துவ சபை.

தொடர்பு முகவரி:
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021459 1572
0772487044
0775594147

## யா/மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2009

தலைவர்: திருமதி சி.அனந்தசயனன்
இடம்: பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம்: 26.04.2009 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி

கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு சகல பழைய மாணவர்களும் இப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்கு பங்காற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: * பிரேரணைகள் எதுவும் இருப்பின் 18.04.2009 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பிவைக்கவும்.
* ஆயுட்கால உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய பழைய மாணவர்கள் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

பழைய மாணவர் சங்கம்,
யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
க.அஜந்தன், த.தயானந்தன்,
இணைச்செயலாளர்கள்

## வீடு விற்பனைக்கு

பண்டத்தரிப்பு சந்திக்கு அண்மையில் சண்டிலிப்பாய் வீதியில் வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
0112364077, 0773-777875

(சி/557842)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், கனடா பிரஜா உரிமையும் 28 வயது பூசம் 2 ஆம் பாகத்தை உடையவருக்கு மணமகள் தேவை.
தொ.பே:- 0777066487

## பபு ரெக்ஸ்ரைல்ஸ்

சிறுவர்களுக்கான பஞ்சாபி, மற்றும் பெண்களுக்கான பஞ்சாபி, சாறி, ஸ்கேட் அன் பிளவுஸ் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: பபு ரெக்ஸ்ரைல்ஸ்
கம்பஸ் லேன், (கம்பஸ் வங்கி முன்பாக).

## விற்பனைக்கு

தூய இன டல்மேஸன் ஆண் நாய் 8 மாதம் நிரம்பியது விற்பனைக் குண்டு.

பூச்சி நீக்கப்பட்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டது. 0718175819

## தேவை

மணமக்களே www.thaalee.com என்கிற wabsite இல் பல்லாயிரக்கணக்கான மணமக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப்படங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மைநாடினால் நாங்கள் ஆவன செய்வோம். உங்களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்துகொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு போன்: 2523127, 2520619. Address: 45/1, மாதம் பிட்டிய வீதி, கொழும்பு - 15.

## நெஞ்சம் மறக்குமா.....! 18 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

தோற்றம்
12
★
05
★
1932



மறைவு
26
★
03
★
2009

### திருமதி இரத்தினம்மா துரை (இணுவில் மணியக்கா)

கோண்டாவில் திருநகரில் பிறந்தீர்கள்...!
குதூகலமாய் இணுவில் மஞ்சத்தடியில் வாழ்ந்தீர்கள்
நீண்ட வரலாறு பேசிட நீள நினைந்தே
நிறைவான பிள்ளைகள் அறுவரைக் கண்டீர்கள்
ஆண்டவன் அருளாலே அறநெறி போற்றி
அவனி போற்றிட நீதியோடு வாழ்ந்தீர்கள்
வேண்டிய உதவிகள் பல புரிந்தீர்கள் அம்மா...!

கொட்டம்பனை ஞானவைரவரின் பக்தரானீர்கள்
கோயிலை இறை பணியால் அழகு செய்தீர்கள்
எவருக்கும் இல்லையென்னாது வாரி வழங்கினீர்கள்
திட்டமிட்ட பணிகளால் உயர்ந்து நின்றீர்கள்
திருவிழாக் காலமெல்லாம் திருப்பணி செய்தீர்கள்
அட்டதிக்கெல்லாம் உங்கள் காட்சியம்மா...!

*உங்கள் ஆத்மா ஆண்டவன் திருவடியில் சேர்ந்திட அஞ்சலிக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவுத்துயரால் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

30, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.
துளிர்கள் நிறுவனம்,
உத்தியோகத்தர்கள், பயிற்சியாளர்கள்.

## மரண அறிவித்தல்



### கனகசபை வசந்ததேவன்

தேவரையாளி, நெல்லியடி வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த கனகசபை வசந்த தேவன் நேற்று (11.04.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி பரமேஸ்வரியின் பாசமிகு கணவராவார்.

அவரது இறுதிக் கிரியைகள் இன்று (12.04.2009) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'உமா இல்லம்', தேவரையாளி,
நெல்லியடி வடக்கு.
தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் தம்பிராசா (மன்னார் எக்ஸ்பிறஸ்)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணன் றைஸ்மில் மற்றும் மன்னார் எக்ஸ்பிறஸ் உரிமையாளருமான நாகலிங்கம் தம்பிராசா 08.04.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான குமாரு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சுப்பிரமணியம் (அமரர்) மற்றும் நல்லம்மா, நாகம்மா (அமரர்), இராசையா (அமரர்), பொன்னுத்துரை, தர்மலிங்கம் (அமரர்) மற்றும் வைத்திலிங்கம், தியாகராசா, தங்கராசா (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாதுசா (இந்தியா), பகீரதன், சிறிதரன் (அமரர்), தபேந்திரன் (அமரர்) மற்றும் சிவேஸ்வரன், வாசுகி (கனடா), சுகந்தி (கனடா), ஜெயந்தி (கனடா), சுதர்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தநடராஜா (சுவிஸ்), ஸ்ரீரஜனி, சறோஜினி, ஜெகதீஸ்வரன் (கனடா), சிவனேஸ்வரலிங்கம் (கனடா), சிவம் (கனடா), ஜெயவதனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், கௌசல்யா, மாயவன், தர்சன், சயந்தன், கோபிராம், கீர்த்திகன், ஜனகன், சீவகன், சிறிராம், சோபிதா, கல்பனா, விஷ்ணு, லக்ஷ்மி, மீனாட்சி, வர்ணன், அக்ஷயன், திசான், சுரம்ஜா, ஓவியா, மாதுமை ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ்.வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஆலயத்தை அண்டி சித்த மருத்துவசாலை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வளாகத்தில் சித்த மருத்துவ வைத்திய நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது நல்லதொரு முயற்சி. வரவேற்கப்பட வேண்டியது.

ஆலயத்தில் வைத்தியசாலையா? அது பொருத்தமானதா? தொடர்ந்து இயங்கக் கூடியதா?-இப்படியும் இன்னும் பலவாறாகவும் பலரது மனங்களில் கேள்வியெழும். பார்த்ததும் படித்ததும் இது ஒரு புதிய வகையினதாகத் தோன்றும்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற தமிழ் மூதாட்டி ஔவைப்பிராட்டியின் நன்நெறி வாசகம் இன்றைய மாணவர்களில் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை. இன்றைய தமிழ்பாடப் புத்தகங்களில் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஔவையாரின் அரும்பெரும் பாடல்களில் உள்ள சில வரிகளும் சேர்க்கப்பட்டிருப்பதால் முற்றாகக் குறை காண்பதற்கில்லை. தமிழ் மூதாட்டி ஔவை போன்றோரின் அரிய கருத்துக்களை தேடித் தேடித்தான் கண்டறிய வேண்டும்.

கோயில்களே தமிழர்களின் வாழ்க்கையில் பல்துறைசார் வாழ்வியல் மூலநிலையமாக தொன்று தொட்டு விளங்கின. கோயில்களை அண்டியே, அவற்றைச் சார்ந்தே கல்விச்சாலைகள், வைத்திய சாலைகள், கலைச்சாலைகள் அமைந்திருந்தன. (அதனாலேயே ஔவை, கோயில் இல்லாத ஊரில் குடியிருப்பது முழுமை பெறாத வாழ்க்கை என்று கூறியிருக்கிறார்) அந்தநிலைமை இப்போது இல்லை. ஆலயங்கள் தனித்துப் போயின. நாகரிக வளர்ச்சி, வாழ்க்கை முறையில் மாற்றங்கள் என்று காலத்தின் சுழற்சியில் அவை அருகிப்போய் விட்டன. எனினும் குடாநாட்டில் சில ஆலயங்களை அண்டிப் பாடசாலைகளும், சனசமூக நிலையங்களும், கலைச்சாலைகளும் சில தொழிற்சாலைகளும் இருப்பதனை குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆனால் வைத்தியசாலைகளை ஆலய நிர்வாகங்களே நிர்வகித்து நடத்துவது இதுவரை வெளிப்படையாகத் தெரியவில்லை.

இந்தவகையில், சமயப்பணியுடன் சமூகப் பணிகளையும் ஆற்றிவரும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம், இன்னொரு முன்மாதிரியை இயற்றி இருக்கிறது. அதுவே அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள சித்த மருத்துவ வைத்திய சாலையாகும்.

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சமயப்பணிகளுடன் சமாந்தரமாக சமூகப்பணிகளை ஆற்றி குடாநாட்டின் ஏனைய ஆலயங்களுக்கு முன்உதாரணமாக விளங்கியவர். சமயம், மனிதனுடன்- சமூகத்துடன்- இணைந்தது என்ற தத்துவத்தை நடைமுறையில், செயலில் காட்டிய பெருந்தகை. அந்த வகையில் குடாநாட்டில் ஒரு புதிய சகாப்தத்தை அவர் தோற்றுவித்தார்.

துர்க்கையம்மன் ஆலயத்தின் சமூகப் பணிகளுக்கு அடையாளங்களாக மகளிர் இல்லம், அன்னையர் இல்லம், அன்னசத்திரம், சைவத்தமிழ் ஆய்வு நிலையம், அறநெறிப்பாடசாலை, யாத்திரிகர் விடுதி என்பன விளங்குகின்றன. இவை சிவத்தமிழ் செல்வியின் சிந்தனையின் வழிவந்த செயல் வடிவங்கள்.

அந்தவரிசையில் இப்போது ஆலய வளாகத்தில் ஆயுள்காக்கும் சித்த மருத்துவ வைத்தியசாலை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மேலும் ஒருபடி உயர்ந்து நிற்கிறது. அன்னையின் சிந்தனைக்கும் ஆளுமைக்கும் மேலும் கலசம் வைப்பதாக புதிய சமூகப்பணியைக் கொள்ளலாம்.

மனிதன் உயிர்வாழ்வதற்கு, உணவுக்கு அடுத்துத் தேவைப்படுவது மருந்து. அந்த மருந்துக்கு வழிசொல்வது மருத்துவம். தமிழர்களின் பண்டைய வைத்திய முறையான சித்த மருத்துவம் ஆலயங்களை அண்டியே, அருகிலேயே மன்னர் ஆட்சிக் காலங்களின் போது வளர்ந்தன. தமிழரசுகள் சிறந்திருந்த காலத்தில் சித்த மருத்துவம் பெரு வளர்ச்சி கண்டிருந்தது.

மேலைத்தேச வைத்தியமுறைகள் அறிமுகமாவதற்கு முன்னர், சித்தமருத்துவர்கள் உயிர் காக்கும் தெய்வங்களுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்பட்டவர்கள்; சமூகப்பணியாளர்களாகப் போற்றப்பட்டவர்கள்.

அந்தநிலை இன்று இல்லை; அருகிப்போய்விட்டது. சித்த மருத்துவத்திற்கு புத்துயிர் அளிக்கும் முயற்சிக்கு முன்னோடியாக துர்க்கை அம்மன் ஆலயம் விளங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

மூலிகைகள் சித்த மருத்துவத்தின் உயிர்நாடிகள் - பிரதான மூலங்கள். துர்க்காதேவி ஆலயத்திற்கு அருகேமூலிகைத்தோட்டம் அமைக்கும் திட்டம் ஒன்றையும் ஆலய நிர்வாகத்தினர் வகுத்துள்ளனர்.

ஏனைய ஆலயங்களும், மனிதனின் சுகவாழ்வுக்கு உதவவல்ல மிகச்சிறந்த தமிழர்களின் பாரம்பரிய வேதங்களில் ஒன்றான சித்தவைத்தியத் துறையை வளர்க்கவும் அதன்மூலம் சமூகப்பணியாற்றவும் முன்வரவேண்டும்.

### இறைமையையும் பொருளாதாரத்தையும் பாதிக்காத வகையில்

# நாணய நிதியத்தின் எந்த நிபந்தனையையும் ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு தயாராம்

கொழும்பு, ஏப். 12

இலங்கைக்குக் கடன் உதவி வழங்கும் பொருட்டு சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் இறைமைக்கும் தேசிய பொருளாதாரத்திற்கும் பாதிப்பில்லாதவாறு நிபந்தனைகளை விதித்தால் அவற்றுக்கு கட்டுப்படத் தாம் தயார் என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஹொரணையில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக பிரதமர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் - சிங்கள புதுவருடத்திற்கு முன் புலிப் பயங்கரவாதத்தை இந்நாட்டிலிருந்து நாம் முற்றாக ஒழித்து விடுவோம். எமது படையினர் நன்கு திட்டமிட்டபடி இறுதி இலக்கை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றனர்.

பிறக்கப்போகும் இந்தப் புதுவருடம் எமது நாட்டுக்குப் புது யுகத்தைக் கொண்டுவரப் போகின்றது. எல்லா மக்களும் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட நிலையில் மிக நிம்மதியாக வாழ்வர்.

நாம் ஒருபோதும் பயங்கரவாதிகளிடம் மண்டியிட மாட்டோம். அவர்களைத்தான் நாம் மண்டியிட வைப்போம். இந்தப் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கையில் நாம் முழு மூச்சாக ஈடுபட்டு வருகின்றபோதிலும் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாத்துக் கொண்டே வருகின்றோம்.

இப்போது நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கேட்டிருப்பது பற்றியே அனைவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர். நாம் நிபந்தனைகளுக்கு உட்பட்டே இக்கடனைப் பெறப் போகிறோம் என்று கூறுகின்றனர். நாம் ஒருபோதும் அப்படிச் செய்யப்போவதில்லை.

நாட்டின் இறைமைக்கும் தேசிய பொருளாதாரத்திற்கும் பாதிப்பில்லாதவாறு நாணய நிதியம் நிபந்தனைகளை விதித்தால் அவற்றுக்கு நாம் கட்டுப்படுவோம். அதில் எந்தப் பிரச்சினையுமில்லை.

சமுர்த்தி நிவாரணத்தை அகற்றுமாறும் உரமானியத்தை அகற்றுமாறும் எமக்கு நிபந்தனை விடுத்து நாட்டின் இறைமைக்கு ஆபத்து விளைவிக்க முற்பட்டால் நாம் அவற்றுக்கு ஒருபோதும் உடன்பட மாட்டோம் - என்றார்.

(அ-சி)

## இலங்கை வங்கியில் இன்றும் ஏலவிற்பனை

யாழ்ப்பாணம், ஏப்.12

இலங்கை வங்கியில் அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகளின் ஏலவிற்பனை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் இலங்கை வங்கியின் யாழ்.மேற்தரக் கிளையில் இடம்பெறவுள்ளது.

மழை காரணமாக நேற்று இடைநிறுத்தப்பட்ட இந்த ஏலவிற்பனை இன்றும் தொடர்ந்து இடம்பெறவுள்ளது என்று இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் தெரிவித்துள்ளார்.

(அ-02)

## நெதர்லாந்தும் போர்நிறுத்தத்தை கோரி இங்குள்ள தூதுவர் ஊடாக வலியுறுத்து

கொழும்பு, ஏப்.8

இலங்கை அரசு உனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என, நெதர்லாந்து அரசு தனது நாட்டிலுள்ள இலங்கைத் தூதுவர் ஊடாக அழைப்பு விடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து இணையத்தளத்தில் வெளியான தகவல்கள் வருமாறு:-

படுகொலைகளை நிறுத்துமாறும், உடனடியாக போரை நிறுத்துமாறும் கோரி நெதர்லாந்து நாடாளுமன்ற முன்றலில் தமிழ் மாணவர்கள் மற்றும் மக்களின் போராட்டம் தொடர்ந்து வருகின்றது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலையும், மாலையும் இரு தடவைகள் இலங்கைத் தூதுவரை நாடாளுமன்றத்திற்கு அழைத்த நெதர்லாந்து அரசு இந்த அழைப்பினை விடுத்தது.

பாடசாலைக்குச் செல்லாது மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால், அவர்களை அழைத்த நெதர்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வன்னி நிலை பற்றிக் கேட்டறிந்துள்ளனர்.

பொருளாதார ரீதியாகவும், ஐரோப்பிய ஒன்றியத்தினூடாகவும் அழுத்தங்களை தாங்கள் தொடர்ந்து கொடுத்துக்கொ[illegible]டிருக்கின்றனர் என அவர்கள் கூற[illegible]ர்.

தொழி[illegible] கட்சி நாடாளுமன்ற உறுப்பின[illegible] மார்த்தைன பன்டாம் சுமார் ஒரு [illegible] நேரமாக போராட்டத்தில் ஈடுப[illegible] [illegible]மிழர்களுடன் கலந்துரையாடியுள்[illegible].

மாண[illegible]கள் சக்தி மாபெரும் சக்தி என்பதை உணர்ந்து அனைத்து மாணவர்களுமே போராட்டக்களத்தில் குதிக்குமாறு போராட்டத்தில் ஈடுபடுகின்ற மாணவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## ஈழத்தமிழர்களின் போராட்டத்தை தடுப்பதற்கு கனடா அரசு மறுப்பு

### இலங்கையின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஏப்ரல் 12

கனடாவின் ஒட்டாவா நகரில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டங்களை நிறுத்துமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் லோரஸ் கனோண் நிராகரித்துள்ளார்.

''கனடாவில் மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். நாங்கள் ஜனநாயக நாட்டில் வாழ்கின்றோம். மக்கள் தமது கருத்துக்களை கரிசனைகளை வெளிப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளனர்'' என்று அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் யுத்த நிறுத்தத்தை கொண்டு வருமாறு ஐக்கிய நாடுகள் சபைக்கு கனடா அழுத்தம் கொடுத்து வருவதாகவும் கனோஸ் தெரிவித்துள்ளார்

''நாங்கள் உடனடியாக யுத்த நிறுத்தத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம். மோதல் குறித்து நாங்கள் கவலையடைந்துள்ளோம். குறிப்பாக மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள பொது மக்கள் பற்றி பெரிதும் கவலையடைந்துள்ளோம்'' எனவும் கனடாவின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(அ-சி)

## யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களின் திருப்பாடுகளின் ஆற்றுகை இன்று

வட்டுக்கோட்டை, ஏப்ரல் 12

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களினால் கிறிஸ்தவர்களின் திருநாள்களில் ஒன்றான ஈஸ்ரர் தினச் சிறப்பு நிகழ்வாக துயரத்தின் விளிம்பிலும் இறை நம்பிக்கையோடு வாழமுடியும் என்னும் பக்தி பூர்வமான சடங்கு நிலைப்பட்ட திருப்பாடுகளில் நாடக ஆற்றுகை இன்று மாலை 4 மணிக்கு கல்லூரியின் ஓட்லி மண்டபத்தில் மேடையேற்றப்படுகிறது.

கல்லூரியின் நாடக ஆசிரியர் ஏ.சி.பிரான்சிஸின் நெறிப்படுத்தலில் மேடையேறும் இந் நிகழ்வுக்கு கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தலைமைதாங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் 80 மாணவர்கள் இந்த ஆற்றுகையில் பங்குபற்றுகின்றனர்.

கடந்த நான்கு வருடங்களாக ஈஸ்ரர்தின மாலை நேர நிகழ்வாக திருப்பாடுகளின் காட்சிகளை மாணவர்கள் மேடையேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(50-06)

### நாளை

| | |
|---|---|
| பங்குனி 31 | 13.04.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மு.இ. 11.27வரை |
| நட்சத்திரம்: | அனுசம் |
| | மு.இ. 08.54வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

## லண்டன் பொருட்காட்சிக்கு தமிழ் இலக்கிய ஏட்டுச் சுவடிகளை அனுப்பிய வைமன் கதிரவேற்பிள்[illegible]ள

**14.04.1904 வைமன் கரவேற்பிள்ளை காலமானார்.**

14.04.1904 அன்று தமிழறிஞரும் பத்திரிகையாளருமான வைமன் கதிவேற்பிள்ளை தனது எண்பதாவது வயதில் காலமானார்.

ஆரம்பத்தில் சட்டத்தரணியாகவும் பின்னர் நீதிவானாகவும் கடமையாற்றிய வைமன் கதிரவேற்பிள்ளை சிறந்த சமூக சேவையாளர் ஆவார்.

1853 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி முதல் Literary Mirror என்ற மாத சஞ்சிகையை வைமன் கதிரவேற்பிள்ளை வெளியிட்டார்.

இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!

கல்வி, விஞ்ஞானம், இலக்கியம் போன்ற விடயங்களில் தரமான ஆக்கங்களை தாங்கிவெளிவந்தமையால் Literary Mirror அந்தக் காலத்தில் இலங்கையில் வாழ்ந்த ஐரோப்பியர்களிடையேயும் இலங்கையர்களிடையேயும் பெருவரவேற்பைப் பெற்றிருந்தது.

Patriot பத்திரிகையின் ஆசிரியர் பீடத்திலும் பங்களிப்புச் செய்துள்ள வைமன் கதிரவேற்பிள்ளை, தமிழ் அகராதி ஒன்றையும் எமக்கு வழங்கியுள்ளார்.

1886 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் லண்டனில் நடைபெற்ற காலனித்துவ நாடுகளின் பொருள் கண்காட்சிக்கு (Colonial exhibition) தமிழ் இலக்கிய [illegible] சுவடிகளை இங்கிருந்து அனுப்பிவைத்தார் வைமன் கதிரவேற்பிள்ளை.

- தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது

லண்டன்,ஏப்.12

இலங்கையில் உடனடிப் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி கனடா, டென்மார்க் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் தமிழர்கள் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

உண்ணாவிரதம் இருக்கும் புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச்செல்கிறது.

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் மாநிலத்தில் நேற்று சனிக்கிழமை மூன்று தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

சுதா தணபாலசிங்கம், மதிவண்ணன் சின்னத்துரை, பிரதீபன் இராஜதுரை ஆகிய மூன்று பேருமே போர் நிறுத்தம் உட்பட நான்கு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கனடாவில்

கனடாவில் ஒட்டாவா நகரில் கனேடிய நாடாளுமன்ற முன்றிலில் நான்காவது நாளாக நேற்றும் மக்கள் ஆயிரக்கணக்கில் ஒன்று திரண்டு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.அங்கு உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள ஐவரும் நேற்று இரண்டாவது நாளாகவும் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

டென்மார்க்கின் தலைநகர் கொப்பன்ஹெகனில் வெளிவிவகார அமைச்சின் சதுக்கத்தில் தொடர் போராட்டம் நடத்தி வரும் தமிழர்களில் ஏழு பேரும் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தையும் ஆரம்பித்துள்ளனர்.

லண்டன், நோர்வே மற்றும் பிரான்ஸ் போன்ற இடங்களிலும் தமிழர்கள் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி வருகின்றமை தெரிந்ததே. (அ-2)

## வசந்த எழுச்சி விழா இறுதிக் கட்டப் போட்டிகள் மழை காரணமாக ஒத்திவைப்பு

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் யாழ். மாவட்ட வசந்த எழுச்சிவிழா மாபெரும் விளையாட்டுப் போட்டிகளின் இறுதிக்கட்ட போட்டிகள் பெரும் மழை காரணமாக எதிர்வரும் மே மாதம் 15 ஆம் , 16 ஆம் , 17 ஆம் திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ளன.

யாழ்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்துள்ள சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்துக் கான விசேட செயலணித் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் வசந்த எழுச்சி விழா அமைப்புக் குழுவின் பிரதிநிதிகள், யாழ். அரச அதிபர், யாழ. மாநகர சபை ஆணையாளர் உட்பட பலருடன் நடத்திய கலந்துரையாடலில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் மேற்படி போட்டிகளின் இறுதிக்கட்டப் போட்டிகள் இடம்பெற வுள்ளதுடன் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்ச்சிகளும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். (அ)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையான பொதுமக்கள் சிறைப்பிடிக்கப் பட்டுள்ளனர்- என்று இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் பௌச்சரிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்போது இணைத்தலைமை நாடுகள் புலிகளிடம் 'மக்களை சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதை பிரதி அமைச்சர் பௌச்சர் மீளவும் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார் - என்று இங்குள்ள இலங்கைத் தூதரகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

## மழையின் மத்தியி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன் மற்றும் அம்பலவன் பொக்கணை ஆகிய பகுதிகள் மீது இன்று சனிக்கிழமை காலை தொடக்கம் இரவு வரை படையினர் ஆட்லெறி எறிகணை, மோட்டார் மற்றும் தொலைதூர துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக மரணமானோரைச் புதைக்க முடியாமலும் ப்டுகாயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாமலும் உள்ளதாகக் கூறப்பட்டது. (அ-சி)

## தென்மராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

அந்த நிலையங்களில் சுமார் 700 குடும்பங்கள் இவ்வாறு இடம்மாற்றப்பட்டுள்ளன. இதே காலநிலை நீடிக்கும் பட்சத்தில் மிருசுவில் நலன்புரி நிலையத்தின் ஒரு பகுதியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடம்மாற்றப்பட வேண்டிய நிலை ஏற்படலாம். பாடசாலை விடுமுறை முடிவடைவதற்குள் நலன்புரி நிலையங்கள் தொடர்பில் மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு புதுவருடத்தை முன்னிட்டு விசேட பொங்கல் நடத்தப்படவுள்ளது. 'ஈஸ்ரர்' தினத்தை முன்னிட்டு நலன்புரி நிலையத்திலுள்ள மக்களுக்கு கத்தோலிக்க நிறுவனம் ஒன்றினால் புத்தாடைகள் வழங்கப்பட்டுள்ளன.

நலன்புரி நிலையத்திலுள்ள மக்களை அவர்களின் உறவினர்கள் சந்திப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள் என. உறவினர்கள் சந்திப்பதற்கு உரிய இடங்கள் நலன்புரி முகாம்களுக்கு அருகில் ஒதுக்கப்படும்.

இப்படி அரச அதிபர் தெரிவித்தார். (அ-2-111)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 8.30 மணி வரை 90.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், காலை முதல் பிற்பகல் 5.30 மணி வரை மொத்தம் 83.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும் வானிலை அவதான நிலைய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக் குப் பின்னர் மழை வீழ்ச்சி குறையலாம் என்று எதிர் பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இடியுடன் கூடிய மழை பெய்வதனால் பொதுமக்கள் இடிமின்னல் தாக்கங்களில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-4)

## பிரிட்டனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் பேரணி தொடங்கி 4 மணிநேரம் கழிந்த பின்னரும் பேரணி செல்லும் வீதியில் மக்கள் பெருவெள்ளமாக குவிந்த வண்ணம் இருந்தனர்.

குறிப்பாக பேரணி தொடங்கிய இடம் தொடக்கம் அது முடிவடையும் இடம் வரை வீதிகளில் மக்கள் நிரம்பி வழிவதால் பேரணி மெதுவாகவே நகர்ந்து வருகின்றது.

''போர் நிறுத்தத்தினை உடன் நடைமுறைப் படுத்து!''; ''சிறிலங்கா அரசுக்கான உதவிகளை உடன் நிறுத்த வேண்டும்''; ''பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மருந்து மற்றும் உணவுப்பொருள்கள் சென்றடைய வேண்டும்'': '' பிரித்தானிய அரசே புலிகள் மீதான தடையை நீக்கு''; ''பொதுநலவாய நாடுகளில் இருந்து சிறிலங்காவை உடன டியாக நீக்கு''; ''புலிகள் பயங்கரவாத இயக்கம் அல்ல; அவர்கள் ஒரு விடுதலை இயக்கம்''; ''உலக வங்கியே சிறிலங்காவுக்கு பண உதவி செய்யாதே போன்ற முழக்கங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் எழுப்பினர்.

பேரணியில் வெளிநாட்டவர்கள் பலர் கலந்து கொண்டுள்ளதுடன் பிரித்தானியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டு தமிழ் மக்களுக்கான தமது ஆதரவினை தெரிவித்தனர். (அ-சி)

## இந்திய வெளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் விடுத்த வேண்டு கோளின் பேரில் சந்திப்பது என்று தற்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன் கூறினார்.

இந்தியா விட்ட தவறுகளைச் சுட்டிக் காட்ட வேண்டிய தேவை இருப்பதால் இச் சந்திப்பில் கலந்து கொள்ள வேண்டும் என புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தனர். இதற்கு மதிப்பளிக்கும் வகையிலேயே ஏற்கனவே எடுத்த முடிவைப் பரிசீலனை செய்ய வேண்டி ஏற்பட் டதாகவும் பீ.அரியநேத்திரன் குறிப்பிட்டார்.

சிவ்சங்கர் மேனனுடான சந்திப்பில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளமாட்டார் கள்.தற்போது இந்தியாவில் தங்கியுள்ள இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக் கலநாதன் ஆகியோரே இச்சந்திப்பில் கலந்து கொள்வார்கள்'' என்றும் அவர் கூறினார்.

இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வெள்ளிக்கிழமை இந்தியா பயணமானார். (அ)

## பயணிகள் கப்பல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரயாணம் செய்யவிருப்போர் பயண ஆயத்தங்களுடன் இன்று மு.ப.11 மணிக்குமுன்னதாக யாழ். ரயில் நிலையப் பகுதிக்கு சென்று பார்க்கலாம் என்று யாழ். சிவில் நிர்வாகப் பகுதியினர் அறிவுறுத்தினர். (அ-2)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டில்களில் தங்கியிருந்த 200 பாதிக்கப் பட்ட குடும்பங்களை மனிக்பாம் கதிர் காமர் நிவாரண கிராமத்திற்கு இடம் மாற்று வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மழை காரணமாக கொட்டில்களில் நீர் புகுந்ததையடுத்து, அங்கு தங்கியிருந்த குடும்பங்கள் அனைத்தும் பாடசாலை மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டனர். அங்கு இடநெருக்கடி காரணமாக அந்த மக்கள் இரவு முழுதும் படுப்பதற்கு இடமின்றி நிலத்தில் நெருக்கமாக அமர்ந்த வண்ணமே இரவைக் கழித்ததாகத் தெரி விக்கப்படுகினறது.

இதேபோன்று சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகாவித் தியாலயம் ஆகியவற்றிலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

மழை காரணமாக, இடம்பெயர்ந்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரிய நிலைமை தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபர் தலைமையில் அதிகாரிகள் கூடி விரிவாக நேற்று ஆராய்ந்துள்ளனர். (அ-சி)

## பிரிட்டனில் உண்ணா......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையகத்தில் நடைபெறும் சந்திப்பில் கலந்துகொள்ள ஏற்பாடு செய் யப்படுவதாக வழங்கப்பட்ட உறுதி மொழியை அடுத்தே சிவதர்சன் சிவகுமாரின் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

எனினும் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்வார் என்று பிரித்தானிய தமிழ் இளையோர் அமைப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் இடத்திற்குவெள்ளிக்கிழமை இரவு சென்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினார்.

இச்சந்திப்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பிற்கு செல்ல வேண்டிய காரணத்தால் சிவதர்சன் சிவகுமாரின் உண்ணாநிலைப் போராட்டத்தை இடைநிறுத்துமாறு பிரித்தானிய அரசின் சார்பில் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பிரித்தானிய அரசாங்கத்தால் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று இலங்கைப் பிரச்சினை குறித்து உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள் ளதாகவும் இக்குழுவினருடன் பிரித்தா னிய தமிழ் இளையோர் இணைந்து செயற்படுமாறும் அவர் கேட்டிருந்தார்.


# RAM COMMUNICATION

**No.6, Hospital Road, Jaffna**

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருவது: எமது தினசரி விமான சேவை (Manoj express) ஊடாக யாழில் இருந்து கொழும்புக்கும் மற்றும் வெளிநாடுகளுக்கும் உடனடியாக பொதிகள், கடிதங்கள் என்பன பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படும்.

மற்றும் எமது இதர சேவை களாக மிகக் குறைந்த கட்டணங்களில் Inter net Browsing, Local Call, Inter Call, IDD, Leminating, Scanning, Typing, printing.

E.mail - ramcom2008@gmail.com
n.ramcom@yahoo.com.
Tel.: 021 222 2007, Fax- 021 222 8428


# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம்

(ஐயாக்கிளி)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம் (ஐயாக்கிளி) நேற்று (11.04.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற புவனேந்திரனின் (பழனி) அன்புச் சகோதரனும் சிவகுமார் (மினிபஸ் உரிமையாளர்-யாழ்.- தெல்லிப்பழை 62-6686), ஜெயக்குமார் (பிரான்ஸ்), நந்தினி(சுவிஸ்), நந்தகுமார் (பிரான்ஸ்), செல்வகுமாரி (சுவிஸ்), தருமகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(12.04.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
பா.சிவகுமார் (மகன்-
மினி பஸ் உரிமையாளர்
62-6686).


# மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971 இல் பிறந்த மொத்தக் கிரக பாவம் 33 உம் திருவோண நட்சத்திரமும் உடைய வெளியூரில் 15 வருடங்களுக்கு மேலாக Store keeper ஆகப் (நிரந்தரம்) பணி புரியும் மணமகனுக்கு பெற்றோர் அழகிய பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 060 221 7083, 077 3810520

கலை, வர்த்தகப் பிரிவுகள் A/L 2011

# லோகா அக்கடமி

எமது நிறுவனத்திற்கேயுரிய ஆசிரியர் குழாம்

| வர்த்தகப் பிரிவு | கலைப் பிரிவு |
|---|---|
| பொருளியல் -திரு. அருணன் | தமிழ் -திரு.நவநீதபிருள்ளன் |
| கணக்கியல்-திரு.சிவராசா | அளவையியல்-திரு.B.A.S.லோகா |
| வர்த்தகம் -திரு.சிவராசா | இ.நாகரிகம்-திரு.நவநீதபிருள்ளன் |
| பொது ஆங்கிலம்-திரு.ஞானாகரன் | புவியியல்-திரு.யோகேஸ் |

A/L 2011 பிரிவு II ஆரம்பம் - 11.04.2009

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

சட்டநாதர் சிவன்கோவிலடி, நல்லூர். நிர்வாகி.





# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை நவரத்தினராஜா

(ஓய்வுபெற்ற மின்சார சபை பொறியியலாளர், யாழ். மாநகர சபை)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நவரத்தினராஜா 09.04.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சூமாமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் (பெரிய சபா -புங்குடுதீவு 3) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரராஜசிங்கம், ராஜசேகரம், வசந்தமலர் ஆகியோரின் சகோதரனும் ராஜ்குமார் (UK), Dr.இந்திரநாத்(கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் தந்தையும் தேவா(UK), Dr.கவிதா (மகரகம வைத்தியசாலை) ஆகியோரின் மாமனும் தயானி, சச்சின் ஆகியோரின் பேரனும் சிறிகாந்தா,புஸ்பமலர், யோகேஸ்வரன், சர்வானந்தன், பங்கையற்செல்வி (செல்வி), காலஞ்சென்ற சபாராணி மற்றும் காந்தசொரூபன் ஆகியோரின் மைத்துனரும் ஐயம்பிள்ளை, தளையசிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.04.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

91/1A, தஞ்சி லேன்,
அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.